21 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P

Insurance Advisor

RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)



அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

To Join Our Brokerage / Fou your Real Estate Needs



Raja Mahendran, P.Eng.

Contact: 416.315.9397



நதி 21 பாலம் 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2011


# இலங்கை அதிபர் உரை கனேடிய பிரதமர் வெளிநடப்பு!

அடுத்த பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கையில் 2013 ஆம் ஆண்டு நடைபெற உள்ளது. அதற்கு முன்னர் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் ஒக்ரோபர் இறுதி வாரத்தில் அவுஸ்திரேலியாவில் உள்ள பேர்த் நகரில் கூடினர். பொதுநலவாய நாடுகளின் அமைப்பு 1949 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பொதுநலவாய நாடுகளை 2 பில்லியன் மக்களை கொண்ட 54 நாடுகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.



இலங்கை அதிபரை பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது கூட்டத்தில் உரையாற்ற அழைக்கும்போது கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் அக்கூட்டத்தை விட்டு வெளிநடப்பு செய்தார் என கனேடிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'Toronto Star' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கனேடிய பிரதமர் ஊடகவியலாளர்களுக்கு கூட்டம் முடிவடைந்த பின்னர் தெரிவிக்கையில் தனக்கு இலங்கை அதிபருடன் நேரடியாக பேச ஓரிரு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இலங்கை அதிபரின் பேச்சுக்கள் நம்பிக்கை தருவதாக (Reassuring) இருந்தன. ஆனால் எங்களது மனித உரிமைகள் தொடர்பான கரிசனை தொடர்பாக உண்மையில் ஏதும் முன்னேற்ற கரமான செயல் நடவடிக்கைகளை 2013 இல் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கு முன்னர் இலங்கை அதிபர் அமல்படுத்துவார் என்று எனக்கு இன்னமும் முற்று முழுதாக நம்பிக்கை வர இல்லை (Skeptical) என்றார்.

கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் இலங்கை மனித உரிமைகள் விடயத்தில் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் முன்னேற்றகரமான நடவடிக்கை எதுவும் எடுக்காவிட்டால் தான் இலங்கையில் 2013 இல் நடைபெறப்போகும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கு பற்றமாட்டேன் என ஏற்கெனவே கூறியிருந்தார். கனேடிய பிரதமரின் இந்த அறிவிப்பை கனடாவின் முக்கிய செய்தி ஊடகங்கள் வரவேற்றிருந்தன. ஸ்ரீபன் காப்பர் 2007 ஆம் ஆண்டிலும் பாக்கிஸ்தானின் அப்போதைய ஜெனரல் முஷ்ராவ் இன் இராணுவ அரசு ஜனநாயக வழிக்கு திரும்பும் வரையும் பாக்கிஸ்தானை பொதுநலவாய நாடுகளில் இருந்து விலக்கி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முற்றுமுழுதாக ஆதரித்தவர். பாக்கிஸ்தான் தற்போது ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் பிரதமராக இருந்த பிரையன் மல்ரோனி 1986 இல் தென் ஆபிரிக்காவின் நிறவெறி அரசு ஜனநாயக வழிக்கு திரும்பும் வரை அதற்கு எதிராக முற்றுமுழுதாக பொருளாதார தடை கொண்டுவர வேண்டும் என பிரசாரம் செய்தவர். தென் ஆபிரிக்கா இப்போது ஜனநாயக வழிக்கு வந்துள்ளது.

இம்முறை பேர்த்தில் கூடியுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பொதுநலவாய அமைப்பிற்கான ஒரு வரைபை (Commonwealth Charter) இக்கூட்டத்தில் அமல்படுத்துவதற்காக Eminent Persons Group (EPG) ஐ 2009 இல் தெரிவு செய்திருந்தார்கள். இத் தெரிவுக்குழு மனிதஉரிமை, ஜனநாயகம் சம்பந்தமாக பொதுநலவாய நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு வரைபை இக்கூட்டத்தில் சமர்ப்பிக்க தயாராக இருந்தது. இதைவிட இந்த தெரிவுக்குழு இந்த வரைபை பொதுநலவாய நாடுகளில் அமல்படுத்த Commissioner for Democracy என்ற ஒரு பதவியையும் உருவாக்க வேண்டும் என தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

ஆனால் பேர்த்தில் நடைபெற்ற பொதுநல வாய நாடுகளின் தலைவர்களுடைய கூட்டத்தில் இந்த வரைபை சமர்ப்பிக்கவோ அல்லது Commissioner for Democracy என்ற ஒரு பதவியை உருவாக்குவது பற்றி பேசவோ இலங்கை உட்பட ரினிடாட், ஷிம்பாவே, பாக்கிஸ்தான் மற்றும் தென் ஆபிரிக்கா போன்ற 15நாடுகள் விடவில்லை.

பொதுநலவாய நாடுகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமைத்த EPG என்ற இந்த தெரிவுக்குழுவில் 11 நாடுகளை சேர்ந்தவர்கள் அங்கம் வகித்திருந்தனர். இவர்கள் பொதுநலவாய நாடுகளில்


தொடர்ச்சி 02ஆம் பக்கம்






RBC Royal Bank®

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்

Great Options for all your Mortgage needs

• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்



Paskaran K. (Paski) Mortgage Specialist

416.569.3099 /416.288.9855

E-mail: paski.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு

Real Estate Broker



Cell: 416-262-4176

Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave. Suite 210, Toronto

*Independently owned and operated

Sales & LEASING

MARKVILLE TOYOTA





KUMAR JEGASOTHY

905.294.8100 & 416.798.7234

Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி <

8 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை

• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை




மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3 416.267.8221

3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE



DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD

DENTAL SURGEON

☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# இலங்கை...

நடைபெறும் மனித உரிமைகள் தொடர்பாக ஆராய்ந்தே இந்த பொதுநலவாய அமைப்பிற்கான வரைபை தயாரித்திருந்தார்கள். இவ்வரைபை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் சமர்ப்பிக்க முடியாமல் தடுக்கப்பட்டது பற்றி EPG தெரிவுக்குழுவின் தலைவரான முன்னாள் மலேசிய பிரதமர் Tun Abdullah Ahmad Badawi கனடாவின் பிரிதிநிதியான பழமைவாத கட்சியின் மேற்சபை உறுப்பினர் Hugh Segal மற்றும் பிரித்தானியாவின் உறுப்பினரான பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் Malcom Rifkind ஆகியோர் விசனமும் அதிருப்தியும் தெரிவித்துள்ளனர்.

இத்தலைவர்களுடைய கூட்டத்தில் EPG தெரிவுக்குழு, தயாரித்த இந்த பொதுநலவாய அமைப்பிற்கான வரைபை சமர்ப்பிக்கவும், பொதுநலவாய நாடுகளில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் சம்பந்தப்பட்டவற்றை மேற்பார்வை செய்ய என Commissioner for Democracy என்ற ஒரு பதவியை உருவாக்கவும் அவுஸ்திரேலியா, பிரித்தானியா, நியூசிலாந்து மற்றும் கனடா தீவிரமாக முயற்சித்தும் பலனளிக்கவில்லை. இப்பிரச்சினையில் தலையிட விரும்பாத பொருநலவாய நாடுகளின் மொத்த சனத்தொகையில் அரைவாசி மக்களை கொண்ட இந்திய நாட்டின் பிரதமர் மன்மோகன் சிங் தலைவர்களுடைய கூட்டத்திற்கே சமூகமளிக்கவில்லை.

இவ்வாறு தோல்வியில் முடிவடைந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர் களுடைய கூட்டத்தை பற்றி கேலி செய்யும் கனேடிய செய்தி ஊடகங்கள் எதிர்காலத்தில் பொதுநலவாய நாடுகள் என ஒரு அமைப்பு தேவையா என கேள்வி எழுப்பியுள்ளன. பொதுநலவாய நாடுகளின் கூட்டம் என்பது மதுபானம் அருந்தி, கிரிக்கெற் விளையாட்டு பற்றி கதைத்து மகாராணியுடன் சேர்ந்து நின்று படம் எடுப்பதற்கு மட்டும் தானா என CBC யில் அரசியல் விமர்சனம் செய்யும் Terry Milewski கேட்கிறார்.

எது எவ்வாறு இருப்பினும் இந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துவிட்டு சனிக்கிழமை (Oct. 29, 2011) நாடு திரும்புவதாக திட்டமிட்டு இருந்த கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர், இக்கூட்டம் எதிர்பார்த்தமாதிரி நடைபெறாததால் கூட்டம் முடியும் மட்டும் (ஞாயிற்றுக்கிழமை) அங்கேயே இருந்து தான் எடுத்த முயற்சிக்காக (பொதுநலவாய அமைப்பின் வரைபை சமர்ப்பித்தல், Commissioner for Democracy என்ற பதவியை உருவாக்குதல்) அயராது உழைத்தார் என்பது மிகவும் பாராட்டத்தக்கது.

## தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வோஷிங்டனில்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இரா.சம்பந்தன் தலைமையில், இலங்கை நிலவரம் குறித்து விவாதிக்க, அமெரிக்க அரசின் ராஜாங்கத் துறையின் அழைப்பின் பேரில் வாஷிங்டன் வந்து பேச்சுக்களை நடத்தியது. இச்சந்திப்புக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர், அக்டோபர் 26லிருந்து ராஜாங்கத்துறை அதிகாரிகளுடன் நிகழ்த்தியிருந்தனர்.

பல மூத்த அதிகாரிகளை இதுவரை சந்தித்திருப்பதாகத் தெரிவித்த சுரேஷ் பிரேமசந்திரன், இனிவரும் நாட்களில் மேலும் சில முக்கிய செனட்டர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க இருப்பதாகத் தெரிவித்தார். இதுவரை நடந்த சந்திப்புகளில், அமெரிக்க அதிகாரிகள், இலங்கையில் போருக்கு பின், நல்லிணக்கம் என்று அரசு வெளி உலகுக்குக் கூறினாலும், நடக்கும் நடப்புகள் அதற்கு நேர்மாறாக இருப்பதைப் பற்றி விவாதித்ததாகத் தெரிவித்தார்.

மேலும் அரசியல் தீர்வுத் திட்டத்தைப் பொறுத்தவரை, இலங்கை அரசு சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறதா என்பது குறித்தும் விவாதித்ததாக அவர் தெரிவித்தார். ஏற்கெனவே அமெரிக்கா, இலங்கை அரசு மீது அரசியல் தீர்வு குறித்து அழுத்தங்களை தந்து கொண்டிருக்கிறது என்று கூறிய சுரேஷ் பிரேமசந்திரன், ஆனால் இலங்கை அரசு இதை சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறதா என்பதுதான் சரியாகத் தெரியவில்லை என்றார்.

அமெரிக்காவின் அழுத்தம் மட்டும் போதாது, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மற்ற சர்வதேச சமூகத்தின் அழுத்தமும் ஒத்துழைப்பும் தேவை என்றார் அவர்.

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் சர்வதேசம் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுகின்றது. கனடா ஸ்காபறோ கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பெருமிதம். தற்போதைய சூழ்நிலையில் தாயகத் தமிழ் மக்களின் பிரச்சினை ஓர் உலகம் சார்ந்த பிரச்சினையாக கணிக்கப்படுகின்றது. அவர்கள் அந்த மண்ணில் படுகின்ற துன்பக் குரல் அல்லது அவர்கள் எழுப்புகின்ற அவலக் குரல் உலகின் காதுகளுக்கு கேட்கின்றது.



இதேவேளை தாயகத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினராகிய நாங்களும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் உங்களைப் போன்ற உறவுகளும் நடத்திவரும் பல்வேறு வகையான போராட்டங்களும் சந்திப்புக்களுமே தற்போது சர்வதேச அளவில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. எமது அவதானிப்பின்படி நமது ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் சர்வதேசம் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டுவருகின்றது" இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை இரவு கனடாவின் ஸ்காபுறோ நகரில் உள்ள பீற்றர் அன்ட் போல் மண்டபத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தின்போது உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அமெரிக்காவில் இராஜாங்க திணைக்கள அதிகாரிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டு கனடாவின் ஸ்காபுறோ நகருக்கு வருகை தந்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. இரா சம்பந்தன், மாவை சேனாதிராஜா, என். எம். சுமந்திரன் ஆகியோர் ஸ்காபறோவில் இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றினர். முதலில் ஸ்காபுறோ ஸ்றீ ஐயப்பன் தேவஸ்தான விழா மண்டபத்தில் இம்மூவரும் உரையாற்றினர்.

## அவுஸ்திரேலியாவில் ராஜபக்சாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

போர்க்குற்றவாளியை கைது செய்து கூண்டிலேற்றுங்கள் என்று கோரி அவுஸ்திரேலியாவில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவுஸ்திரேலிய தலைநகர் பேர்த்தில் நடந்த கொமன்வெல்த் நாடுகளின் மாநாடு நடைபெற்றது. அவுஸ்திரேலியாவுக்கும் மகாராணியாக உள்ள பிரிட்டிஷ் அரசி இரண்டாம் எலிசபெத் இந்த மாநாட்டைத் ஆரம்பித்து வைத்தார்.

இதில் இலங்கை அதிபர் ராஜபக்சே கலந்து கொண்டார். அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பேர்த் நகரில் தமிழர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர். அவுஸ்திரேலியாவில் வாழும் வெவ்வேறு இனக்குழுக்களும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளித்தன. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், "இந்தப் போர்க்குற்றவாளியை கைது செய்து கூண்டிலேற்றுங்கள்," "போர் குற்றவாளிக்கு சிவப்புக் கம்பள வரவேற்பா?" என்றெல்லாம் கோஷமிட்டனர்.

மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டியவர் அல்ல- முள்ளுக் கம்பிகளுக்குப் பின்னால் இருக்க வேண்டியவர் என்று போராட்டத்தில் பங்கேற்ற யோகன் தர்மா குறிப்பிட்டார். ஈழப் போரில் தனது குடும்பத்தைச் சேர்ந்த 79பேரை இழந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தயவுசெய்து அவுஸ்திரேலிய அரசு ராஜபக்சேவை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். நாடு திரும்பிப்போக அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் கொமன்வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை சஸ்பென்ட் செய்ய வேண்டும் என்றும், அங்கு அமைதி திரும்பி மக்களின் சுதந்திரமும், தனி

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# அதிகரித்துச் செல்லும் அடக்கு முறைகளும் அரசியல் நெருக்கடிகளும்

---இலங்கையிலிருந்து மங்களநாதன் அரவிந்தன்---

அடக்கு முறைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டிருந்த ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் உரிமைகளுக்காக, அடக்குமுறைகளைத் தகர்ப்பதற்காக ஆயுதமேந்திப் போராடிய விடுதலைப்புலிகள் இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றார்கள். முப்பது வருடங்களாகத் தொடர்ந்த யுத்தத்தை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

ஆயினும் இன முரண்பாட்டிற்கான அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அறிகுறிகள் எதனையும் காணமுடியவில்லை. மாறாக அரசாங்கத்தின் அடக்குமுறைகளே அதிகமாகிச் செல்கின்றன.

யுத்தச் சூழல் காரணமாகப் பாதுகாப்புத் தேடி, ஓடி ஓடி இறுதியில் முள்ளிவாய்க்காலில் இருந்து மனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தஞ்சமடைந்திருந்த மக்களின் மீள்குடியேற்றத்திலும் அடக்கியொடுக்கும் அணுகுமுறையே கைக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

மூன்று லட்சம் பேர் மனிக்பாம் இடைத் தங்கல் முகாமில் இறுதி யுத்தத்தின் பின்னர் தஞ்சமடைந்திருந்தார்கள். அவர்களில் ஏழாயிரம் பேரைத் தவிர ஏனையோரை மீள்குடியேற்றம் செய்துவிட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் உறவினர் நண்பர்களது வீடுகளிலும், வேறிடங்களிலும் வசித்து வருகின்றார்கள்.

இந்தக் குடும்பங்களை சீரான ஒரு செயற்பாட்டின் கீழ் மீள்குடியேற்றம் செய்வதற்கான வேலைத் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. முறையான ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் இவர்களை மீள்குடியேற்றம் செய்வதற்குப் பதிலாக இடம் பெயர்ந்த அனைவரையும் மீள்குடியேற்றம் செய்துவிட்டதாக அரசு பிரசாரம் செய்து வருகின்றது.

அரசாங்கத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாகின்றது. ஆயினும் இன்னும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீள்குடியேற்றப் பகுதிகளில் தரப்பாள் கூடாரங்களிலேயே வசித்து வருகின்றன. அந்தக் குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டமும் ஆமை வேகத்திலேயே நகர்ந்து கொண்டிருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அவசரத் தேவையாகிய சொந்த இடங்களில் அடிப்படை வசதிகளோடு மீள்குடியேறி தமது வாழ்க்கையைப் புதிதாகக் கட்டியெழுப்பலாம் என கனவு கண்டவர்கள் இன்று ஏமாற்றமடைந்திருக்கின்றார்கள்.

பிரதான வீதியோரக் கிராமங்களைத் தவிர்ந்த ஏனைய உட்பிரதேசங்களில் வீதிகள் கூட செப்பனிடப்படவில்லை. பொதுப் போக்குவரத்து வசதி கிடையாது. போதிய சுத்தமான குடிநீர் வசதி கிடையாது. மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பல கிராமங்களில் உரிய மலசலகூட வசதிகள் இல்லை. வாழ்வாதாரத்திற்கு அவசியமான தொழில்களை மேற்கொள்வதற்குரிய அடிப்படை உதவிகள் அங்கும் இங்குமாகவே செய்யப்பட்டிருக்கின்றன.

யுத்த காலத்தில் விடுதலைப்புலிகளின் பின்னால் அணி திரண்டிருந்தமைக்காகத் தண்டனை வழங்குவதுபோல, மீள்குடியேற்றம் என்ற போர்வையில் இடம்பெயர்ந்த மக்கள் கிராமங்களில் கொண்டு சென்று இறக்கி விடப்பட்டு, அவர்களது தேவைகளை அவர்களே பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற போக்கில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.



மீள்குடியேற்றப் பகுதிகளில் எங்கும் நிறைந்திருக்கின்ற இராணுவத்தினர் மீள்குடியேறியுள்ள மக்களின் வாழ்க்கைச் செயற்பாடுகள், அன்றாட நடவடிக்கைகள் என்பவற்றில் அளவுக்கு மீறிய வகையில் தலையிட்டு அவர்களை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கின்றார்கள்.

சிவில் நிர்வாகச் செயற்பாட்டிற்கென நியமிக்கப்பட்டுள்ள கிராமசேவையாளர்களுக்கு நிகராக இராணுவத்தினரும் கிராம சேவை பிரிவுகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். கிராம சேவையாளர் மேற்கொண்டு வருகின்ற தகவல் திரட்டுகின்ற அல்லது பொது மக்களின் தரவுகளைத் திரட்டி வைத்திருக்கும் நடவடிக்கைகளை இந்த இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றார்கள். அடிக்கடி பதிவுகள்: மேற்கொள்ளப்படுகின்றன. குடும்பங்கள், குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான விபரங்கள் இராணுவத்தினரால் சேகரிக்கப்படுகின்றன. தேவைகள், பற்றாக்குறைகள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் இராணுவத்தினர் திரட்டி வருகின்றார்கள்.

கிராம மட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சபை, மகளிர் அபிவிருத்திச் சபை, விளையாட்டுக் கழகங்கள், ஆலய நிர்வாக சபைகள் போன்ற பொது அமைப்புக்களின் கூட்டங்கள் இராணுவத்தினரின் அனுமதியின்றி, அவர்களது வருகையின்றி நடத்த முடியாது. இது ஒரு பக்கம்.

மறுபக்கத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் முக்கியமான இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் கிளைகளாக கிராமசேயைாளர் பிரிவுகள் தோறும் அல்லது இரண்டு மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு ஒரு சிறிய இராணுவ முகாம் என்ற ரீதியில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கின்றார்கள். போர்க்காலத்தைப் போன்று இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவதற்காகப் பொதுமக்கள் குடியிருந்த பல கிராமங்களும் பொதுமக்களினதும், கிராமங்களின் பொது காணிகளும் இராணுவத்தினரால் அடாத்தாகப் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறான இடங்களில் குடியிருந்த மக்கள் சொந்த இடங்களுக்குப் பதிலாக வேறிடங்களில் காணிகள் வழங்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் என அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

உதாரணமாக, முள்ளிக்குளம், முறிகண்டி, கேப்பாப்பிலவு மற்றும் முள்ளிவாய்க்கால், அம்பலவன் பொக்கணை உள்ளிட்ட இறுதி மோதல்கள் இடம்பெற்ற பத்து கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை வேறிடங்களில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இது மட்டுமல்லாமல், விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருந்த பல இடங்கள் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குச் சட்டரீதியாக உள்ள உரிமையாளர்களிடம் கையளிக்காமல் பல இடங்களை இராணுவத்தினர் தமது இராணுவ முகாம்கள், இராணுவ நிர்வாகத் தளங்கள் என்பவற்றுக்காகப் பயன்படுத்தி வருகின்றார்கள். பிரதான வீதியோரங்களில் அமைந்துள்ள இதுபோன்ற பல காணிகள் தனியார் வங்கிகள், லீசிங் கம்பனிகள், புட் சிட்டி என்றழைக்கப்படுகின்ற நவீன சந்தைத் தொகுதிகளுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் இராணுவத்தினரால் வழங்கப்பட்டு, அவற்றிற்குக் குத்தகையாகப் பெரும் தொகைப்பணம் பெறப்பட்டுள்ளது. இவற்றிற்கு மாதாந்த வாடகைப்பணமும் இராணுவத்தினரால் பெறப்பட்டு வருகின்றது.

இது ஒரு புறமிருக்க, மறுபக்கத்தில் நிர்வாகக் கட்டமைப்புக்களை சீர் செய்வதாகக்கூறி, கிராமசேவையாளர் பிரிவுகள், பிரதேச செயலகப் பிரிவுகள் என்பவற்றின் எல்லைகளை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளின் மூலம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் எல்லைகளையும் மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கு என்பது இரண்டு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகப் பிரதேசமாக இருந்து வந்துள்ளது. இந்த இணைப்பைப் பிரிக்கின்ற ஒரே நோக்கத்திற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் வெலிஓயா என்ற ஒரு பிரதேசத்தை உருவாக்கி அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருந்தார்கள். இந்தப் பிரதேசம் அனுராதபுரம் மாவட்டத்துடன் இணைத்து நிர்வகிக்கப்பட்டு வந்தது.

யுத்தம் முடிவடைந்துள்ளதையடுத்து, முல்லைத்தீவு மாவட்டத்தின் சில கிராம சேவையாளர் பிரிவுகளையும், வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளையும் வெலிஓயா பிரதேசத்துடன் சேர்த்து, முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளே ஒரு சிங்கள பிரதேச செயலகப் பிரிவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# நமது கலாசாரத்தில் ஏன் முன்பெல்லாம் பெரும்பாலும் கடவுள் பெயர்களையே மனிதர்களுக்கு வைத்தார்கள் என்ற கேள்விக்கு சத்குரு பதில் சொல்லும் போது...

எந்த ஒரு ஒலிக்கும் அதற்கென்று ஒரு பயன் உண்டு. மந்திரங்கள் கூட அந்த அடிப்படையில்தான் உண்டாக்கப்பட்டன. வெவ்வேறு மந்திரங்களை உச்சரிக்கும்போது வெவ்வேறு பலன்கள் கிடைக்கின்றன. குறிப்பிட்ட பயன்கள் தேவைப்படுபவர்கள் குறிப்பிட்ட மந்திரங்களை உச்சரிக்கின்றனர்.

சில ஒலிகளை நாம் உச்சரிக்கும்போது மட்டும் அவை நமது உயிர்த்தன்மையில் குறிப்பிட்ட விளைவை உண்டாக்குகிறது. எனவே அந்த ஒலிகளையே கடவுள்களின் பெயர்களாக வைத்துக் கொண்டோம். நீங்கள் உங்களை ஒரு குறிப்பிட்ட நிலைக்குத் தயார்படுத்திக் கொண்டு “ஷிவா” என்னும் சாதாரண ஒலியை உச்சரித்தாலே உங்களுக்குள் ஒரு புதிய பரிமாணத்தின் அனுபவம் வெடிக்கிறது. இது போல பல நூறு ஒலிகள் பல நூறு பரிமாணங்களை உங்களுக்குத் தருகின்றன.

எனவே அந்த ஒலிகளையெல்லாம், கடவுள்களுக்குப் பெயர்களாக சூட்டியதால் ஆயிரக் கணக்கான கடவுள்கள் நமது கலாச்சாரத்தில் இருக்கிறார்கள். எனவே ஆயிரக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்களா, அப்படிக் கிடையாது. எந்த ஒலிகள் குறிப்பிட்ட பயன்களை நமக்குள் உண்டாக்குகிறதோ அதையெல்லாம் நாம் கடவுளுக்குப் பெயர்களாக சூட்டி விட்டோம். எனவே கடவுளின் பெயர்களை நாம் உச்சரிக்கும்போதெல்லாம் அந்த ஒலிக்கு உண்டான பயன் நமக்கு கிடைக்கிறது.

கடவுளுக்கு வைத்ததோடல்லாமல் கடவுள் பெயர் என்று சொல்லி அதே பெயர்களையே உங்களுக்கும் வைத்தார்கள். எனவேதான் நமது கலாச்சாரத்தில் பெரும்பாலானோரின் பெயர்கள் ராமா, ஷிவா, கிருஷ்ணா என்று ஏதோ ஒரு கடவுளின் பெயராகவே இருந்தது. எனவே அந்தப் பெயர்களை அதற்கென்று நேரம் ஒதுக்கி உட்சாடணம் செய்யாமலேயே, அந்தப் பெயரால் குடும்பத்தினரும் மற்றவர்களும் உங்களை அழைக்கும்போது அந்த உச்சரிப்பிற்கான பலன் அவர்களுக்குக் கிடைத்தது.

ஆனால் உங்கள் பெயரை நீங்கள் எப்போதும் உச்சரிப்பதில்லை. உங்கள் பெயரை உச்சரிப்பதால் கிடைக்கக்கூடிய பலன் உங்களுக்கு கிடைப்பதில்லை. உங்கள் பெயரை மற்றவர்கள்தான் உச்சரிக்கிறார்கள். எனவே அதற்கான பலன் அவர்களுக்குத்தான் கிடைக்கிறது. ஆனால் இப்போதெல்லாம் அப்படி பெயர்வைக்கும் நிலை மாறிவருவதால் உங்களை அழைப்பதால் கிடைக்கும் பலனை மற்றவர்கள் இழக்கிறார்கள். மேலும் எண் சோதிடம் என்ற பெயரில் உங்களில் சிலர் சரியான பெயரையும் உருக்குலைத்துக் கொள்கிறீர்கள். நாம் உருவாக்கிய எண்களே நம்மை நிர்ணயிக்க அனுமதிக்காதீர்கள்



## சத்குரு வாசுதேவ்




1) Inner Engineering Online - IEO is $150

2) Shambhavi Mahamudra Program (SMP) with Sadhguru is $250

3) The package IEO + SMP (with Sadhguru ) is $300

Students discount - $50 off

Seniors (65+) discount - $30 off

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

# யூரோ - சீரோ?

05ஆம் பக்கத்தொடர்ச்சி

வங்கிகளின் நிலை மோசமாகவுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் கிறீசுக்கு தொடர்ச்சியாக கடனை வழங்கும் அதே சமயம் இந்த வங்கிகளுக்கும் பணத்தை வழங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இவ்வங்கிக-ளின் வீழ்ச்சி அந்த நாடுகளையும் பாதிக்கும்.

பின்வரும் பன்றி (PIGS) நாடுகளின் கடன் நிலைமை இது

- Greece: $130-billion
- Ireland: $463-billion
- Italy: $783-billion
- Portugal: $194-billion
- Spain: $642-billion

இந்நிலைக்கு தீர்வுள்ளதா?. ஐரோப்பா இன்று சீனாவிடமிருந்து கடனை எதிர்பார்க்கின்றது. கடன் பெறலாம். நிலைமை மாறுமா? இறக்குமதியை குறைக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகள் ஒரு புறம் சீனா போன்ற நாடுகளிடமிருந்தும் மறுபுறம் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்கின்றன. இரண்டு நாடுகளின் பொருட்களின் விலையும் வித்தியாசம். இறக்குமதி குறையும் போது தேசிய உற்பத்தி கூடும். இது வேலையில்லா பிரச்சினையின் வீதத்தை குறைக்கும். பாதிப்படைந்த நாடுகளின் வேலையற்ற வீதம் 20 வீதத்துக்கு மேலேயுள்ளது. 20 வீதத்துக்கு மேற்பட்டோர் சொந்த வீடின்றியுள்ளனர். இந்த நிலை மாறும். பொருளாதார வளர்ச்சி தோன்றும். ஐக்கிய அமெரிக்கா ஐக்கிய அமெரிக்க பொருட்களை வாங்குமாறு பிரச்சாரம் செய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. இன்று ஐரோப்பிய ஒன்றியமும் இதனை உடனடியாக செய்ய வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் தவறான பாதையை விடுத்து பெரும் நிறுவனங்களுக்கு அதிக வரியை விதிக்க வேண்டும். சந்தை நிலவரங்களை அரசு மிகவும் அவதானத்துடன் கண்காணிக்க வேண்டும். ஸ்பெயினில் ஏற்பட்டது போல் மிக மோசமான வீடு விற்பனை சரிவும், கடன் வழங்காமையும் கனடாவில் ஏற்படமுடியாது. கனடா கடந்த பல வருடங்களாக வங்கியிலை மிகவும் அவதானத்துடன் கையாளுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் சரிவை நோக்கிச் செல்கின்றது என்பது உண்மையே. இனி வரும் காலங்களில் கடன் சுமைகளை எவ்வாறு கையாளப்போகின்றது என்பதிலேயே அவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. இல்லையேல் யுரோ சீரோவாகிவிடும்.

# யூரோ - சீரோ?

இன்று உலகம் முன் பல கேள்விகள் இருக்கின்றன. கடாபி எப்படிக் கொல்லப் பட்டார்? கடாபி ஒரு சர்வாதிகாரியா? போன்ற கேள்விகளுடன் யூரோவின் எதிர்காலம் என்ன? யூரோ வீழ்ச்சியடைகின்றதா? போன்ற கேள்விகளும் கேட்கப்படுகின்றன. வோல் வீதி, பே வீதி தொடர் போராட்டங்களை விட இவையே முக்கிய இடத்தில் உள்ளன. புதிய பொருளாதார முதலைகளான பிரேசில், இந்தியா, சீனா போன்ற நாடுகள் யூரோ பிரச்சினையை உடனடியாக தீர்க்குமாறு கேட்கின்றன. யூரோவின் வீழ்ச்சிக்கு பிரதான காரணம் பன்றிகள் (PIGS). போர்த்துக்கல், ஐயர்லண்ட், இத்தாலி, கிறீஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் பொருளாதார வீழ்ச்சியும் கடன் சுமையுமே இவ்வீழ்ச்சிக்கான பிரதான காரணம். கிறீஸ் ஐரோப்பிய யூனியனில் சேரும் பொழுது தனது நாட்டு பொருளாதார நிலைபற்றி பிழையான தகவல்களையே ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கொடுத்திருந்தது. இந்த நாடுகள் பல தவறான பொருளாதார கொள்கைகளை கொண்டிருந்தமையே இவ்வீழ்ச்சிக்கு காரணம் என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். உதாரணம் -கிறீஸ்சில் அரச ஊழியர்கள் 40களிலேயே ஓய்வு பெறலாம்.

கிறீசின் கடன் பிரச்சினை தீர்க்கப்படலாமா? பல பொருளாதார நிபுணர்கள் கிறீசின் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்படக் கூடியதல்ல எனத் தெரிவித்துள்ளனர். வழமைபோல் வருமானத்தை உயர்த்த வேண்டுமெனில் வரியை அதிகரிக்க வேண்டும். கிறீசில் அது உடனடி சாத்திய மல்ல. மக்களிடம் போதிய வருமானம் இல்லை. பெரும் பணக்காரர்களிடம் வரி அறவிடமுடியாமல் போய்விட்டது. திட்டமிட்ட பொருளாதாரத் திட்டங்களின்மையே இதற்கான பிரதான காரணம். அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தில் கிறீஸ் இணைந்த மையினால் கிடைத்த ஒரு லாபம், கிறீசின் கடன் சுமைக்கு பரிகாரமாக, ஐரோப்பிய ஒன்றியமும், ஐரோப்பிய ஒன்றிய வங்கிகளும் பணத்தை கொடுக்கின்றன. கிறீசின் மொத்த வருமானத்தில் 78 வீதம் சேவைகளி னூடாகவும், 18 வீதம் கைத்தொழிலிலும், 4வீதம் விவசாயத்திலும் பெறப்படுகின்றது. உலகமயமாதலின் விளைவு ஐரோப்பிய நாடுகளின் மொத்த உற்பத்தி சேவைகளில் இருந்தே பெறப்படுகின்றது. வரிகள் அறவிடும் முறைகளில் உள்ள சீரற்ற தன்மையால் அரசுகள் முழுமையாக வரியை பெறமுடியாமல் உள்ளது. சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்கள் அரச கட்டுப்பாட்டில் உள்ள சேவைகளை தனியார் மயமாக்கச் சொல்லி கட்டாயப்படுத்துகின்றன. இதனால் மக்கள் அத்தியாவசிய தேவை களை பெறமுடியாமல் திண்டாடுகின்றனர். எனவே அரசு ஐரோப்பிய ஒன்றியத்திட மிருந்து மேலும் கடனை எதிர்பார்க்கின்றது. ஏற்கெனவே வழங்கப்பட்ட கடனை பல ஐரோப்பிய வங்கிகள் மீளப் பெறமுடியாமல் திண்டாடுகின்றார்கள். இந்நிலையில் மேலதிக கடன்களை வங்கிகள் கொடுக்க தயங்குகின்றன. ஐரோப்பிய ஒன்றியமும், சர்வதேச நாணய நிதியமுமே மேலதிக கடன்களை வழங்குகின்றன. இவை பல கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. இவை விதிக்கும் கட்டுப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாமல் கிறீஸ் போன்ற நாடுகள் தடுமாறுகின்றன. ஏதன்ஸ் மாநகரத்தில் உள்ளது நிய லோனியா நகரம். அங்கு விதிக்கப்பட்ட சொத்துக்களுக்கான புதிய வரியை அந்நகர மக்கள் கட்டமறுத்துள்ளனர். அந்நகர மேயர் Iraklis Gotsis புதிய வரி சட்ட விரோதமானது. எங்களது நகர மக்களால் கட்ட முடியாது என தீர்க்கமாக பதிலளித்துள்ளார். மின்சார வரியையே கட்ட மறுத்துள்ளனர். இந்நிலையில் கிறீஸ் பொருளாதார மாற்றங்களை எதிர்பார்க்கலாமா?



**- ரதன் -**

ஸ்பெயினில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர் களில் 85 வீதமானவர்கள் வீட்டுக் கடன் உள்ளவர்கள். அங்கு 20 வீதமானவர்கள் வேலையற்றவர்கள். சுமார் 1.4 மில்லியன் வீடுகள் விற்கப்படாமல் உள்ளன. வீட்டு விலைகள் 13 வீதம் சரிந்துள்ளன. பலர் வீட்டுக் கடன்களை கட்ட முடியாமல் வங்கியிடம் வீடுகளை விட்டு விடுகின்றனர். வீடு கட்டும் நிறுவனங்களும் கட்டப்பட்ட வீடுகள் விற்காமல் இருப்பதால் வங்கிக் கடன்களை கட்ட முடியாமல் உள்ளனர். வங்கிகளும் கொடுத்த கடன்களை மீளப் பெறமுடியாமல் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலை உருவாக்கத் திற்கு ஸ்பெயின் அரசும் ஒரு காரணம். முறையாக சந்தை நிலவரங்களை நிர்வகிக் காமல் இருந்துள்ளது. வங்கிக் கடன்களை ஒழுங்கான சட்டங்களுக்கூடாக நிர்வகிக்கவில்லை.

ஐக்கிய இராச்சியமும் தடுமாறுகின்றது. மொத்த தேசிய உற்பத்தியில் 80 வீதம் பொதுக் கடனாகவுள்ளது. அத்துடன் 12 வீதம் வட்டியாகவும் கட்டவேண்டியுள்ளது. 2015ல் 15வீதம் அதிக வரிவருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் ஐக்கிய இராச்சியமும் கடன் சுமையை சுமக்க முடியாமல் தள்ளாட வேண்டிய நிலைக்கு வெகு விரைவில் தள்ளப்படலாம்.

இத்தாலியின் மொத்த கடன் வீதம் மொத்த தேசிய உற்பத்தியின் 120 வீதமாகும். கிறீசைப் போன்றே இத்தாலியும் பல பொருளாதார பிரச்சினைகளை சந்திக்கின் றது. கறுப்புச் சந்தை இத்தாலியின் நீண்ட கால தலையிடி. ஊழல் மற்றொரு சுழல்.

Intesa Sanpaolo SpA , UniCredit SpA ஆகிய இத்தாலிய பிரதான வங்கிகளின் சந்தை நிர்ணய மதிப்பு 30 வீதத்தால் குறைந்துள்ளது. இத்தாலிய மொத்த உற்பத்தி வளர்ச்சி 0.2 வீதமாகவுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்றாவது நிலையான பொருளாதாரத்தைக் கொண்டிருந்த இத்தாலியின் வீழ்ச்சிக்கான காரணங்கள் பல. இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உற்பத்தியாகும் பொருட்கள் ஐரோப்பிய சந்தையில் விற்கப்படுகின்றன. ஐரோப்பாவில் உற்பத்தி குறைவடைந்துள்ளன. இந்தியா, சீனா போன்ற நாடுகளின் மொத்த உற்பத்தி 8 வீதத்துக்கு மேலாக அதிகரித்துள்ளது.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலை மேற்கூறிய நாடுகளைப் போன்றே உள்ளது. ஐக்கிய அமெரிக்கா கிறீசின் பிரச்சினை தீர்வில் அக்கறை காட்டுகின்றது. காரணம் கிறீஸ் அமெரிக்க வங்கிகளுக்கும் பல கோடி டொலர்கள் கடன் கொடுக்க வேண்டும். வழமான ஐரோப்பிய நாடுகளின் வங்கிகள் வழங்கும் பணமே பாதிக்கப்பட் நாடுகளுக்கு வழங்கப்படுகின் றது. ஒரு வகையில் செல்வ பரம்பலாகும். இந்நிலை நீடிப்பின் வழமான நாட்டு மக்கள் வெறுப்படைவார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பல்வேறு மட்டத்தில் உள்ள நாடுகள் ஒன்றாக ஒரே நாணயத்தை வைத்துள்ளனர். பொதுவாக ஒரு நாட்டிலேயே இந்தச் சாத்தியம் உள்ளது. தேசிய உற்பத்தி கூடிய மாகாணங்கள் குறைந்த மாகாணங்களுக்கு பணத்தை மத்திய அரசினூடாக வழங்குவது வழமை. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுள் ஒரே வட்டி வீதம் அறவிட வேண்டும். ஒன்றியத்தின் ஆரம்பத்தில் இணையும் நாடுகளுக்கு பல விதிகள் உள்ளன. பணவீக்கம் 1.5 வீதத்துக்கு குறைவாகவே இருக்க வேண்டும். மொத்த தேசிய உற்பத்தியில் 60 வீதத்துக்கு குறைவான கடனே இருக்க வேண்டும் போன்றவை முக்கியமானவை. ஆனால் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பொருளாதார மட்டத்தில் உள்ளன. இதனால் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன. நாடுகள் தங்களது பொருளா தார நிலைமைக்கு ஏற்றவாறு சந்தை விலை- களை நிர்ணயிக்க முடியாது. ஏனெனில் இவை யாவும் யூரோவில் தங்கியுள்ளது. உதாரணத்துக்கு கிறீஸ் அதிக முதலீடுகளுக்காக வட்டி வீதங்களை மாற்ற முடியாது. ஒரே நாணயத்தின் அதிக லாபம் பெறும் நிறுவனங்களுக்கே கிடைக்கின்றது. ஒன்றிய நாடுகளில் வியாபாரம் மேற்கொள் ளும் போது நாணய மாற்று வீதங்களால் பாதிப்பில்லை. அதேபோல் மாற்ற வீதங்களுக்கான செலவீனமும் குறைவு.

கிறீசுக்கு கடன் வழங்கிய ஐரோப்பிய

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

LICENCE IN 3 WEEKS
(IF QUALIFIED)


Free 1st Lesson for beginners Only
Learn To Drive Safely By Licenced Instructor.
Package A $95 — 1 Lesson + Car Rental for G2 Road Test
Package B $115 — 2 Lesson + Car Rental for G2 Road Test
Package C $165 — 4 Lesson + Car Rental for G2 Road Test
Package D $130 — 2 Lesson + Car Rental for G2 Road Test
$25 Lesson for G2
$30 Lesson for G
Call: Vicky - 647.284.5373

# விளையாட்டுத் தகவல்கள் 317

## கால்பந்துப் போட்டியில் அதிர்ச்சித் தோல்வியைத் தழுவிய செல்சியா அணி

இங்கிலாந்தில் நடந்த பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில் செல்சியா அணி தோல்வியை சந்தித்தது. லண்டனில் நடந்த இத்தொடரின் லீக் போட்டியில் செல்சியா மற்றும் குயின்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் ஆகிய இரண்டு அணிகள் மோதின. இப்போட்டியில் துவக்கத்தில் இருந்தே செல்சியா வீரர்கள் அவர்களது முரட்டுத்தனமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் ஏழு வீரர்களுக்கு "மஞ்சள் அட்டை" காண்பிக்கப் பட்டு அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டனர். இதனால் 10வது நிமிடத்தில் கிடைத்த "பெனால்டி" வாய்ப்பை ஹெல்குசன் கோலாக மாற்ற, குயின்ஸ் பார்க் ரெஞ்சர்ஸ் அணி முன்னிலை பெற்றது. பின்பு 33, 40 வது நிமிடங்களில் செல்சியாவின் போசிங்வா, துரோபா ஆகியோர் 'ரெட் கார்டு' பெற்று வெளியேற, 9 வீரர்களுடன் விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர் முடிவில் 0-1 என்ற கோல் கணக்கில் செல்சியா அணி குயின்ஸ் பார்க் ரெஞ்சர்ஸ் அணியிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

## கடும் விமர்சனத்திற்கு ஆளான இங்கிலாந்து

இந்தியாவுடன் 5-0 என்ற கணக்கில் படுதோல்வி அடைந்த இங்கிலாந்து தேசிய அணியின் செயல்பாட்டை இங்கிலாந்து பத்திரிகைகள் கடுமையாக விமர்சித்துள் ளன. அந்த ஆடுகளங்களின் தன்மைக்கு ஏற்ப தோனியின் படையை எதிர்கொள்வதில் நல்ல நுட்பங்களையும், மனவுறுதியையும் முழுவதுமாக அலிஸ்டர் குக்கின் படை இழந்துவிட்டதாக அவை குறை கூறியுள்ளன. இங்கிலாந்தின் டெய்லி மிரர் பத்திரிகை, இங்கிலாந்து தொடரை மிக மோசமாக முடித்துள்ளது. அலிஸ்டர் குக் படை இந்தியாவிடம் மோதி 5-0 என்ற கணக்கில் ஒயிட்வர்-ஆகி முற்றிலும் சிதிலமடைய புதிய ஆழத்தைத் தேடியுள்ளது என்று எழுதியுள்ளது. எதிர்ப்பு அதிகம் காட்டாமல் இந்திய துணைக்கண்டத்தில் சரணடைந்து,



ஒளிந்து கொள்ள இடம் தேட முடியாமல் அல்லாடியது இங்கிலாந்து என்ற ரீதியில் அது இங்கிலாந்து அணியை சாடியுள்ளது.

## பழி தீர்த்த இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றி பெற்று இந்தியா இந்தத் தொடரை 5-0 என்ற கணக்கில் வென்றது. அண்மையில் இங்கிலாந்து சுற்றுப் பயணம் செய்த இந்திய அணி ஒருநாள் போட்டி, 20-20, டெஸ்ட் என அனைத்திலும் தோல்வி கண்டது. அதற்கு பதிலடியாக இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணியை 5 ஒருநாள் போட்டிகளிலும் வென்றுள்ளது. கொல்கத்தா வில் துவங்கிய 5 வது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணியை 96 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது இந்திய அணி. பூவா தலையா வென்ற இங்கிலாந்து அணி, இந்திய அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது. இந்திய அணியில் துவக்க ஆட்டக்கார ளாகக் களம் இறங்கிய ரஹானே, காம்பிர் இருவரும் நிதானமான துவக்கத்தை அளித்தனர். அணியின் எண்ணிக்கை 80 ஆக இருந்தபோது, காம்பிர் ஃபின்னின் வேகத்தில் போல்டானார். அதே ஓவரில் அடுத்து வந்த விராத் கோலியும் அவுட் ஆக, இந்திய அணி 80க்கு 2 விக்கெட்களை இழந்தது. அடுத்த ஓவரிலேயே ரஹானேவும் அவுட் ஆக, 80க்கு 3 விக்கெட்கள் என்ற நிலை ஏற்பட்டது. அடுத்து வந்த திவாரியும் சுரேஷ் ரெய்னாவும் நிலைத்து நின்று ஆடினர். இருவரும் இணைந்து ஆடி அணியின் எண்ணிக்கையை 123 என்று உயர்த்தியபோது, திவாரி 24 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வழக்கம்போல் நடுவரிசையில் இறங்கிய டோனி-ரெய்னா ஜோடி நன்கு ஆடியது. பவுண்டரியும் சிக்ஸரும் அடித்துவந்த ரெய்னா, 38 ரன்களில் ரன் அவுட் ஆனார். முன்னதாக ரன் ஏதும் எடுத்திராத நிலையில் இவர் கொடுத்த எளிய கேட்சுகள் இரண்டை இங்கிலாந்து வீரர்கள் தவறவிட்டனர். பின்னர் ஜடேஜா, அஸ்வின், பிரவீண்குமார் ஆகியோர் டோனியுடன் இணைந்து ரன் சேர்த்தனர். அதிரடி காட்டிய டோனி 75 ரன்கள் குவித்தார். தொடர்ந்து அவுட் ஆகாமல் விளையாடி வரும் டோனி நட்சத்திர வீராக ஜொலித்தார். இறுதியாக இந்திய அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 271 ரன்கள் என்ற கடின இலக்கை நிர்ணயித்தது. இங்கிலாந்து தரப்பில் படேல் 3, ஃபின் 2, பிரெஸ்னன் 1, மீகர் 1 என விக்கெட் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியின் தொடக்க வீரர்கள் அதிரடி காட்டினர். அந்த அணி நல்ல ரன்ரேட் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. அந்த அணி விக்கெட் இழப்பின்றி 20 ஓவர்களிலேயே 128 ரன்களை எடுத்தது. கீஸ்வெட்டர் 63, கேப்டன் குக் 60 என இருந்த நிலையில், இந்த ஜோடியினை இந்தியாவின் புதிய வேகப் பந்து வீச்சாளர் ஆருன் பிரித்தார். இவருடைய வேகத்துக்கு முதலில் குக் போல்டானார். அடுத்து, கீஸ்வெட்டர் ஜடேஜாவின் சுழலில் ஆட்டமிழந்தார். அடுத்து விளையாட வந்த வீரர்கள் இந்திய அணியின் சுழற்பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர்.

இந்திய தரப்பில் ரவீந்திர ஜடேஜா 4 விக்கெட்களும், அஸ்வின் 3 விக்கெட்களும், ஆருன், ரெய்னா, திவாரி ஆகியோர் தலா 1 விக்கெட்டும் வீழ்த்தினர். இறுதியாக இங்கிலாந்து அணி 37 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 176 ரன்கள் மட்டுமே எடுத்தது. கடைசி ஒருநாள் போட்டியிலாவது ஆறுதல் வெற்றி பெறும் என்று எதிர்பார்த்த இங்கிலாந்து அணியைத் தோற்கடித்து இந்திய அணி முழு வெற்றியைப் பெற்று, தக்க பதிலடி கொடுத்தது இந்திய ரசிகர்களை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஆட்ட நாயகன் விருதை துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு என இரண்டிலும் ஜொலித்த ரவீந்திர ஜடேஜா பெற்றார். தொடர் நாயகன் விருதை அனைத்து ஆட்டங்களிலும் அவுட் ஆகாமல் சிறப்பாக விளையாடிய இந்திய அணியின் கேப்டன் டோனி பெற்றார்.

## தென் ஆப்ரிக்கா அபார வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் தென் ஆப்ரிக்க அணி 80 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தென் ஆப்ரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் போட்டியில் அவுஸ்திரே லியா அணி வென்றது. இரண்டாவது போட்டி போர்ட் எலிசபெத் நகரில் நடந்தது. டொஸ் வென்ற தென் ஆப்ரிக்க அணி கப்டன் ஆம்லா துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். தென் ஆப்ரிக்க அணிக்கு ஆம்லா டக் அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தார். பின் இணைந்த ஸ்மித், காலிஸ் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இரண்டாவது விக்கெட்டுக்கு 142 ரன்கள் எடுத்த நிலையில், 44வது அரைசதம் அடித்த ஸ்மித்(57) அவுட்டானார். தனது 83வது அரைசதம் அடித்த காலிஸ் 76 ரன்கள் எடுத்து வெளியேறினார். பின் டுமினி(56), மில்லர்(59) இருவரும் அதிரடியாக ரன்கள் சேர்த்தனர். தென் ஆப்ரிக்க அணி 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 303 ரன்கள் எடுத்தது. கடின இலக்கை துரத்திய அவுஸ்திரேலிய அணிக்கு பொண்டிங்(10) ஏமாற்றம் தந்தார். கப்டன் கிளார்க்(1) நிலைக்கவில்லை. மைக் ஹசி(37) ரன் அவுட்டானார். ஸ்மித்(26), ஹாடின்(13) விரைவில் திரும்பினர். அதிகம் எதிர்பார்க்கப் பட்ட வாட்சன், 15 ரன்கள் மட்டும் எடுத்தார். போராடிய டேவிட் வார்னர் அதிகபட்சமாக 74 ரன்கள் எடுத்து ஆறுதல் தந்தார். பின் வரிசையில் ஜான்சன்(9), தோகர்ட்டி(10), போலிஞ்சர்(6) சொதப்பியதால் அவுஸ்திரே லிய அணி 50 ஓவரில் 223 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. வேகப்பந்து வீச்சில் மிரட்டிய மார்னே மார்கல் 4, டிசாட்சொபே, ஸ்டைன் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து ஒருநாள் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலை அடைந்தது. இரு அணிகள் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி வரும் 28ம் திகதி நடக்கவுள்ளது.

## இலங்கை - பாகிஸ்தான் டெஸ்ட் : வெற்றி தோல்வியின்றி முடிவு

பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று வெற்றி தோல்வி இன்றி சமனிலையில் நிறைவடைந்தது. அபூதாபியில் நடைபெற்ற இந்த போட்டியின் இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸை 197 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸிற்காக விளையாடிய பாகிஸ்தான் அணி 174.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 511 ஓட்டங்களை பெற்றது. பாகிஸ்தான் அணி சார்பாக தௌபீக் உமர் 496 பந்துகளுக்கு முகம்கொடுத்து 17 பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கலாக 236 ஓட்டங்களைப் பெற்றார். இந்நிலையை தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக விளையாடிய இலங்கை அணி 483 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இரண்டாவது இனிங்ஸில் இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார சங்கக்கார, 431 பந்துகளை எதிர்கொண்ட நிலையில் 18 பவுன்டரிகள் அடங்கலாக 211 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இறுதி நாளான இன்று சில மணித்தியாளங்கள் மீதமுள்ள நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணி நாள் நிறைவில் 1 விக்கெட் இழப்பிற்கு 21 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி நிறைவு பெற்றது. போட்டியின் சிறந்த வீராக குமார சங்கக்கார தெரிவானார்.



எஸ். கணேஷ்


ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880


# நாமும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

வட்டிவீத குறைவினால் பணவீக்கம் (Inflation) அதிகரிக்க கூடிய சந்தர்ப்பம் அதிகமாகவே காணப்படுகின்றது. இதுவும் வீட்டின் விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தலாம். எனினும் 65 வயதிற்கு மேற்பட்டவர்களாலும் 20 வயதிற்கு மேற்பட்ட இளைய வயதுடைய நகரவாசிகளாலும் எடுக்க இருக்கும் முடிவுகளிற்கேற்பவே எதிர்கால பொருளாதாரம் தங்கியுள்ளது. இந்த வயதினர் தகுந்த பொருளாதார ஆலோசகர்களுடன் கலந்து ஆலோசிப்பது சிறந்த முடிவை கொடுக்கும்.



# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 352

34.6 மில்லியன் மக்கள் தொகை கொண்ட கனடா நாட்டில் ஏறக்குறைய 10 மில்லியன் மக்கள் 1946 இலிருந்து 1965 வரையான காலப்பகுதியில் பிறந்துள்ளார்கள். இவர்களை Baby Boomers என்று அழைக்கப்படுகின்றது. இன்றைய காலத்தில் இந்த காலகட்டத்தில் பிறந்த கனடியர்களே ஆகக்கூடிய வயதுப்பகுதியை கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இந்த ஆண்டிலிருந்து (2011) இவர்கள் தொழிலிருந்து விடுபட இருக்கின்றார்கள். அதாவது Retirement (65 வயது) எடுக்க உள்ளார்கள். இந்நிலைமை தொடரும். எனவே இவர்களின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப, கனடிய பொருளாதாரம் பெரும் மாறுதலை ஏற்படுத்தும் என்பதனை பொருளாதார ஆலோசகர்கள் கூறுகின்றனர். இதற்கு சமாந்தரமான நிலையே அமெரிக்காவிலும் நடைபெறும் என்பதனையும் ஊகிக்கலாம். இந்த வயதினரின் வீடு அனேகமாக அடமானக்கடன் (Mortgage) அற்றதாக அல்லது குறைந்தளவு கடன் கொண்டதாக காணப்படும். இவ்வாறான பெரிய வீடுகள் விற்கப்பட்டு, சிறிய அடுக்குமாடி மனைகளிற்கு இடம் மாறுவார்களா அல்லது இதே வீட்டிலிருந்து பேரப்பிள்ளைகளை வளர்ப்பார்களா?



பொதுவாக Baby Boomer களின் பிள்ளைகள் பெற்றோர்களிடமிருந்து தமது சொந்த இடத்திற்கு இடம்மாறும்போது, பெற்றோர் தமது வீட்டை விற்று சிறிய இடத்திற்கு மாறுவதை வழக்கமாக கொண்டு உள்ளார்கள் என Boom Bust & Echo என்ற பிரசித்திபெற்ற புத்தகத்தை எழுதிய David K. Foot கூறியுள்ளார். இந்நிலைமை சிலவேளை நடைபெறாது போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் தொடர்ந்து இதே வீட்டில் இருப்பார்களாயின் பொருளாதாரத்திற்கு சிறந்தது என எதிர்பார்க்கமுடியாது. பொதுவாகவே வயதானவர்கள் அதிகரிக்க, அதிகரிக்க பொருளாதார வளர்ச்சி மந்த நிலையை அடையும். இதற்கு ஜப்பான் நல்ல உதாரணமாக இதற்கு சான்று பகர்கின்றது. 1950 களிலும் 60 களிலும் கனடிய GDP (Gross Domestic Product) 5% இருந்தது. இப்பொழுது 2% ஆக குறைந்துள்ளது. எனவே எதிர்காலத்தில் கனடிய வீட்டுவிலை சிறிதளவு குறையலாம் என எதிர்பார்க்கலாம் என David Foot விளம்பியுள்ளார். இவரின் கூற்றின்படி பெரிதாக இருக்கும் வீட்டில் இருக்கும் பணத்தை (Equity) வெளியே கொண்டுவருவது, தொழிலிருந்து விடுபட்டு வாழ்பவர்களின் பின்னைய வாழ்விற்கு உதவியாகக் காணப்படலாம்.

உதாரணமாக 1995 இல் ரொறொன்ரோவில் சராசரி வீட்டுவிலை $195,311 இருந்தது. இப்பொழுது $465,369 ஆகக் காணப்படுகின்றது. கடந்த பல ஆண்டுகளாக வருட வீட்டுவிலை அதிகரிப்பு ஏறக்குறைய 5.6% ஏற்பட்டுள்ளது. இது ஒரு ஆரோக்கியமான சிறந்த வளர்ச்சியாகவே காணப்படுகின்றது. பொதுவாகவே இது ஒரு ஆரோக்கியமான சிறந்த வளர்ச்சியாகவே காணப்படுகின்றது. எதிர்கால வட்டிவீத அதிகரிப்பு, சமநிலையற்ற பொருளாதாரம், இதனால் ஏற்படும் தொழில் புரியாதவர்களின் எண்ணிக்கை (Unemployment Rate) மற்றும் ஓய்வுபெற்றவர்கள் (Retirees) தொடர்ந்து வீட்டில் இருப்பது, வீட்டு விலையில் எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாம்? இருந்தபோதிலும், நகரப் பகுதியில் வாழும் இளையவர்கள் தமது அடுக்குமனையை விற்று இவ்வாறான வீடுகளை வாங்க சந்தர்ப்பம் உண்டு. பிள்ளைகளின் வளர்ப்பிற்கு வீடே உகந்ததாகலாம். எனவே விலையில் பெரிய பாதிப்பு ஏற்படாது என எதிர்பார்க்கலாம். இருந்த போதிலும் சிறிதளவு இறக்கத்தை எதிர்காலத்தில் எதிர்பாக்கலாம். ரொறொன்ரோ பகுதிக்கு வெளிப்பகுதியில் உள்ள வீடுகளிற்கு இவை சாதகமாகவே காணப்படலாம். மற்றும் வேறு நாடுகளிலிருந்து கனடாவிற்கு வரும் குடிவரவாளர்களினாலும் கனடிய ஆதன விலை சாதகமாகவே பார்க்கப்படுகின்றது.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

HomeLife/GTA
Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated
இரு இடங்களில்
“கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது”
5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja Mahendran, P. Eng.
(Broker/Owner)

CONDO. FOR SALE


KENNEDY & 401
1 + 1 Bedroom condo. for sale. Close to all facilities.
Asking price $264,900.
Excellent view.

SPACE FOR LEASE

5200 Finch. Ave. East. (Embassy store building)
2nd Floor unit. About 745 sq.ft. 4 Rooms &
Large common area Rent $973. Clean unit.

FOR SALE

FINCH &WARDEN
2 + 1 Bedroom. 2 Washrooms.
Close to all facilities.
Asking Price $129,000

NEWCONDO. FOR LEASE

MCCOWAN & ELLESMERE
1 Bedroom + Den condo.
1 Parking. Asking Price $1100

STORE FOR LEASE
KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease. 1000 sq.ft
Suitable For Salon, jewellery .
Kind Of Uses, Close To TTC,
Kennedy Subway Station.

COMMERCIAL CONDO. SALE


MARKHAM & STEELES
Builders blow-out sale. Price starts from $239,900.
Avail. for rent, retail.

FOR LEASE

FINCH & MIDDLEFIELD
Main Floor Unit In GTA Square Shopping Mall.
Renovated unit.

# தவில் சக்கரவர்த்தி தட்சணாமூர்த்தி (1933 - 1975)

## விவரணப்படம்

தவில் வாத்தியத்தில் ஈழத்திலும் இந்தியாவிலும் தன்னிகரற்ற மேதையாகத் திகழ்ந்த தட்சணாமூர்த்தி அவர்கள் மறைந்து முப்பத்தியாறு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் அவரது தவில் இசை அடங்கிய ஒரு குறுந்தட்டுக்கூட இதுவரை வெளிவர வில்லை. இந்நிலை இப்படியே தொடருமானால், அந்த மேதையின் பெயரே இசை உலகிலிருந்து மறைந்துவிடும் துயரநிலை ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அண்மையில் இந்தியா சென்றிருந்தபோது, தமிழகத்தில் இசைக் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் தட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பைப் பற்றித் தெரிவித்தபோது, 'தட்சணாமூர்த்தியுடன் கச்சேரியெனில், அவருடன் வாசிக்க எங்களால் முடியாது' என்று பிரபல தவில் வித்வான்களே மேடையில் அவருடன் வாசிக்க அஞ்சினார்கள் என்ற அந்த இசை மதிப்பீடு என்னுள் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்தகைய அந்த இசை மேதையின் வாழ்வு குறித்த விவரணப்படம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என்ற அவா, அந்த உரையாடலின் பின் என் மனதில் வேரூன்றியது. தட்சணாமூர்த்தி அவர்களுடன் சேர்ந்து கச்சேரிகளில் பங்குகொண்ட கலைஞர்கள், அவரது கச்சேரிகளைக் கேட்டு ரசித்த இசைவாணர்கள் பலர் இன்றும் அவரது மேதாவிலாசத்தை வியந்து பாராட்டுகிறார்கள்.

'சிலோன் தட்சணாமூர்த்தி ஒரு பிறவி மேதை. பெங்களூர் தர்மராயா கோயிலில் நடக்கும் கரகாட்ட விழாவின்போது தவில் வாசிக்க சிலோன் தட்சணாமூர்த்தி வந்திருந்தார். என்ன அபாரமான வாசிப்பு!' என்று வியந்து பாராட்டுகிறார் 91 வயதான இசை மேதை ஆர்.கே. ஸ்ரீகண்டன் அவர்கள். தட்சணாமூர்த்தி அவர்களின் அபாரமான வாசிப்பை, இன்றும் தனது முதுமையான வயதில் நினைவுகூரும் ஆர்.கே. ஸ்ரீகண்டன் போன்றவர்களைப் பேட்டி கண்டு, தட்சணாமூர்த்தியின் இசை மேதைமை பற்றிய விபரங்களை ஆவணப்படுத்துவது இன்றைய தேவையாகும். தட்சணாமூர்த்தியின் கச்சேரிகளுடன் தொடர்புகொண்ட பதினைந்துக்கும் மேற்பட்ட இசைவாணர்கள் இன்றும் தமிழகத்தில் உள்ளனர். ஈழத்திலும் பலர் உள்ளனர். இன்னமும் தாமதித்தால், இவர்களில் பலரை நாம் சந்திக்க முடியாமலே போய்விடும். மேலும், தட்சணாமூர்த்தி அவர்கள் வளர்ந்த, வாழ்ந்த இடங்கள், அவர்தம் குடும்பத்தினர் நேர்காணல்கள், அவர் கச்சேரி நிகழ்த்திய இடங்கள் போன்ற அம்சங்களையும் தொகுத்து, அவரது இசைவாழ்வை நிரந்தரமாக்குவதற்கு விவரணப்படம் ஒன்றினைத் தயாரிப்பது இன்றியமையாதது. அவரது இசைப்பதிவுகளைத் தொகுத்து அடுத்த தலைமுறைக்கு அந்த இசையின் மேன்மையைக் கையளிக்கத் தவறின், அது அம்மாபெரும் மேதையின் இசைப்பணிக்கு நாம் இழைத்த துரோகமாக அமையும்.

எனவே, தட்சணாமூர்த்தி அவர்கள் பற்றிய விவரணப்படம் ஒன்றினைத் தயாரிப்பதும், அவர் பங்குகொண்ட இசைக் கச்சேரிகளைத் தேடித் தொகுத்து, வெளியிடுவதும் எம்முன் உள்ள தலையாய பணி. இப்பணியில் தட்சணாமூர்த்தி அவர்களின் தவில் இசையில் ஆர்வமும் மதிப்பும் கொண்டிருக்கும் அனைவரும் ஆத்மபூர்வமாக இணைந்து ஒத்துழைக்குமாறு அன்புடனும் பணிவுடனும் வேண்டுகிறேன். இதில், அவர் சார்ந்த தகவல்கள், அவர் சார்ந்த தேட்டங்கள் உள்ளிட்ட ஏதோவிதமான ஒத்தாசை புரிய வல்லவர்களின் ஒத்துழைப்பை நாடுகிறேன்.



அன்புடன்
இ. பத்மநாப ஐயர்

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD, United Kingdom
Phone: + 44 208 471 5636
email: pathmanabhan@gmail.com

பெங்களூரில் வசிக்கும் கர்நாடக சங்கீத மேதை ஆர்.கே. ஸ்ரீகண்டன் அவர்களுக்கு இந்த வருடத்துக்கான பத்மபூஷண் விருது கிடைத்திருக்கிறது. தாமதமானாலும் (ஸ்ரீகண்டனுக்கு வயது 91), சிறு அங்கீகாரமுமில்லாமல் மறைந்துவிட்ட மேதைகள் எத்தனையோ பேர்களைப் போல் ஆகாமல், இப்போதாவது கௌரவித்தார்களே என்று ஆறுதல்பட்டுக்கொள்ள வேண்டி யுள்ளது. கர்நாடகாவின் ருத்ரபட்டினம் கிராமத்தின் குடும்பத்தைச் சேர்ந்த ஆர்.கே. ஸ்ரீகண்டன் மைசூரில் நிலவிய வளமான சங்கீதச்சூழலை நேரில் கேட்டு அனுபவித்துக் கற்ற மேதைகளில் ஒருவர். சிறந்த கர்நாடக சங்கீத வித்வானாகப் பரிமளிப்பது மட்டுமில்லாமல், தேர்ந்த குருவாகவும் விளங்கித் தன் இசைப் பாரம்பரியத்தைப் பல சீடர்களுக்குக் கைமாற்றிக் கொடுத்தவர். அவர் தவில் தட்சணாமூர்த்தி பற்றிக் கூறுவது:

'அரசவையில் நடக்கும் கச்சேரிகளை Loudspeaker மூலம் பொதுமக்கள் கேட்பதற்காக ஒலிபரப்புவார்கள். நாங்கள் பூங்காக்களில் அமர்ந்து கேட்போம். நாதஸ்வரச் சக்கரவர்த்தி ராஜரத்தினம் பிள்ளை ஒருமுறை நவராத்திரிக்கு வந்திருந்து ஒரு வாரம் வாசித்தார். எப்பேர்ப்பட்ட மேதை, எப்பேர்ப்பட்ட வாசிப்பு! என் சங்கீத ரசனைக்கு நாதஸ்வரக் கச்சேரிகள் பெரிய ஊக்கம் தந்திருக்கின்றன. நாதஸ்வரத்தை ரசித்துக் கேட்டால் அது நம் கற்பனையை வளர்க்கும். அவர்களுடைய வாசிப்புக் கற்பனை அப்படிப்பட்டது. ஒரு ராகத்தை எவ்வளவு நேரம் அவர்கள் வாசிப்பார்கள்! ராக ஆலாபனைக்கு நாதஸ்வரம்தான் மூலம். அங்கப்ப பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை, வீருசாமி பிள்ளை, காருக்குறிச்சி அருணாசலம், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், வேதாரண்யம் வேதமூர்த்தி இவர்கள் வாசிப்பையெல்லாம் நான் கேட்டிருக்கிறேன். மீனாட்சிசுந்தரம், நாச்சியார்கோயில் ராகவ பிள்ளை, சிலோன் தட்சணாமூர்த்தி இவர்களெல்லாம் தவில் வாசிப்பார்கள். சிலோன் தட்சணாமூர்த்தி ஒரு பிறவி மேதை. பெங்களூர் தர்மராயா கோயிலில் நடக்கும் கரகாட்ட விழாவின்போது தவில் வாசிக்க சிலோன் தட்சணாமூர்த்தி வந்திருந்தார். என்ன அபாரமான வாசிப்பு!"
(நன்றி: சொல்வனம்)

அக்காலத்தில் பிரபல தவில் மேதையாக விளங்கிய நாச்சியார்கோயில் ராகவ பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து தவில் பயின்றவர் தட்சணாமூர்த்தி. ஒன்றரை ஆண்டு காலப் பயிற்சியின் பின் அவரது குருவான ராகவ பிள்ளை, 'உனக்கு இனி சொல்லித்தர என்னிடம் ஒன்றும் பாக்கியில்லை. ஒரு அபிப்பிராயம் காதில் விழுவதற்குள் உனது கைகளில் அது ஒலித்துவிடும்படியான கடவுளின் வரப்பிரசாதம் பெற்ற நீ, ஊருக்குத் திரும்பலாம். மகோன்னதமான பெயரும் புகழும் உன்னை வந்துசேர அதிக காலம் இல்லை' என ஆசீர்வதித்தார்.

திருமெய்ஞ்ஞானம் நடராஜசுந்தரம் பிள்ளை, தர்மபுரம் கோவிந்தராஜ பிள்ளை போன்ற பல்லவி வல்லுநர்கள், 'தட்சணாமூர்த்திக்குக் கற்பூர மூளை' என்று போற்றியிருக்கிறார்கள். இரண்டுங்கெட்டான் காலப்பிரமாணத்திலும் தண்ணீர்பட்டபாடு என்பதுபோல் தட்சணா மூர்த்தி வாசிப்பதை எண்ணுகையில், எல்லாம் பிரமிப்பைத்தான் உண்டு பண்ணுகிறது என்று மூத்த நாதஸ்வரக் கலைஞர் சிதம்பரம் ராதாகிருஷ்ணா பிள்ளை வியந்து பாராட்டுவதுண்டு. மிருதங்கத்தில் ஒப்பற்றவர்களான பாலக்காடு மணி ஐயரும் பழனி சுப்பிரமணிய பிள்ளையும் தட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பைக் கேட்டுவிட்டு, 'தட்சணாமூர்த்தி உலகத்தின் எட்டாவது அதிசயம்' என்று மணி ஐயரும், ஒருமுறை மனதால் நினைத்தாலே நம்மை வியப்பில் ஆழ்த்தும் மேதை' என்று சுப்பிரமணிய பிள்ளையும் புகழாரம் சூட்டியுள்ளனர்.

ஒருசமயம் கலைஞர்கள் சிலர் ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபோது, பேச்சு தட்சணா மூர்த்தியைப் பற்றித் திரும்பியது. 'நம்மை அவர் வாசிப்புப் பிரமிக்கச் செய்கின்றது. ஆனால், சட்டென்று புரிவதில்லை' என்று ஒருவர் சொன்னார். அப்போது, திருத்துறைப்பூண்டி சொக்கலிங்க நாதஸ்வரக் காரர் என்ற முதிர்ந்த கலைஞர், 'அவன் வாசிப்பு தெய்வீகமானது. அவனே கடவுளின் அவதாரம் தெரியுமா' என்றார். அவரைத் தொடர்ந்து, தவில் வித்வான் திருமுல்லை வாயில் முத்துவேற்பிள்ளை, 'தட்சணாமூர்த்தி வாசிப்பதைப் புரிந்து கொள்ளும்படியான தவிற்காரன் இப்போதைக்கு எவரும் இருப்பதாக எனக்கே தெரியவில்லை. அவன் வாசிப்பு உனக்குப் புரியாமலிருப்பதில் அதிசயம் என்ன?' என்று சொன்னார்.

(பூச்சொரியும் பொன்னொச்சி மரம் என்னும் நூலில் சிவசம்பு கந்தசாமி எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.)

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# வாழ்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Sell your home FASTER and More MONEY with

# Elaguppllai (Mike) Srinathan B.Sc

## Sales Representative

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

Email: esrinathan@trebnet.com




**When you list your home with MIKE you receive these Guarantees**

Your home advertised 24 hours a day until is sold
Your home advertised in full colour prints ads every week until it is sold
Our Team of Specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it*

**BIRCHMOUNT / ELLESMERE**



$230,900
Condo Apt.
Bedrooms 1+1, Washrooms 1

**McCowan / LAWRENCE**



$299,900
Detached Side Split 3,
Bedrooms 3+2, Washrooms 2

**MARKHAM / EGLINTON**



$335,000
Townhouse 3 Storey
Bedrooms 3, Washrooms 2

**SHEPPARD / MEADOWVALE**



$349,900
Townhouse 3 Storey
Bedrooms 3, Washrooms 3

**SHEPPARD / MEADOWVALE**



$369,900
Detached Side Split 3,
Bedrooms 4, Washrooms 3

**BRIMLEY / DENISON**



$379,000
Link 2 Storey
Bedrooms 3, Washrooms 2

**16th Ave / HWY 7**



$409,800
Link 2 Storey,
Bedrooms 3, Washrooms 2

**HOOVER PARK / 9th LINE**



$425,000
Detached 2 Storey
Bedrooms 3, Washrooms 3

**BUR OAK / MARKHAM**



$439,000
Detached 2 Storey
Bedrooms 3, Washrooms 3

**MARKHAM / BUR OAK**



$449,000
Detached 2 Storey
Bedrooms 3, Washrooms 3

**McCOWAN / DENISON**



$479,000
Link 2 Storey
Bedrooms 3+1, Washrooms 5

**MARKHAM / BUR OAK**



$489,900
Detached 2 Storey
Bedrooms 3, Washrooms 3

**HOOVER PARK / 9th LINE**



$489,900
Detached 2 Storey
Bedrooms 3, Washrooms 3

**MARKHAM / DENISON**



$559,999
Link 2 Storey
Bedrooms 4, Washrooms 3

**MARKHAM / 16th AVE.**



$563,888
Detached 2 Storey
Bedrooms 4, Washrooms 3

**FINCH / MORNINGSIDE**

DENISON



$569,900
Detached 2 Storey
Bedrooms 4+2, Washrooms 4

**16th AVE. / 9th LINE**



$599,900
Detached 2 Storey
Bedrooms 4, Washrooms 3

**BUR OAK / 9th LINE**



$618,000
Detached 2 Storey
Bedrooms 4, Washrooms 3

**9th LINE / 14 AVE.**



$618,999
9Detached Side Split 3,
Bedrooms 4+2, Washrooms 4

**MINTIS / NIGJTSTAR**



$639,000
Detached 2 storey
Bedrooms 4, Washrooms 3

**McCowan / CASTIEMORE**



$649,000
Detached 2 sTOREY
Bedrooms 4, Washrooms 4

**HARMONY / GRANDRIGE**



$314,900
Detached 2 Storey
Bedrooms 3, Washrooms 3

**SANDALWOOD / BRISDALE**



$389,500
Detached 2 Storey
Bedrooms 3, Washrooms 3

**McCowan / Sheppard**



$199,000
Condo Apt.
Bedrooms 3+1, Washrooms 2

**Automotive Related**



$3,990,000
Sale of Business
with Property

RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# மருந்து செலவுகளுக்கு மாகாண அரசு வழங்கும் இலவச சலுகை ‘றில்லியம் மருந்து திட்டம்’

## TRILLIUM DRUG PLAN - TDL

## கனடிய தகவல் தொடர் 159

அந்த மனிதன், நீரிழிவு நோய், குருதியில் கொழுப்பு என ஏகப்பட்ட உடல் கோளாறுகளுக்கு ஒரு மாதத்திற்கு என மருத்துவர் வழங்கிய மருந்து மாத்திரைகளை மூன்று மாதங்களுக்கு ஒழுங்கற்ற முறையில் விட்டு விட்டு எடுத்துக்கொண்டு வந்தார். மருத்துவர் அறிவுரைப்படி ஒழுங்கான முறையில் உட்கொள்ள வேண்டிய மாத்திரைகளை உட்கொள்ளாத காரணத்தினால் ஏகப்பட்ட உடல் கோளாறுகள் அவர் வாழ்வில் ஒரு உளைச்சலை கொடுத்துக்கொண்டிருந்தது.

‘எதற்காக மருத்துவர்களின் அறிவுரைப்படி மாத்திரைகளை ஒழுங்காக எடுக்காது விட்டீர்கள்? என வினவினால்
‘என் குறைந்த வருமானத்தில் அதிக விலை கொடுத்து மருந்துகள் வாங்க கட்டுபடியாகுமா? என்ன செய்வது? வாங்கிய மருந்துகளை கொஞ்சம் காலம் கூட வைத்து வைத்து உட்கொண்டேன்’ என ஒரு பெருமூச்சு பதில்’ ‘மருந்து செலவுகளுக் கென என் சிறு வருமானத்தின் பெரும்பகுதி காசு காசாக பறக்கின்றது’ என பலரிடமிருந்தும் வரும் இன்னொரு வகையான சோகக்குரல்’

இந்தப் பெரு மூச்சுகளுக்கும், சோகக்குரல்களுக்கும் நாம் சொல்லும் ஒரு சிறு வார்த்தை!

‘கனடாவில் எந்தப்பிரச்சினைக்கும் ஒரு தீர்வு உண்டு’ என்ற வழிகாட்டும் வசனமாகும். அது வேறு ஒன்றுமல்ல. பலருக்கும் தெரிந்த திட்டம். ‘றில்லியம் மருந்து திட்டம்’ (TRILLIUM DRUG PLAN - TDL) என்னும் ஒன்ராறியோ மாகாண அரசின் மருந்து செலவுகளுக்கான சலுகை திட்டமாகும். அதாவது வருமானம் குறைந்தவர் களுக்கென இம்மருந்து தேவைகளுக்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டிய நிலைமையில் உள்ளவர்களுக்கு மாகாண அரசு ஒரு இலவச சலுகை வழங்கி கைகொடுக்கின்றது.

**அந்த திட்டங்களை பற்றி எப்படி அறிந்து கொள்வது?**
**அதில் எப்படி சேர்ந்து சலுகைகளை பெற்றுக்கொள்வது?**
**அந்த சலுகைகள் சகலருக்கும் சாதகமாக கிடைக்குமா?**
போன்ற கேள்விகளே அடுத்த கட்டமாக எல்லோருக்கும் எழும் என்பதில் சந்தேகமேயில்லை?

தகவல்கள் தேடும் தளமான www.google.ca என்னும் இணையதளத்தினுள் சென்று ‘ONTARIO TRILLIUM DRUG PROGRAM என்ற ஆங்கில சொற்றொடரினை பதிவு செய்யுங்கள். அந்த இடத்திலிருந்து இது தொடர்பான வழிகாட்டல்களையும் பாடங்களையும் இலகுவாக அறிந்து கொள்ளலாம். அங்கிருந்து விண்ணப்ப படிவங்களை பதிவு இறக்கம் செய்து நிரப்பி அதில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



சரி இன்னொரு வழி!

ஒன்ராறியோ மாகாணம் முழுவதும் உள்ள அனேகமான மருந்துக்கடைகளில் ‘றில்லியம் மருந்து திட்டம்’ தொடர்பான தகவல் கையேடு, விண்ணப்ப படிவங்கள் தந்து உதவ முடியுமா? என கேட்டாலும் அனேமாக கிடைக்கும். மாகாண சுகாதார அமைச்சின் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். அவற்றினை நிரப்பி அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியதுதான். ஒருமுறை அனுப்பி விட்டால் போதும் பின்னர் ஒவ்வொரு வருடமும் அவர்களாகவே புதுப்பித்துக் கொள்வார்கள். ஒரே விண்ணப்பதில் முழு குடும்பத்தவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு இச்சலுகையினை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

இவ்விண்ணப்பத்தில்
• முழு பெயர், ஆணா? பெண்ணா? என்ற விபரங்கள். பிறந்த திகதி, ஆண்டு, முகவரி, தொலைபேசி இலக்கம்.

• சமூக காப்புறுதி இலக்கம் (Social Insurance Number)

• ஒன்ராறியோ மாகாண மருத்துவ சுகாதார இலக்கம் (Ontario Health Card Number)

• கனடாவின் வருமான வரி நிறுவனத்திற்கு சமர்பிக்கப்பட்ட தேறிய வருமானம் (Personal Net Income) இங்கு இத்துடன் வருமான வரி தாக்கல் செய்த பின்பு நிறுவனத்திடமிருந்து அனுப்பி வைக்கும். ‘வருமான மதிப்பீட்டு பத்திரத்தின்’ (Income Assessment statement) பிரதியினை அனுப்புவது நல்லது.

• மருந்துகள் வாங்குவதற்கு வேறு ஏதாவது காப்புறுதி திட்டமிருந்தால் அவை பற்றிய விபரங்கள்.

கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் வழங்கி விண்ணப்பத்தில் கைச்சாத்திட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அனுப்பி வைக்க வேண்டிய விலாசம் கையேட்டு சிறு புத்தகத்திலும், விண்ணப்ப படிவத்திலும் தெளிவாக தரப்பட்டிருக்கும். விண்ணப்பம் பரிசீலனை செய்து ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் ஒரு கடிதம் அனுப்புவார்கள். அதில் ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த கடிதத்தினை மருந்துகள் வாங்கும் கடையில் தங்களின் மருத்துவ காப்புறுதி இலக்க அட்டையுடன் சேர்த்து பதிந்து கொண்டால் தொடர்ந்து அரச பணத்தில் மருந்துகளை வாங்கிக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு முக்கிய விடயம்.

வருமானவரி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொருவரின் தேறிய வருமானத்திற்கு ஏற்றமாதிரி (Family or Individual Net Income) மருந்து செலவின் ஒரு சிறு பகுதி தங்கள் சொந்த பணத்திலிருந்து செலுத்த வேண்டும். அந்த தொகை (Deductible) எவ்வளவு என்பதனை சுகாதார அமைச்சு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கும்.
(அந்த ஒரு வருட காலம் என்பது ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 01 ஆம் திகதியிலிருந்து அடுத்த வருடம் யூலை 31 வரை என நிர்ணயிக்கப்படும்)

உதாரணமாக குறிப்பிட்ட ஒரு வருடத்திற்கு மருந்து செலவுகளுக்கு தங்களின் சொந்தப் பணமாக செலுத்த வேண்டியது $400 டொலர் என்றால் அதற்கு மேலாக உள்ள தங்களின் பண செலவினை அரசு செலுத்திக் கொள்ளும். இந்த $400 டொலாரும் ஒரு வருடத்தின் ஒவ்வொரு மூன்று மாதம் என நான்காக பிரித்து அந்த ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் $100 (Deductible) வரை செலுத்த வேண்டும். மருந்துகளுக்குரிய செலவு குறிப்பிட்ட இப்பன்னிரண்டு மாதங்களுக்குள் குறைவானதாகவும் இக்காலங்களுக்குள் அரசுக்கு மனு செய்யும் தேறிய வருமானம் அதிகமாகவும் இருந்து தங்கள் மருந்துச்செலவில் தங்கள் கொடுப்பனவு (Deductible) என்பது வாங்கும் மருந்துத் தொகையினை விட அதிகமாக இருந்தால் இத்திட்டம் பெரிய பிரயோசனமாக இருக்க மாட்டாது. மறுதலையாக வருமானம் குறைந்த நிலையில் அதிகமான மருந்துகளுக்கு செலவழிக்க வேண்டிய நிலையில் உள்ளவர்களுக்கே இத்திட்டம் பிரயோசனமாக இருக்கும்.

வாங்கப்படும் ஒவ்வொரு மருந்தும் சுகாதார அமைச்சின் மருந்துகள் அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டு (Covered every medication by trillium drug program) அனுமதி பத்திரம் பெற்ற மருத்துவரினால் உபயோகிக்கலாம் என உத்தரவு (Prescribed by licensed & Physician) வழங்கப்பட்ட நிலையிலும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் நிலையிருப்போர் மட்டும் இதில் சேர்ந்து கொள்ள தகைமையுடையவர்கள் ஆவார்கள்!. அவையாவன பின்வருமாறு

1. கனடாவின் வருமான வரி நிறுவனத்திற்கு வருடம் தோறும் தவறாது தங்களின் வருமானம் தொடர்பாக மனு செய்பவர்கள்.
2. மாகாண சுகாதார மருத்துவ காப்புறுதி அட்டை வைத்திருப்போர்.
(OHIP CARD HOLDERS)
3. ஏற்கெனவே இலவசமாக மருந்துகளை வாங்கும் எந்தவொரு திட்டத்திலும் சேர்ந்து நிவாரணம் பெறாதவர்கள்.

உதாரணமாக சமூக உதவி பணம் பெற்று வாழ வேண்டிய நிலையில் உள்ள ஒன்ராறியோ வாசிகள் (Social Assistance Recipient) நீண்ட கால மருத்துவ விடுதி அல்லது விசேட மருத்துவ கவனிப்பில் இருக்கும் ஒன்ராரியோ வாசிகள் (Ontario Residents Who Reside in long term care home for special care), 65 வயதிற்கு மேற்பட்டோர் யாவருக்கும் வேறு திட்டங்கள் மூலம் இலவசமாக மருந்துகள் வாங்கும் வசதிகள் உள்ளபடியால் இவர்கள் இவ் ‘றில்லியம் மருந்து திட்டத்தில்’ சேர்ந்து கொள்ள முடியாது.

4. சொந்த மருந்து காப்புறுதி திட்டங்களோ (Personal drug coverage) அல்லது தொழில் செய்யும் இடங்களில் குழுவான



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# மரபணுக்களைக் குறைசொல்வோம்!

கடந்த இதழ் தொடர்ச்சி...

## 1. சுயநலம்?

ஐயர் காட்டுகிறார் தீபத்தை
அடியார் பலர்
முந்தி அடித்து
மூலத்தானத்தை மொய்த்துக் கொண்டு
கும்பிடுகின்றனர் வேகத்தில் -

பின்னால் நிற்பவர்களைப்பற்றி
எந்தக் கவலையுமின்றி!

## 2. பத்தி?



தொண்டர்கள் தூக்குவர்
சுவாமியைத் தோள்களில்
கண்ட கல்லொன்றினைக்
காவுவதைப்போல!

தேங்காயை உடைக்கிறார்
தேருக்கு முன்னால்
ஆங்காரம் குடைபிடித்து
ஆடுவதைப்போல!

## 3. அவசரம்?

கோயிலில் சொற்பொழிவு -

கும்பிட ஒருவர் வருகிறார்
ஆவலில் சுற்றி வருகிறார்
அர்ச்சனையும் செய்விக்கிறார்
வீசி நடந்து வெளியேறுகிறார்
பேசப்படுகின்ற சிவப் பொருளின்
பெருமையைச் சிறிதும் கேளாமலே!

## 4. சலிப்பு?

கோயிலில்
பத்தி நூல் வெளியீடு -

தொடக்கத்தில்
நல்ல கூட்டம் -
கூட்டத்தைக் கண்டு
பேச்சாளர்கள் உற்சாகத்தில் ஊறினர்
நூலாசிரியர்
பதிலுரைக்கு எழுந்தபோது
அந்தணரும் குடும்பத்தவருமாக
ஐந்தாறு பேர் தேறினர்!

## 5. வாடை!

கும்பிட வந்தவர் கேட்டார்:
'எப்படி இருக்கிறியள்?'

அந்த அக்கறை
குப்பென்றென்று கொட்டிய
காற்று
இறைவனையும்
குமட்ட வைத்திருக்குமோ என்னவோ -
அந்த அளவுக்கு
அடித்தது மது நாற்றம்!

## 6. பசியாறல்?

சோறு கொடுத்தார்கள் கோயிலில் -
தாறுமாறாக நின்றவர்கள்
வரிசை கட்டினர்
முடிவில் -
கையால் ஏந்திப் பெற்ற சோற்றைக்
காலால் மிதித்தவாறு
நடையைக் கட்டினர்!

## 7. கொந்தல்

ஒன்றாக இருந்து பலபேர்
நடத்தினர் 'பசனை' -
நன்றாகப் பாடினர் பாடல்களை
நன்றாக இசைத்தனர் வாத்தியங்களை
என்றாலும்
அதில் ஒன்று இல்லாமல் இருந்தது
-பத்தி!

கோயிலிலாயினும் பிற பொது இடங்களிலாயினும் தும்மல் வந்தால் அல்லது மூக்குச்சளி வழிந்தால் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றுகூடச் சில பெரியவர்களுக்குச் சின்னப் பிள்ளைகள் மாதிரிச் சொல்லிக் கொடுக்க வேண்டியும் இருக்கிறது. சில பழக்க வழக்கங்கள் எமது இரத்தத்திலேயே ஊறிவிட்டன. நல்லனவற்றைப் பின்பற்ற வேண்டும். அல்லனவற்றைப் பின்தள்ள வேண்டும்.

தமிழினம் ஓர் உயர்ந்த இனம் என்பதைச் சொல்லால் மட்டுமன்றிச் செயலாலும் - நடத்தைகளாலும் நிலைநாட்ட வேண்டும்!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய இம்மூன்றையும் ஒவ்வொருவரும் கடைப்பிடித்து வாழ வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்திச் சென்றவர் அறிஞர் அண்ணா அவர்கள். தனிப்பட்ட வாழ்விலன்றிப் பொது வாழ்விலும் தனியிடங்களன்றிப் பொது இடங்களிலும் இவற்றைப் பின்பற்றி மதிப்பாக வாழ்வோமாக!



கவிஞர் வி. கந்தவனம்


# உலக மகா இந்துக்கள் ஸ்தாபனத்தாரின் சேவைகள்

***www.mahahindu.org***

All kind of community, religious and cultural services are available in Tamil, Hindi, Punjabi and English in Scarbrough, Toronot, Brampton and Mississauga areas.

புதிதாகக்கனடாவுக்கு குடியேறியவர்களுக்கும் இருக்க இருப்பிட வசதியற்றவர்களுக்கும் வீட்டுவசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் இலவச அத்தியாவசிய உபகரணங்களும் வழங்கப்படும்.

Those who are having problem in getting social assistance, ODSP or any other benefits, are welcome to contact us for immediate service.

வேலை செய்யமுடியாதவர்களுக்கு ஆயுட்கால நிரந்தர உதவிப்பணம் பெற்றுக்கொடுப்பதுடன் அரசசார்பற்ற ஸ்தாபனங்களினால் கொடுக்கப்படும் உதவிகளும் எடுத்துக்கொடுக்கப்படும்.

Volunteers are needed in Ectobicoke and Scarbrough areas. Those who are working as full time volunteers will be eligible for various benefits.

வாகன சம்மந்தமான பிரச்சனைகள் நேருமிடத்து நீதிமன்றம் போகாமலே அவற்றில் இருந்து விடுவித்துக்கொள்வது சம்மந்தமான சட்ட ஆலோசகர்கள் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

***We are with you in all your need and for all kind of services of our community***

தொடர்புகட்கு: ***Shakthi: 416 992 7882,*** *4 Vange Cre. Etobicoke, ON, M9V 3N7*

# அவுஸ்திரேலியா...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

ஈழத்துக்கான உறுதியும் கிடைக்கும்வரை சேர்க்கக்கூடாது என்றும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கோரிக்கை விடுத்தனர்.




இதைச் செய்யும் அதிகாரம் காமன்வெல்த்துக்கு உள்ளதாகக் கூறிய அஜந்தி, ஏற்கெனவே பாகிஸ்தான், பிஜி, நைஜீரியா, ஜிம்பாப்வே போன்ற நாடுகளை நீக்கிய சம்பவத்தை நினைவூட்டினார்.

## தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கான பொங்குதமிழ்!

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், கனடாவின் தற்போதைய தமிழர் சார்பான வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒரு சர்வதேச போர்க்குற்றவிசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் சர்வதேசத்திடம் நீதிவேண்டி மாபெரும் பொங்குதமிழ் நிகழ்வு ரொறொன்ரோவில் ஒக்ரோபர் 29, 2011 இல் நடைபெற்றது. இந்த பொங்குதமிழ் நிகழ்வு ஒன்ராறியோ நாடாளுமன்றத்திடலில் நடைபெற்றது.



தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்திற்கு கனேடியத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் கனடியச் சமாதானக் கூட்டமைப்பு (CPA) உட்பட போரிற்கு எதிரான அமைப்புக்கள் மாணவர்கள் தொழிற்சங்கங்கள் சமூக மற்றும் மதக்குழுக்கள் என அனைத்து அமைப்புக்களும் தங்களின் ஒன்றிணைந்த ஆதரவினைத் தெரிவித்துள்ளார்கள். கனடாவின் 180 அமைப்புக்களைக் கொண்ட கனேடியச் சமாதானக் கூட்டமைப்பு (CPA) தமிழரின் தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற சுயநிர்ணய உரிமைகளை ஏகமனதாக அங்கீகரித்ததோடு இலங்கை அரசானது இனச்சுத்திகரிப்பு, அத்துமீறிய குடியேற்றம், கொடூரக்கொலைகள் மற்றும் வடக்கு கிழக்கில் சட்டரீதியிலான ஆட்சிமறுப்பு என்பவற்றின் மூலம் நடைபெறும் இனப்படு கொலையை உடனடியாக நிறுத்தவேண்டும் என கனேடியத் தமிழர் தேசிய அவை அழைப்பு விடுத்திருந்தது.

இப்பொங்குதமிழ் நிகழ்வில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பங்குபற்றியிருந்ததாக ரொறொன்ரோ சண் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# அதிகரித்துச்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

இதேபோன்றதொரு முயற்சி மன்னார் மாவட்டத்தின் தென்பகுதியிலும் மேற்கொள் ளப்படுவதாகத் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

அதேவேளை, வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்காக உத்தேசிக்கப் பட்டுள்ள கிராமசேவையாளர் பிரிவுகளின் எல்லைகளை மாற்றி அமைத்து புதிய பிரதேச செயலகப் பிரிவுகளை உருவாக்குவதன் மூலம் வவுனியா நகரத்தை உள்ளடக்கியதாக இப்போது உள்ள வவுனியா பிரதேச செயலகப் பிரிவை சிங்களப் பிரதேச செயலகப்பிரிவாக மாற்றியமைப் பதற்கான சூழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. இதுபோன்ற, மக்கள் மீதான அடக்கு முறைகள், நில ஒடுக்கு முறைகளுக்கு அப்பால் தமிழ் மக்கள் மீதான அரசியல் நெருக்குவாரங்களும் இடம்பெற்று வருகின்றன.

நீண்டகால யுத்தம் ஒன்றினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு பேரழிவுக்கு உள்ளாகியிருக்கின்ற வடக்கு கிழக்குப் பிரதேசங்களைப் புனரமைத்து, அந்தப் பகுதிகளை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய கட்டாயத் தேவை இருக்கின்றது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதில் இந்தப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்யப் பட்டுள்ள மக்களால் தேர்தல்களின் மூலம் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள பிர- திநிதிகளின் பங்களிப்பையும் செயற்பாடு களையும் முன்னெடுக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

மீள்குடியேற்றப் பகுதிகளில் மேற்கொள்ளப் படுகின்ற மீள்கட்டமைப்பு, உட்கட்டமைப்பு வசதி- களைச் செய்தல், அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளிலும், அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் அந்தப் பிரதேசத்து மக்களின் கருத்துக்கள், நிலைப்பாடுகள், ஆலோசனைகள் என்பன பெறப்பட வேண்டியதும் முக்கியமாகும்.

இவ்வாறான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெறாமல் வெளியாட்களாகிய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் அந்த அந்தப் பிரதேசங்களின் பூகோள அமைப்பு, காணி உரிமம் போன்ற பல்வேறு நிலைகளில் பிரச்சினைகளை உருவாக்கியிருக்கின்றன.

வெறும் அரசியல் பிரசாரத்திற்கும், மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நேர்த்தியாக மேற்கொள்ளப்படுகின்றன என்று வெளியுலகுக் குக் காட்டும் வகையிலேயே பல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த வேலைத் திட்டங்கள் தொடர்பாக திட்டமிடுதல், அவற்றைச் செயற்படுத்தும்போது மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வு நடவடிக்கைகள் என்பவற்றில் சம்பந்தப்பட்ட பொதுமக்களோ அல்லது அவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோ கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

பொதுவான மீளாய்வு கூட்டங்கள் குறிப்பாக மாவட்டம் சார்ந்த அல்லது மாகாணம் சார்ந்த கூட்டங்களுக்கு மட்டுமே மாற்றுக் கட்சி உறுப்பினர்களாகிய தமிழ்த்தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும் அழைக்கப்படுகின்றார்கள். அதுமட்டுமன்றி, வடபகுதியில் பெரும்பான்மை பலத்தைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றிருக்கின்ற போதிலும், அபிவிருத்திச் செயற்பாடுகளின் தலைமைப் பொறுப்பு அரசகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களிடமே வழங்கப்பட்டிருக்கின்றது.

இதனால் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் பிரதி நிதிகளும் பொதுமக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் அத்தியாவசிய வேலைத்திட்டங்களில் பங்களிப்பு செய்ய முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

இதனால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் செல்லாக்காசு நிலைமைக்கே தள்ளப்பட்டிருக்கின்றார்கள். செயலளவில் எதனையும் செய்ய முடியாத கையறு நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக் கின்றார்கள். இதனால், தங்களைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்துள்ள பொதுமக்களுக்கு எந்த வகையிலும் சுயமாக சேவையாற்ற முடியாத நிலையில் இருக்கின்றார்கள். இவர்கள் மக்கள் பிரதி நிதிகளாக நாடாளுமன்றத்திலும், மற்றும் சபைகளிலும் அமர்ந்திருந்தாலும், அரசியல் ரீதியாக மக்களுக்கு எதனையும் செய்ய முடியாதவர்களாகவே காணப்படுகின்றார்கள். அதுமட்டுமன்றி சரியோ, பிழையோ அரசாங்கம் முன்னெடுக்கின்ற வேலைத்திட்டங் களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் சம்பந்தப்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள், தேவைகளை உள்ளடக்கியதாக அந்தத் திட்டங்களைச் செம்மைப்படுத்தும் ஆற்றல் அற்றவர்களாகவும் இருக்கின்றார்கள்.

உதாரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள காணிகளைப் பதிவு செய்ய வேண்டும் என்ற அரசாங்கத்தின் திட்டமானது தமிழ் மக்களைப் பெரிதும் பாதிக்கத்தக்கதாக அமைந்திருக்கின்ற போதிலும், அதனைத் தடுத்து நிறுத்தவோ அல்லது அந்தத் திட்டத்தில் உள்ள பாதகமான அம்சங்களை நீக்கி, அவர்களுக்கு நன்மை பயக்கத்தக்க வகையில் அதனைத் திருத்தியமைப்பதற்கோ முடியாதவர்களாக



இருக்கின்றார்கள். இதுபோலவே தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகளிலும் செல்வாக்கு செலுத்த முடியாத அரசியல்வாதிக- ளாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் இருக்கின்றனர். இதனால் அவர்கள் மோசமான ஓர் அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

பாதிப்புகளைச் சுட்டிக்காட்டி அவற்றிற்கு நிவாரணம் அல்லது நியாயம் கேட்கும்போது அவர்களது கோரிக்கைகள் அரசாங்கத்தினால் உதாசீனம் செய்யப்பட்டு வருகின்றன. அது மட்டுமன்றி இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் அமைதியான வழியில் அழுத்தங்களைப் பிரயோகிக்கும்போது அவர்கள் மீது குழப்பம் விளைவிப்பவர்கள் என அரசாங்கத் தரப்பினர் குற்றம் சுமத்துகின்ற போக்கும் காணப்படுகின்றது. இனப்பிரச்சினைக்கு ஓர் அரசி யல் தீர்வு காண வேண்டும் என்ற முயற்சியிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரை அரசு உதாசீனம் செய்வதும், அவர்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் தீர்வு தொடர்பான முயற்சிகள், நடவடிக்கைகளை பெயரளவில் மேற்கொள்வதும் இத்தகைய ஓர் அரசியல் நெருக்கடியைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்குக் கொடுப்பதற்கே ஆகும். இதன் மூலம் அற்ப சலுகைகள், பொய் வாக்குறுதிகள், ஏமாற்று வித்தைகளின் மூலம் தமிழ் மக்களை, அரசாங்கம் தன் பக்கம் முழுமையாகத் திசை திருப்புவதற்கு முயன்று வருகின்றது. எனவே அரசாங்கத்தின் அடக்குமுறைகள், அரசியல் நெருக்கடிகளில் இருந்து தமிழ் மக்களும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் எந்த வகையில் மீட்சியடையப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை.

# அளப்பரிய ஆசீர்வாதம்

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கென்று ஒரு கதை உண்டு. வாழும்போது அது வாழ்க்கையின் அங்கமாக அமைந்து விடுகிறது. வாழ்வு முடிந்ததும் அது வரலாறாகிவிடுகிறது. பிறப்பிலிருந்து ஆரம்பமாகும் எமது கதை எமது எதிர்பார்ப்பின் தன்மையைப் பொறுத்தோ அல்லது எமது தேடுதலைப் பொறுத்தோ அதன் அத்தியாயங்களை உருவாக்குகின்றது. எமது வாழ்க்கையின் அத்தியாயங்கள் எத்தனை என்பது எமக்குத் தெரிவதில்லை. ஆனால் எல்லோருக்குமே பொதுவானதாக அமைவது மூன்று அத்தியாயங்கள் தான். பிறப்பு - வாழ்வு - இறப்பு. இந்த மூன்றில் பிறப்பும் இறப்பும் எமது கையில் இல்லை. ஆனால் வாழ்வு என்பது வாழ்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் வரை அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் தான் தங்கியுள்ளது.

மனிதனாகப் பிறத்தல் அரிது, வாழ்க்கை ஒரு வரப்பிரசாதம் என்றெல்லாம் நாம் வார்த்தைகளூடாக அறிந்துள்ளோம். ஆனால் அதன் உண்மையான அர்த்தம் என்பது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. அது அனுபவத்தால் மட்டுமே உணரக்கூடியது. எப்படி மனித வாழ்க்கை ஒரு அளப்பரிய கொடையாகிறது என்பதை திரு. சரண் ஆனந்த் அவர்களது வாழ்க்கையின் அனுபவத்துளிகள் மூலம் பார்ப்போம்.

இந்த அக்டோபர் மாதம் 16ம் திகதி மகராஜியின் அமைதியின் குரல் (Words of Peace) பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக ரொறொன்ரோ வந்திருந்த திரு. சரண் ஆனந்த் (Charan Anand – Ambassador for Words of Peace) அவர்கள் எண்பது வயதைத் தாண்டிய இருபது வயது இளைஞர். உள்ளத்தில் அமைதியும் ஆனந்தமும் இருந்தால் வாழ்க்கைக்கு வயதெல்லை கிடையாது என்பதற்கான உதாரண மனிதர். வாழ்க்கைக்கு வயதெல்லை இல்லாதபோது உடம்புக்கான வயது ஒரு கணிப்பீடு மட்டுமே என்பதை உறுதிப்படுத்தும் சரண் ஆனந்த் அவர்கள் ஒவ்வொரு மனிதனும் தனது நாளந்த வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து, தனதும் தன்னைச் சார்ந்தவர்களதும் நன்மைக்கான பொறுப்புக்களை முழு மனதுடன் ஏற்று வாழ்க்கையை நகர்த்த முடியும் என்பதையும் அந்த நகர்வுக்குள்ளேயே தனக்கே உரியதான முழுமையான ஆனந்தத்தையும் அனுபவிக்க முடியும் என்பதையும் பகிர்ந்த போது முக்கியமாக நான்கு விடயங்களைக் குறிப்பிட்டார்.

முதலாவதாக, எமது உடம்பு மிகப் பெரிய கிருபை. உலகில் படைக்கப்பட்ட உயிரினங்கள் அனைத்தும் உடம்பைப் பெற்றிருந்தாலும் மனித உடலின் தன்மையைப் போன்று வேறு எந்த உயிரினத்துக்கும் கிடையாது. இந்த உடலால் மட்டுமே அளவுகடந்த ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். எனவே எமக்குக் கிடைத்துள்ள இந்த உடம்பை சாதாரணமாகக் கருதாமல் ஒரு அளப்பரிய கொடை என்பதை ஒவ்வொரு கணமும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, வாழ்க்கை எத்தனை சவால்களைச் சந்தித்தாலும், மேடுபள்ளங்களைக் கண்டாலும், வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய கருத்துரைகளை நாமாகத் தேடிக் கண்டுகொள்ளல் வேண்டும். அவ்வாறான கருத்துரைகள் இயல்பாகவே மனிதனிடம் உள்ள ஆனால் வெளிப்புற விடயங்களால் மறைக்கப்பட்டுள்ள உள்ளத்தின் ஆனந்தம் எனும் மெய் உணர்வை, மெய்ப் பொருளைத் தேடும் தாகத்தை உருவாக்கும். மூன்றாவதாக, அந்தத் தேடுதலின் மூலம் அந்த மெய் உணர்வை வார்த்தைகளும் பிரார்த்தனைகளும் தரப்போவதில்லை என்பதை உணர்ந்து, அனுபவ ரீதியாக மட்டுமே அது சாத்தியமாகும் என்ற தெளிவுடன், அந்த அனுபவத்தை நேரடியாகத் தரக் கூடிய தகுதியுடன் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் குருவுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

நான்காவதாக, குருவின் கருணையுடன் உள்ளத்தின் தாகமான அளவில்லா ஆனந்தத்தை அனுபவிப்பதுடன் வரையறை இல்லாமல் எல்லோரும் பயன் பெறக் கூடியதாக எமது வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். ஐயத்துக்கிடமின்றி இவை அனைத்தும் ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியமானது என்பதை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் சரண் ஆனந்த் அவர்களைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பும் ஒரு அளப்பரிய ஆசீர்வாதமே.

- நன்றியுடன் KG Master

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலி யிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

# ஒக்ரோபர் 31, 2011இல் உலக சனத்தொகை 7,000,000,000



இந்த வருட ஹலோவீன் (Halloween) தினம் உலக சனத்தொகையில் ஒரு புதிய அளவு கோலை ஏற்படுத்த இருக்கின்றது. சனத்தொகை ஒவ்வொரு செக்கனும் அதிகரித்தே வருகின்றது. ஆனால் உலகில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் இருக்கும் நிலத்தின் அளவில் பெரிதாக மாற்றம் ஏற்படவில்லை. ஏறக்குறைய கடந்த 60 வருடங்களாக முன்னேற்றமடைந்த நாடுகளின் (ஐரோப்பிய நாடுகள், வடஅமெரிக்க நாடுகள், ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து) சனத்தொகையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. ஏறக்குறைய 1.3 மில்லியன் சனத்தொகை இருந்தபோதிலும், மற்றைய நாடுகளின் சனத்தொகை கிட்டத்தட்ட இதே தொகையிலிருந்து 4 பில்லியனிற்கு மேலான எண்ணிக்கையால் அதிகரித்துள்ளது. உலக சனத்தொகை புள்ளிவிபரங்களின்படி 1804 ஆம் ஆண்டு வரை, ஒரு பில்லியன் மக்கள் உலகில் வாழ்ந்துள்ளனர். 1927 ஆம் ஆண்டு 2 பில்லியனாக அதிகரிக்க ஏறக்குறைய 123 வருடங்கள் எடுத்துள்ளது.

| ஆண்டு | சனத்தொகை | பில்லியனை அடைய எடுத்த ஆண்டு |
|---|---|---|
| 1804 | 1 பில்லியன் | - |
| 1927 | 2 பில்லியன் | 124 வருடம் |
| 1959 | 3 பில்லியன் | 28 வருடம் |
| 1974 | 4 பில்லியன் | 15 வருடம் |
| 1987 | 5 பில்லியன் | 13 வருடம் |
| 1998 | 6 பில்லியன் | 11 வருடம் |
| 2011 | 7 பில்லியன் | 13 வருடம் |
| 2025 | 8 பில்லியன் | 14 வருடம் |

இவ்வாறான சனத்தொகையின் அதீத அதிகரிப்பிற்கு மக்களின் ஆயுட்கால அதிகரிப்பையும் (1950 இல் சராசரி ஆயுள் 48 ஆண்டுகள், 2011 இல் சராசரி ஆயுட்காலம் 69) முன்னேறி வரும் நாடுகளில் கட்டுப்பாடற்ற சனத்தொகை அதிகரிப்பையும் காரணமாக கொள்ளலாம். மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளில் ஏற்படும் குறைந்தளவான சனத்தொகை அதிகரிப்பு, நீண்டகாலம் வாழும் மக்கள் உலகின் ஒரு பகுதியில் அதீத சனத்தொகை அதிகரிப்பு, இன்னொரு பகுதியில் சனத்தொகையின் வீழ்ச்சி அத்துடன் வயதானவர்களின் அதிகரிப்பு போன்றவை பொருளாதார எதிர்காலத்தின் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். அனேக ஆபிரிக்க நாடுகளில் ஏற்படும் அதிகரிப்பும், வறுமையும், மேற்குலகநாடுகளில் மேலதிக தாக்கத்தையும் ஏற்படுத்தலாம்.

உலகின் ஒரு பகுதியில் காணப்படும் அதீத சனத்தொகை அதிகரிப்பு, எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் இருப்பிட நெருக்கடி, உணவு நெருக்கடி போன்றவற்றை சமாளிக்க இன்றே போதிய திட்டங்கள் தேவை.

| நாடு | சனத்தொகை |
|---|---|
| சீனா | 1.3 பில்லியன் |
| இந்தியா | 1.2 பில்லியன் |
| அமெரிக்கா | 312 மில்லியன் |
| பிரேசில் | 191 மில்லியன் |
| இந்தோனேசியா | 238 மில்லியன் |
| பாகிஸ்தான் | 172 மில்லியன் |

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -



மஹாராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219

# தசையைச் சுமப்பவர்கள்: இவர்கள் ஒரு தனியுலகம்

மனப்பாரத்தைச் சுமப்பவர்கள், குடும்ப பாரத்தைச் சுமப்பவர்கள் பற்றி அறிந்திருக்கின்றோம். ஆனால், இந்த தசையைச் சுமப்பவர்கள் யார்? என்ற கேள்வி எழலாம். இவர்கள் வேறு யாருமல்ல, பல்வேறு உடலியற் காரணிகளால் பாரத்தைக் கூட்டி முருங்கு போல் பருத்த உடலை உடையவர்கள் தான் இவர்கள். இன்று எந்த பத்திரிகையை புரட்டினாலும் இந்நிறை கூடிய (Obesity) மனிதர்கள் பற்றிய ஆய்வுகளையே காணமுடிகிறது. அளவுக்கு மீறிய உணவினை உண்பதுடன் அடிக்கடி உண்ணுகின்ற இவர்கள் பல வளர்ச்சியடைந்த நாடுகளில் பிரச்சினைக்கு உரியவர்களாகின்றார்கள். பல நூறு வருடங்களுக்கு முன்பாக ‘உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு’ என்று ஔவையார் கூறியது இப்போது ஆண்களுக்கும் தேவைப்படுகிறது. உணவுப் பிரியர்களான இவர்களின் செயற்பாடுகள் மிகவும் வித்தியாசமானவை. இவர்கள் எவர் முன்னிலையிலும் ஏதாவது ஒரு உணவை இயந்திரம் போன்று அரைத்துக் கொண்டிருப்பார்கள். சராசரி ஒருவருடைய உயரத்திற்கு மேல் நிறை கூடிவருகின்ற வேளையில் அவ்வளவும் தசைகளால் நிரப்பப்படுகின்றன. ‘பருத்த உடலே பேரழகு’ என்ற புதுமொழியுடன் உலாவரும். இவர்கள் சங்கம் அமைந்துள்ளனரென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.!

இன்று வளர்ச்சியடைந்துள்ள பல நாடுகளிலும் மூலைக்கு மூலை உணவகங்களை காணமுடிகிறது. உலகம் முழுவதிலும் நிறுவப்பட்டுள்ள மக்டொனால்ட் உணவு சேவை மட்டுமன்றி கென்ரக்கி நிறுவனம் பல கிளைகளை அமைத்துள்ளது. இது தவிர பல சிறிய உணவகங்களும், நொறுக்குத்தீனி விற்பனைசாலைகளும் அன்றாடம் புதிது புதிதாக முளைக்கின்றன. இன்று கவர்ச்சியுள்ள வசனங்களையும் விளம்பரங்களையும் கையாண்டு பலரையும்



கவர்ந்திழுக்கின்றன. ஒரு சமூகப்பழக்கமாக பிள்ளைகள் கூடியிருந்து இங்கு உண்ணுவதில் பெரு விருப்புள்ளவர்கள். மேலைத்தேசத்தவர் வரிசையில் எமது குழந்தைகளும் படிப்படியாக இத்தீனிகளுக்கு அடிமையாகி வருகின்ற நிலையில் அளவுக்கு மீறிய உடற்பருமன் பெற்றுவிடுவதற்கு வாய்ப்புண்டு. இனிப்புடன் தொடர்புடைய பல சொக்கிளேற் நிறுவனங்களும், ஐஸ்கிறீம் கடைகளும் மேலதிகமாக இக்குழந்தைகளை புதியதொரு உலகிற்கு இட்டுச் செல்லுகின்றன. இதன் விளைவுகளால் தான் தசை கூடிய அல்லது பருத்த உடல் உள்ளவர்கள் உருவாகுகின்றார்கள். சராசரி ஒருவருக்கு தேவையான உடலைவிட மேலதிகமாக நிறை கொள்ளுகின்றார்கள். இயந்திரத்திற்கு ஏதாவது போடுவது போன்று பலர் முன்னிலையில் தமது வாய்க்குள் எதனையும் போட்டு மென்று கொண்டிருக்கும் இவர்களால் பல அரசுகளுக்கு பிரச்சினை எழுகின்றது. போக்குவரத்து சேவைகளில், மருத்துவ சேவைகளில் விசேட பிரச்சினை எழுகின்றது.

ஒருவருடைய உயரத்திற்கு ஏற்ப கணிக்கப்பட்டுள்ள நிறையில் 20வீதம் மேலதிகமாக ஏற்படுமிடத்து இவ்வகை நிறை அதிகரிப்பு பிரச்சினை எழுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் 1/3 வீதத்தினர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்காக அரசு 75 பில்லியன் டொலர்களை செலவிடுகிறது. நோய்க்கட்டுப்பாடும் தடையும் செய்யும் (CDC) நிறுவனம் இதனை எச்சரிக்கை செய்துள்ளது. சராசரி ஒருவருக்கு மேலதிகமான 350 டொலர்களை இதற்காக ஒதுக்குகின்றது. எனவே ‘நிதிப்பிரச்சனைகளை தோற்றுவிக்கும் பிரச்சினை இது’ என்று இந்நிறுவன அறிக்கை கூறுகின்றது. கடந்த 25 வருடங்களில் இப்பாதிப்பு 2 மடங்காகியுள்ளது என்று கூறியுள்ளதுடன் நீரிழிவு, இதய வால்வுப் பிரச்சினை, புற்றுநோய் சிறுநீரகம் என்பவற்றில் பிரச்சினை எழுகின்றதாக குறிப்பிட்டுள்ளது. வருடத்தில் ஐக்கிய அமெரிக்காவில் இதனுடன் தொடர்பாக 3 இலட்சம் பேர் மரணமடைகின்றனர். இதில் குழந்தைகள் 2 மடங்காகவும், இளம் வயதினர் 3 மடங்காகவும் பிரச்சினைப்படுகின்றனர். கனடாவிலும் நிறைகூடிய தொகையினர் 14.8%. உலகிலேயே இவ் ஒழுங்கீனத்தில் ஐக்கிய அமெரிக்கா முதனிலை வகிக்கின்றது. கனடாவும் நெருக்கமாகி வருகின்றது. இதனால் எச்சரிக்கையாக பல அநாவசியமான உற்பத்தி பொருட்கள் தடை, சீனிக்குறைப்பு, கொழுப்பு குறைப்பு செய்யப்படல் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது. பாடசாலைகளில் பல உணவு இயந்திரங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. தெரிந்து கொண்டே இவ் உணவினை அதிகம் உண்டு பாரத்தினை கூட்டுபவர்களின் நிலை மிகவும் சிக்கலாக உள்ளது. பல வருடங்களுக்கு முன்பு குடைவழிப்போக்குவரத்தில் ஈடுபட்ட வேளையில் இளம் வயது பெண்கள் இருவர் எதிரில் அமர்ந்து கொண்டனர். பிரயாணம் முழுவதிலும் கைகளில் நிறைய ஏதேதோ நொறுக்கு தீனிகளை வைத்திருந்து திறந்த வாய் மூடாமல் சாப்பிட்டதனை கண்ணூடாக கண்டு திகைப்படைந்திருந்தேன். இது ஏன்? என்னும் கேள்வி எனக்குள் கேட்டேன். அப்போது இந்த ‘Obesity’ பற்றி உண்மையில் தெரியாது. இப்போது அதனை புரிந்து கொள்ள முடிந்தது. எனினும் இவர்கள் பரிதாபத்துக்கு உரியவர்களா அல்லது ஆய்வுக்குரியவர்களா என்பது தெரியவில்லை.

நூல்கள் வாயிலாக பெற்ற தகவல்களின் படியாக இதற்கு காரணங்கள் எவை என்பதனை நோக்க முடிகின்றது. மிருகங்கள் வாழ்வதற்கு உண்ணுபவை. ஆனால் நம்மில் சிலர் உண்பதற்காகவே வாழ்பவர்கள் போல் உள்ளனர். முழுநாளும் இதே நினைவு. சுவையுள்ள உணவில் நாட்டம் மிக அதிகம். இதில் தான் பிரச்சினை எழுகிறது. ஒவ்வொருவரது உடல் அமைப்பும் ஒரேமாதிரி இல்லை. கலங்கள் வேறுபாடுள்ளவை. உறிஞ்சும் தன்மையில் மாறுபாடுள்ளவை. பசி வந்து விட்டதென்றால் மூளையுடன் உடல்ரீதியான செயல்பாடுகள் இணைகின்றன. உடல் இராசாயன கூறுகள் மாறுகின்றன. இவ்வேளையில் எல்லாரும் ஒரேமாதிரி உணவினை உண்டாலும் சிலருக்கு உடல் பருத்துவிடுகின்றது. இதுபற்றியே ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக கொழுப்பு சத்து உணவில் சேரும்போது மிகவும் தசை கூடுகின்றது. உடலில் உள்ள கொழுப்பு கலங்கள் சிலரிடம் 3 மடங்கு அதிகமாக காணப்படும். எனவே இதனை ஈடு செய்யவேண்டி உண்பது பழக்கமாகி விடுகிறது. பின்பு நிறுத்த முடிவதில்லை. தொடர்கதையாகிறது. பிறகு என்ன! அடிக்கடி உணவகத்திற்கு செல்ல வேண்டியதுதான்.

சில ஆய்வுகள் இவ்வாறான உடல் பருமன் என்பது பரம்பரை அலகுடன் தொடர்புடையதா என்று ஆய்வு செய்துள்ளனர். அதிலும் சில உண்மைகள் உள்ளன. சில குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக பருத்த உடல் உள்ளவர்களாகவே உள்ளனர். சிலருக்கு வயிற்றில் கொழுப்பு சத்து அதிகமாகி பெருத்த வயிறு உள்ளவர்களாகவும், சிலருக்கு பின்பக்கமாக இடுப்புக்கு கீழ் பகுதி பருத்த உருவமாகவும் காணப்படும். இது கூட பரம்பரையில் வருகிறது. புரியாத புதிராக தொடர்கிறது!

இன்னொரு வகையினர் நடத்தையில் காரணிகளில் அளவுக்கு மீறிய உணவு உண்பவர்கள். இவர்கள் எதுவித காரணமுமின்றி உண்பவர்கள். சுவைப் பிரியர்களான இவர்கள் அதில் நாட்டம் கூடினால் அதேநினைவில் இருப்பார்கள். அடிமையாகிப் போய்விடுவார்கள். ஐஸ்கிறீம் என்றால் 200கிறாம் அளவுக்கு மேல்



**எஸ். பத்மநாதன்**
**சிந்தனைப் பூக்கள்**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# வெகுளாமை (Calm) - 1

கடந்த சில மாதங்களாக 'நினைவாற்றல்' என்ற தொடர்கட்டுரையினை 'விளம்பரம்' பத்திரிகையில் எழுதி வந்த 'அகணி' அவர்கள் 'வெகுளாமை' என்ற தலைப்பின் கீழ் ஒரு தொடர்கட்டுரையை இந்த இதழில் இருந்து எழுதுவதற்குத் தொடங்குகின்றார். சமூக சேவையுடன் தொடர்புள்ள அவரது பணி, ஆன்மீக ஈடுபாடு, விஞ்ஞானத் துறைத் தகைமை, பல நாடுகளில் தொழில் புரிந்து பெற்ற பட்டறிவு, மேலும் எழுத்துத் துறையில் உள்ள ஈடுபாடு காரணமாக அவரிடமிருந்து மேலும் ஒரு பயனுள்ள கட்டுரையை விளம்பரம் வாசகர்கள் எதிர்பார்க்கலாம். இந்தக் கட்டுரை பற்றிய உங்கள் எண்ணங்களை அறியத் தாருங்கள்.

## அன்பான வாசகர்களே!

'வெகுளாமை' என்ற தலைப்பின் கீழ் ஒரு தொடர்கட்டுரையுடன் 'விளம்பரம்' பத்திரிகையின் வாசகப் பெருமக்களாகிய உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. 'விளம்பரம்' பத்திரிகை நிறுவனத்தினர்க்கு எனது மனப்பூர்வமான நன்றி. சமூக நலனில் பத்திரிகைகளின் பங்களிப்பிற்கு விளம்பரம் பத்திரிகையின் சேவை ஓர் எடுத்துக் காட்டு.

வெகுளாமை என்றால் கோபமின்மை என்று பொருள். வெகுளி என்றால் கோபம் (Anger). வெகுளி என்ற சொல்லில் இருந்தே வெகுளாமை வந்திருக்கின்றது. அதாவது வெகுளியின் எதிர்ச்சொல்லே வெகுளாமை. வெகுளாமைக்குரிய ஆங்கிலப் பதம் வெகுளி அல்லது கோபம் (Anger) என்ற சொல்லின் எதிர்ச்சொல் ஆக இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் Anger என்ற சொல்லிற்கு ஏராளமான சொற்களை எதிர்ச்சொற்களாக கூறுகின்றார்கள். சில இணையத்தளங்களில் எந்த ஆங்கிலப் பதம் Anger என்ற சொல்லுக்கு மிகவும் பொருத்தமான




எதிர்ச்சொல் என விவாதமே நடைபெறுகின்றது. எதற்கும் Calm அல்லது Calmness இனை வெகுளாமைக்குரிய எதிர்ச்சொல்லாக எடுத்துக் கொள்வோம். மாற்றுக் கருத்து இருப்பின் உங்கள் கருத்தினைத் தயவுசெய்து எடுத்து வாருங்கள்.

தமிழர்களாகிய எமக்கு வெகுளாமை என்று சொன்னதும் எமது மனதில் உடனே நினைவுக்கு வருவது திருவள்ளுவர் தந்த திருக்குறள். வெகுளாமை என்று ஒரு அதிகாரத்தையே (31 வது அதிகாரம்) திருவள்ளுவர் தந்திருக்கின்றார். குறள் 301 தொடக்கம் குறள் 310 ஈறாக 10 குறள்கள் வெகுளாமை அதிகாரத்தில் வருகின்றன. இவற்றைப் படிக்கும் பொழுது வள்ளுவர் தந்த திருக்குறள் எவ்வளவு பெரிய சொத்து என்பது தெரிகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த திருக்குறளில் இருந்து ஒரு குறளுடன் கட்டுரையை ஆரம்பித்துக் கொள்வோம்.

'செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக் காக்கினென் காவாக்கா லென்'
(குறள் 301, அதிகாரம் 31 வெகுளாமை)
'தமது சினம் பலிக்காதவிடத்து சினம் கொள்ளாமல் இருப்பவனே சினங்காப்பவன் என்ற தகுதியைப் பெறுகின்றான். சினம் பலிக்காத இடத்தில் சினத்தைக் காத்தால் என்ன? அல்லது காக்காவிட்டால் தான் என்ன?' எனப் பொருள் கூறப்படுகின்றது. நமது சினம் பலிக்காதவிடத்து சினம் கொள்ளாமல் இருந்து விட்டு சினங் காப்பவன் என்று தம்பட்டம் அடிக்க முடியாது என்று வள்ளுவர் அன்றே கூறிச் சென்று விட்டார். நமது சமூகத்தில் ஒருவர் சினம் கொள்ளுவதனால் ஏற்படும் பாதிப்புக்களைப் பார்க்கும் பொழுது 'சினம் காப்பவன்' என்ற தகுதி எவ்வளவு பெரிய தகுதி என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம். இந்தத் தலைப்பினை நான் தெரிவு செய்வதற்கும் கூட இதன் முக்கியத்துவம் ஒரு முக்கிய காரணியாக இருந்தது எனலாம்.

தத்துவ மேதை அரிஸ்ரோற்றிள் (Aristotle) யாரும் இலகுவாக கோபம் கொள்ளலாம். சரியான இடத்தில், சரியான அளவு, சரியான நேரம், சரியான நோக்கத்திற்கு, உரிய முறையில் கோபம் கொள்வது மிகவும் கடினமான காரியம் எனக் குறிப்பிட்டுள்ளார்.



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

Be JOB Ready in 5 - 12 months
citiCOLLEGE OF CANADIAN CAREERS
Get the skills you need to get the job
IT:
Network Engineering
Enterprise Network Eng.
Internetwork Specialist
(A+ / Network + / MCSE / MCITP / CCNA / CCNP / Linux )
Health Care:
Medical Office Assistant
Personal Support Worker
Business:
Business Administration
Computerized Accounting
CPA ACP
OACC PROUD MEMBER
Microsoft | IT Academy Program
You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours per week
Call us now for details 416-840-9179
Call Today:
416-840-9179
www.CitiCollegeINFO.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

Second Career clients welcome
Financial assistance may be available for those who qualify

# தசையைச்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

உண்ணுவார்கள். இவர்களால் கட்டுப்படுத்த முடிவதில்லை. சிரமமில்லாமல் உண்ணும் உணவில் நாட்டம் கொள்ளுவார்கள். யார் இருந்தாலும் கவலைப்படமாட்டார்கள். இவர்கள் பின்பு உடல் பருத்தவுடன் பட்டினி



கிடக்கவும் ஆயத்தமாகின்றனர். இது ஒருவகை ஒழுங்கீனமா என்பதே பிரச்சினையாகின்றது. இன்று நடத்தையியல் காரணமாக உண்பவர்களே அதிகம் உள்ளனர். பல உணவகங்கள் பல வர்ணங்களில் உணவு பண்டங்களின் படங்களை அச்சிடுவதும், தொலைக்காட்சி யில் உணவுக்காக பல விளம்பரங்கள் வருவதும் இவர்களின் பலவீனத்தினை உணர்த்துகின்றன.

இந்த உணவுப் பிரியர்களுக்கு அல்லது எடை கூடியவர்களுக்கு எப்படி வைத்தியம் செய்வது என்பதே இன்றுள்ள பிரச்சினை. இதனை புரிந்து கொண்ட பல உடற்பயிற்சி நிறுவனங்கள் Fitness Club என்றும் Lose Weight என்றும் அறிக்கை விடுகின்றன. சில வேளைகளில் 'விஷேட' சலுகைகளை வழங்கி பல மருந்துகளை உற்பத்தி செய்கின்றன. எனினும் என்ன இதற்கு விடிவே இல்லை. சிலவேளைகளில் இதனால் ஒருவருடைய சில நிறுவனங்கள் பொய்யான படங்களை வெளியிட்டு உடல் மெலிவதற்கு முன்னால் என்றும் பின்னால் என்றும் முப்பது நாற்பது இறாத்தல்களை குறைத்து விட்டதாக கூறும். இதில் சிலவேளை உண்மை இருப்பதில்லை. பல ஆய்வாளர்கள் இந்த நிறை குறைப்பு அல்லது உடல் பருமனைக் குறைத்தல் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவர்களது முடிவுப்படி முதலில் தம்மை கட்டுப்படுத்த வேண்டும். பொருத்தமான உணவுப் பழக்கங்களை மேற்கொள்ள வேண்டும். தேகப்பயிற்சி செய்ய வேண்டும் என்பதே அதுவாகும்.

இன்றுள்ள முக்கிய பிரச்சினை இந்த தசைப்பிடிப்பு உள்ளவர்கள் விரைவில் இறந்து விடுகின்றனர் என்பது தான். பெண்களை விட ஆண்களே இதில் கூடுதலாக உள்ளனர். ஆயிரத்திற்கு 24 ஆண்களும், 13 பெண்களும் இப்பிரச்சினையால் மரணமடைவது ஐக்கிய அமெரிக்காவில் உள்ளது. உடல் பருத்தவர்களுக்கும் அழகுப் போட்டி நடத்தப்படுவதில் சில நிறுவனங்கள் முயல்கின்றன எனில் பிரச்சினைக்கு தீர்வே இல்லை போல் தெரிகின்றது.

எமது எதிர்கால சந்ததியினரும் இதில் பாதிப்புறக்கூடாது என்பது எமது நோக்கம். எமது சிறார்கள் கொழுப்பு சத்துள்ள உணவுகளையும், சாக்லெட், ஐஸ்கிறீம் உணவுகளையும் அதிகம் உண்ணுவதனையும் அவதானிக்க முடிகின்றது. அது ஒரு பழக்கமாகிவிடக்கூடாது என்பதே எமது நோக்கமாகும். பல உணவுப் பிரியர்களை கண்டு வியப்படைந்திருக்கிறோம். ஆச்சரியப்பட்டிருக்கிறோம். அனுதாபப்பட்டிருக்கிறோம். ஆனால், அவர்களுக்கு இதில் கவலை இல்லை. புது உணவகம் திறந்தால் அங்குதான் நிற்பார்கள். புதிய இளைஞர் உலகம் இதற்கு அடிமையாகாது தமது உடலை கட்டுடலாக பேணுவதற்கு ஆவன செய்வோம்.

# மருந்து செலவு...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

மருந்து காப்புறுதி திட்டங்களிலோ (Gruop Drug Coverage) சேர்ந்து 100% வீதமான செலவினை அதில் பெறும் நிலையில் இல்லாது இருப்பவர்கள். இவை தொடர்பாக மேலதிக தகவல் தேவையாயின் இந்நிறுவனத்துடன் நேரடியாகவும் தொடர்பு கொள்ளலாம். அதன் முகவரி



இதுவேயாகும்.
TRILLIUM RECPIENTS CONTACT
P.O. BOX 33T, STN. D
ETOBICOKE, ON M9A 4X3
TELE PHONE: (416) 642.3038 /1.800.575.5386
தொலைநகல்: (416)642.3034

மருந்துச் செலவுகலகளுக்கு அதிகமாக பணம் செலவளிக்க வேண்டிய நிலையில் இருக்கு வருமானம் குறைந்தவர்களுக்கு கைகொடுத்து உதவ என மாகாண அரசு தயார் நிலையில் இருக்கும்போது அதனை ஏன் பயன் படுத்திக் கொள்ளக்கூடாது? உடனடியாக விண்ணப்பித்து வையுங்கள்.

# உடல் உறுப்புக்கள்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

குணப்படுத்த முடியும். போட்டுக் கொண்டு போக முடியும்.



Bhujangasana

**மருந்தே உணவு உணவே மருந்து**

“மலச்சிக்கலும் செரியாமையும் ஆதி நோய்கள். மற்றவை அனைத்தும் மீதி நோய்கள்”. மலச்சிக்கலையும், செரியாமையையும் உதாசீனப்படுத்தினால் ஒருவர் தனக்குள் எந்த நோயிலிருந்தும் விடுபடமுடியாது. பொருத்தமான உணவுத் திட்டத்தை சீராகக் கடைப்பிடித்தால் இவற்றிலிருந்து விடுபடலாம்.

முன்பு குறிப்பிட்ட ராஜ உறுப்புகளைச் செம்மைப்படுத்தி திறம்பட தொழில் படச் செய்யக்கூடிய யோகாசன, பிராணயாம, தியான பயிற்சி முறைகளை பண்டைக்கால சித்தர்கள் நமக்களித்துச் சென்றுள்ளனர். எந்த உறுப்பில் நோய் கண்டறியப்படுகிறதோ அந்த உறுப்பை நன்கு இயங்கச் செய்யும் மருத்துவ முறையிலான ஆசனங்களும் கிரிகை முறைகளும் இருக்கின்றன. இவற்றை ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் காலை, மாலை பழகி வருவதுடன் பொருத்தமான உணவு முறைகளை தவறாமல் கடைப்பிடித்து வந்தால் எந்தவிதமான தீராத நோய்களையும் குணப்படுத்த முடியும்.

# வெகுளாமை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

(Anyone can become angry – that is easy. But to be angry with the right person, to the right degree, at the right time, for the right purpose, and in the right way – this is not easy – Aristotle). அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு ஆலோசகர் கலாநிதி வில்லியம் கிரே டியூர் 'கோபத்தைக் கையாளுங்கள், அதில் இருந்து மீட்சி பெறுங்கள், அது உங்களைக் கொலை செய்வதைத் தடுத்து நிறுத்துங்கள்' என்று கூறுகின்றார். கோபமே வராது இருத்தல் என்று கூறாது நமக்கு ஏற்படும் கோபத்தை உரிய முறையில் கையாளுதலை 'வெகுளாமை' என்று கூறிக் கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பது எனது கருத்தாகும். கடுமையான சீற்றத்தை அல்லது கடுங்கோபத்தை வெகுளி என்று கூறுவதையும் அவதானிக்கின்றோம். எனவே நம்மிடம் ஏற்படும் கோபத்தை எல்லை மீறாமலும், உரிய முறையிலும் கையாளும் திறமையாகிய வெகுளாமை இருக்க வேண்டும் என்று இந்தக் கட்டுரை மூலமாகத் தெரிவிக்கின்றேன்.

சிறு குழந்தைகள் தமது பசியை அல்லது அதனால் ஏற்படும் கோபத்தை அழுது வெளிப்படுத்தாவிட்டால் எண்ணற்ற குழந்தைகளுக்கு நேரத்திற்கு உணவு கிடைக்காமல் போய் விடுமல்லவா. அவர்களின் கோபம் நியாயமானதே. குழந்தைகளின் கோபமும் அளவுக்கு மீறிச் செல்லும் பொழுது பெற்றாரை எரிச்சல் அடைய வைக்கிறதல்லவா. கோபிப்பதனால் விடயங்களைச் சாதிக்கலாம் என்ற பாடத்தை மனிதர்கள் குழந்தைப் பருவத்தில் இவ்வாறு தான் கற்றுக் கொள்ளுகின்றார்கள் என்று நான் நினைக்கின்றேன். நாம் வாழும் கனடாவிலும் குற்றச்செயலில் ஈடுபடும் பலரின் பின்புலத்தை ஆராயும் பொழுதும் வரம்பு மீறிய கோபம் அல்லது வெகுளாமை அடிப்படைக் காரணியாகி விடுகின்றது. பல



அப்பாவித்தனமான மனிதர்களும் சில வேளைகளில் கோபத்திற்கு கணப்பொழுதில் அடிமையாகி பலவிதமான இன்னல்களைச் சந்திக்கின்றார்கள். மேலும் நீதியின் முன் குற்றவாளிகளாகி விடுகின்றார்கள். எனவே கோபத்தைக் கட்டுப்படுத்தல் அல்லது வெகுளாமை என்ற திறமையைப் பெறுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அலசும் ஒரு முயற்சியாக இந்தத் தொடர்கட்டுரையை வாசகர்களாகிய நீங்கள் எதிர்பார்க்கலாம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம். - தொடரும்.

# உடல் உறுப்புக்கள் பாதிப்பும் நோய்களைக் கண்டறியும் முறைகளும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

### கல்லீரல் (Liver) பாதித்தால்

1. உடல் முழுவதும் சோர்வு, அடித்துப் போட்டது போன்ற உணர்வு
2. அனைத்துவிதமான தலைவலிகள், கை, கால் குடைச்சல்
3. மாதவிடாயின் போது தீராத வயிற்று வலிகள்
4. தூங்கி எழுந்தவுடன் அடிமுதுகில் தாங்க முடியாத வலி

### சிறுநீரகம் (Kidney) பாதித்தால்

1. அனைத்துவிதமான மூட்டுவலிகள், முழங்கால் வலி
2. எலும்புகள் தேய்மானம், குதிக்கால் வலி
3. உடல்வீக்கம் - அதிகநேரம் உட்கார இயலாமை
4. தொடையில் தசைப்பிடிப்பு, இடுப்புவலி

### மண்ணீரல் பாதித்தால்

1. உடல் கனமாக இருப்பது போன்ற உணர்வு
2. வலிகளால் சரியான நிலையில் படுக்க இயலாமை
3. பின்கால்கள் இழுப்பது போன்ற உணர்வு, மரத்துப் போதல்
4. மூட்டுகளில் வீக்கம்

### நுரையீரல் (Lungs) பாதித்தால்

1. உடல் முழுவதும் வீக்கத்துடன் கூடிய வலி
2. தோளிலும் தோள்பட்டையிலும் வலிகள்
3. கழுத்திலும் பிடரியிலும் பிடிப்பு
4. அதிக நேரம் நிற்க முடியாமை
5. கைகள் கைவிரல்களிலும் குடைச்சல்

### இதயம் பாதித்தால் (Heart)

1. முழங்கை வலி - மணிக்கட்டு வலி
2. உடலை அழுத்துவது அல்லது பிசைவது போன்ற வலி
3. கைகளை மேலே தூக்கவோ, விரிக்கவோ முடியாமை



4. மல்லாந்து படுக்க முடியாமை
5. தாங்க முடியாத வயிற்றுவலி

மேல் குறிப்பிட்ட வலிகள் என்று தொடங்குகின்றதோ அன்றே உடலில் நோய்கள் ஆரம்பமாகிவிட்டது. அதாவது உடல் உறுப்புகள் பாதிப்புக்குள்ளாகி விட்டது என்று பொருள்.

### முதுமையும் மரணமும் ராஜ உறுப்புகளும்

ஆரம்பத்தில் கூறப்பட்ட உடலின் ராஜ உறுப்புகளான: மூளை, நுரையீரல், இதயம், சிறுநீரகம், ஈரல் என்பன வயது ஆக ஆக தமது செயல்திறனை படிப்படியாக இழக்கின்றன. இவற்றில் ஒன்றோ அல்லது அதற்குமேல் வேறொன்றோ தனது தொழில்பாட்டினை முழுமையாக இழந்துவிடின் உடல் நாளடைவில் அழிந்து இறுதியில் மரணத்தில் கொண்டு சேர்க்கிறது. மரணமென்பது எல்லோருக்கும் பொதுவானது தான். ஆனால் அதனை சில நெறிப்படுத்தப்பட்ட உடல், மனம் சார்ந்த பயிற்சி முறைகளினால் உடலை நோய்களிலிருந்து காத்து முதுமைத்தன்மை அணுகாமல் மரணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போக முடியும்.

### மருந்தே உணவு உணவே மருந்து

"மலச்சிக்கலும் செரியாமையும் ஆதி நோய்கள். மற்றவை அனைத்தும் மீதி நோய்கள்". மலச்சிக்கலையும், செரியாமையையும் உதாசீனப்படுத்தினால் ஒருவர் தனக்குள் எந்த நோயிலிருந்தும் விடுபடமுடியாது. பொருத்தமான உணவுத் திட்டத்தை சீராகக் கடைப்பிடித்தால் இவற்றிலிருந்து விடுபடலாம்.

முன்பு குறிப்பிட்ட ராஜ உறுப்புகளைச் செம்மைப்படுத்தி திறம்பட தொழில் படச் செய்யக்கூடிய யோகாசன, பிராணாயாம, தியான பயிற்சி முறைகளை பண்டைக்கால சித்தர்கள் நமக்களித்துச் சென்றுள்ளனர். எந்த உறுப்பில் நோய் கண்டறியப்படுகிறதோ அந்த உறுப்பை நன்கு இயங்கச் செய்யும் மருத்துவ முறையிலான ஆசனங்களும் கிரிகை முறைகளும் இருக்கின்றன. இவற்றை ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் காலை, மாலை பழகி வருவதுடன் பொருத்தமான உணவு முறைகளை தவறாமல் கடைப்பிடித்து வந்தால் எந்தவிதமான தீராத நோய்களையும்



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வயோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# பசுமையான தொழில்நுட்பத்தை வெளிக்கொணரும் *TRIDEL* நிறுவனம்

*"NEXT LIVING ECO SUITE"* என அழைக்கப்படும் புதிய தொழில்நுட்ப பரிமாணத்தை கொண்ட அடுக்குமாடி மனையை ரொறொன்ரோவின் கிங் மேற்கு (King West) பகுதியில் அமைந்திருக்கும் REVE கட்டிடத்தொகுதியில் Tridel அடுக்குமாடி மனை கட்டிட நிறுவனத்தால் கொண்டு வரப்பட்டுள்ளது. அடுக்குமாட மனை கட்டிடத் தொகுதியின் நிர்மாணத்தில் முன்னணி வகிக்கும் நீண்டகால அனுபவம் கொண்ட மிகப்பெரிய நிறுவனமான Tridel நிறுவனமே இதனை அறிமுகப்படுத்துகிறது. REVE கட்டிடத்தின் Penthouse மனையிலே இவ்வாறான Suite கொண்டு வரப்பட்டுள்ளது.

தொழில்நுட்பத்தில் முன்னணியில் இருக்கும் Cisco, Control4 போன்ற நிறுவனங்களுடன் சேர்ந்தே Tridel இந்த மனையை வெளிகொண்டு வந்துள்ளது. Tridel இன் சேல்ஸ் மற்றும் மார்க்கற்றின் தலைமைப் பதவியில் இருக்கும் திரு. ஜிம் றிச்சி (Jim Ritche) 'ECO SUITE' எதிர்காலத்தில் முக்கியம் பெறும் எனத் தெரித்துள்ளார். இந்த தொழில்நுட்பம் 2011 Green Build Conference & Expo இல் முதன்முறையாக வெளியிடப்பட்டது. Reve கட்டிடத்தின் Penthouse இல் ஒக்ரோபர் 15 & 16 நடந்த Open House இல் இந்த தொழில்நுட்ப மனை மக்களிற்கு தெரியப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் பசுமையான சூழலின் அடுக்குமாடிக் கட்டிட வாழ்விற்கு இந்த வகை Suites பெரிதும் விரும்பப்படும்.

இந்த தொழில்நுட்பத்தில் Smart Connected Home Controller, Smart Home Remote மற்றும் Touch Screen போன்றவை பாவிக்கப்பட்டுள்ளது. மேலும் Control4 Lighting முறையில் Keypads மற்றும் Dimmers



பாவிக்கப்பட்டுள்ளது. இந்த அடுக்குமாடி மனைப்பகுதிகள் முழுவதும் Business Class Data, Voice, Security Wireless அமைக்கப்பட்டுள்ளன.

Business Class Internet Connection மற்றும் Advanced Security Management வசதிகளும் உள்ளன. இந்த Eco suites இல் மேலும் பலரகங்களிலான ஆச்சரியப்படக்கூடிய பசுமைத்தர புதியவகை உபகரணங்கள், தொழில்நுட்பங்கள் சிறந்த முறையில் பாவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான Green & Energy தொழில்நுட்பத்தில் மிகவும் முன்னணி வகிக்கும் செயல்திறன்கள் பாவிக்கப்பட்டுள்ளதாக Tridel நிறுவனத்தின் sustainability ஆலோசகர் திரு. Jamie James தெரிவித்துள்ளார். அத்துடன் Countertop, Flooring தளபாடங்கள் 75% மானவை Recycled Material களினால் பாவிக்கப்பட்டுள்ளது. எப்பொழுதும் துப்பரவான porcelain படுக்கைகள், Eco essence fire place போன்ற சுற்றாடலின் பசுமைத்தன்மையை காக்கும் பொருட்கள் இதில் தாராளமாக பாவிக்கப்பட்டுள்ளன.

இந்த வகை அலகு 560 Front Street West இல் அமைந்திருக்கும் கட்டிடத்தொகுதியில் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த புதிய முறையான வெளிப்பாடுகளை கொண்டுவரும் REVE கட்டிடத்தொகுதியில் 2 Bedroom மற்றும் 2 Bed + Den போன்ற சில மனைகள் விற்பனைக்கு உண்டு.

ரைடெல் நிறுவனத்தின் வளர்ச்சியின் அடுத்தபடி ***"Living Eco Suite Tridel"***. அடுக்குமாடி கட்டிட வாழ்க்கையின் புதிய பரிமாணம் இது என Tridel பெருமை கொண்டுள்ளது. www.ecosuite.ca இல் மேலதிக தகவல்கள் பார்க்கலாம்.

# நேரத்தைப் பொன்னெனப்போற்றி புதல்வியின் அரங்கேற்றத்தை மேற்கொண்ட ஆசிரியை மாலினி பரராஜசிங்கம்

நேரம் பொன்னானது என்று எவ்வளவு பேசிக்கொண்டாலும் அதற்கு மதிப்பளித்துப் பார்வையாளர்களின் பாராட்டைத் தட்டிக்கொள்வது எல்லா நிகழ்வுகளிலும் பொதுவாகவே பின்பற்றப்படுவதில்லை. ஆனால் அண்மையில் சீன கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்ற செல்வி உஷாந்தி கிருபாகரனின் நடன அரங்கேற்றம் அனைத்து இசை, நடன ஆசிரியர்களுக்கும் முன்மாதிரி யாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 6:00 மணிக்கு ஆரம்பித்து 8:30க்கு முடித்துவிடுவேன் வந்து பாருங்கள் என்று பார்வையாளர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார் நடன ஆசிரியை மாலினி பரராஜசிங்கம். அதன்வண்ணம் அவரது நடன அரங்கேற்றம் 8:15க்கே நிறைவுற்றது என்பதனைக் கண்டு வியப்படையாதவர்கள் இல்லை. பத்து அல்லது பதினொருமணிக்கும் முடிக்கமுடியாமல் திண்டாடும் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பார்த்துச் சலிப்புற்றிருந்த பார்வையாளர்களுக்கு இது ஒரு முன்மாதிரியாக அமைந்திருந்தது எனலாம்.

**- த. சிவபாலு -**

இறைவணக்கத்தோடும் முன்னைநாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு நடன விரிவுரையாளர் சாந்தா பொன்னுத்துரை அவர்களின் வாழ்த்துடனும் ஆரம்பமான நடன அரங்கேற்றம் இரண்டே இரண்டு நடன உடுப்புக்களோடு நிறைவேறியது என்பதனை கேட்கும்போது வியப்பாகத்தான் இருக்கும். ஆனால் உண்மையிலேயே இந்த நிகழ்வினை செல்வி தர்சினி வரப்பிரகாசம் அவர்கள் மிகக் கச்சிதமாக தொகுத்து வழங்கினார். அவர் அடிக்கடி வெளியே தோற்றமளிக்காது திரைமறைவிலிருந்தே நிகழ்வினைத் தொகுத்தமை பாராட்டத் தக்கது. நேரத்தையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும் உதவியது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஒரே ஒரு பேச்சாளரான முன்னைநாள் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களும் தனது பேச்சை 8 நிமிடங்களுக்குள் மட்டுப்படுத்திக் கொண்டமையும் நேரத்தைப் பொன்செய்ய மேற்கொண்ட செயலாகவே படுகின்றது.

பாரம்பரிய பரதநாட்டிய அரங்கேற்றத்தி லிருந்து இம்மியும் மாற்றம் காணாதவகையில் அவர் தனது அரங்கேற்றத்திற்கான உருப்படிகளைத் தயார் செய்து மேடையேற்றினார் என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது. கம்பீர நாட்டையில் இடம்பெற்ற புஸ்பாஞ்சலி, நாட்டை இராகத்தில் அமைந்த அலாரிப்பு, கல்யாணி இராகத்தில் அமைந்த ஜதீஸ்வரம், இராகமாலிகாவில் அமைந்த சப்தம், ஆனந்த பைரவியில் அமைவுற்ற வர்ணம், காப்பி இராகத்திலமைக்கப்பட்ட பதம், இராகமாலிகாவிலமைந்த கீர்த்தனம், பரசு இராகத்திலமைந்திருந்த தில்லானா, என்பனவற்றோடு சுழமணித்திருநாடு என்னும் பாடலுக்கான மங்களம் என ஒரு கோர்வையாக பரத நடன அரங்கேற்றத்திற் குரிய பாரம்பரிய வழிமுறையினைப் பின்பற்றித் தனது புதல்வியின் அரங்கேற்றத்தை முற்றுமுழுதாக ஒரு தூய அரங்கேற்றமாகவே செய்துமுடித்தார் மாலினி பரராஜசிங்கம் எனப் பலரும் பாராட்டிச் சென்றதை கேட்கக்கூடியதாக இருந்தது.

இடைவேளை இல்லாத ஒரு அரங்கேற்றமாக வும் அதிகளவான பேச்சாளர்களைக் கொண்டிராத ஒரு அரங்கேற்றமாகவும் இந்த அரங்கேற்றம் சாதாரணமாக இடம்பெறும் அரங்கேற்றங்களிலிருந்து வேறுபட்டதாகக் காணப்படுவதற்கு அடிக்கடி உடைகளை மாற்றும் நேரதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் இரண்டே இரண்டு உடைகளை மட்டும் பயன்படுத்தியிருந்தார் என்பதும் ஒரு முன்மாதிரியென்றே கொள்ளலாம். அரங்கேற்றத்தின்று பின்னணி இசைக்கலைஞர்களாக மிருதங்கத்தை மிருதங்க வித்தகர் கிரிதரன் அவர்களும் பாடல்களை இசைக்கலைமணி வர்ண இராமேஸ்வரன் அவர்களும், வயலின் இசையினை சங்கீத வித்துவான் லசந்தி இராஜ்குமாரும் நல்கினர். மிகவும் ஆடம்பர மற்ற முறையில் இடம்பெற்ற நல்லதோர் அரங்கேற்றமாக இது அமைந்தது எனலாம்.


## நூல் வெளியீடு

**பெயரிடாத நட்சத்திரங்கள்**

**பெண்விடுதலைப் போராணிகணின் கவிதைகளின் தொகுப்பு**




**இடம்:** *Mid Scarborough Community Centre*
*2467 Eglinton Ave. Scaarborough*
**காலம்:** *13 November 2011*
**நேரம்:** *6.30PM to 8.30PM*
**தொடர்புகளுக்கு:** *416.731.1752*

TRIDEL® BUILT FOR LIFE

# ALTO NEW CONDO.

## HWY 404 / SHEPPARD / VICTORIA PARK

HomeLife GTA'S Discount




TRIDEL நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

**HomeLife / GTA Realty Inc.**

Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்: 416.321.6969

*Independently Owned & Operated

# திரைவிமர்சனம் - 7ஆம் அறிவு

‘ஆபரேஷன் ரெட்’, ‘ஈ’ படத்தில் அலசப்பட்ட பயோ - வார் சமாசாரம்தான் கதை! கி.பி. 6ஆம் நூற்றாண்டில் போதிதர்மன் என்னும் தமிழ் இளவரசன் இருந்தான். பல்லவர்களைச் சேர்ந்த காந்தவர்மன் என்ற பல்லவ மன்னனின் மூன்றாவது பிள்ளைதான் இந்த போதிதர்மன். தற்காப்பு கலை மற்றும் மருத்துவத்தில் மிகத் திறமைசாலி. சீனப்பயணி யுவான் சுவாங் போலவே தமிழ்நாட்டில் இருந்து மூன்று ஆண்டு கால பயணம் செய்து, காஞ்சிபுரத்தை சார்ந்த போதிதர்மன் சீனாவுக்கு செல்கிறான். அப்போது, அவன் இருக்கும் சீனா கிராமத்தில் வித்தியாசமான ஒரு நோய் தாக்குகிறது. போதிதர்மன் அந்த நோயை குணப்படுத்த கிராமத்தவர்களுக்கு உதவுகிறான். குதிரை படை வீரர்கள் சிலர் அந்த கிராமத்தை தாக்குகின்றனர். அவர்களிடமிருந்தும் கிராமத்தவர்களை போதிதர்மன் காப்பாற்றுகிறான். அத்துடன் தற்காப்பு கலையை அவர்களுக்கு கற்பித்துக் கொடுக்கிறான். அந்த கிராமத்தினர் போதிதர்மனை கடவுளாக பார்க்கின்றனர். இந்நிலையில் தான் இந்தியா செல்வதாக கூறுகிறான், போதிதர்மன். அந்த கிராமத்துவாசிகள் அதை விரும்பவில்லை. அவன் உடல் புதைக்கப்படும் பூமியில் எந்த நோயும் வராது என அவனுக்கு விஷம் கொடுத்து கொல்ல முயற்சிக்கின்றனர். அவர்களின் எண்ணம் புரிந்த போதிதர்மன் தெரிந்தே அந்த விஷத்தை குடிக்கிறான். அவன் கற்றுக்கொடுத்த தற்காப்பு கலையும் மருத்துவமும் சீனாவில் வளர்கிறது.

அடுத்து நிகழ்காலம்... சைனாக்காரர்களுக்கு தற்காப்புக் கலைகளை போதித்த, புத்தருக்கு அடுத்த இடத்தில் இன்றைக்கும் வைத்துப் போற்றப்படுகிற போதிதர்மன் என்று புத்ததுறவி, உண்மையில் தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த ஓர் அரசகுமாரன் என்பதை தற்செயலாகக் கண்டுபிடிக்கிறாள் ஜெனடிக் இன்ஜினியரிங் மாணவி ஸ்ருதி. ஓரளவு போதிதர்மனின் ஜீன் அமைப்புகொண்ட, அவன் வம்சாவளியில் வந்த அரவிந்த் எனும் தற்கால இளைஞனின் ஜீன்களைத் தூண்டி போதிதர்மனின் குணாதிசயங்களையும் திறமைகளையும் மீட்டெடுக்க முடிவு செய்கிறாள். அரவிந்த் ஒரு சர்க்கஸ் நிபுணர். அவருக்கு ஸ்ருதிஹாசன் மேல் காதல். எனவே, அவரது வேலை கொஞ்சம் சுலபமாகிறது. ஸ்ருதி தன்னை ஒரு வருடமாக பின்தொடர்வதை, தன் கிராமத்து ஆட்களின் மூலமாக தெரிந்துகொள்கிறார், அரவிந்த். அதற்கான காரணத்தை கேட்க, ஸ்ருதி, அவர் போதிதர்மன் பரம்பரையை சார்ந்தவர் என்பதையும் ஆராய்ச்சியின் மூலம் போதிதர்மனின் சக்தியை இவருக்குள் கொண்டுவர முடியும் என்றும் சொல்கிறாள்.

அதே வேளையில், சைனா உளவுத்துறை ‘ஆபரேஷன் ரெட்’ என்ற பெயரில் இந்தியாவின் மேல் பயோ - வார் தொடுக்கத் தீர்மானிக்கிறது. இதற்கான வேலைகளை டோங் லீ என்ற கூலிப்படை ஆசாமியிடம் ஒப்படைக்கிறது. கிருமிகளைக் கையில் கொடுத்து, கூடவே ஸ்ருதியையும் அரவிந்தையும் கொல்லுமாறு சொல்லி, டோங் லீயை அனுப்புகிறது. அவர் வந்ததும் சூர்யாவையும் ஸ்ருதியையும் துரத்துகிறார். சூர்யாவும் ஸ்ருதியும் அவன் சீனா அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆள் என்பதை கண்டுபிடிக்கிறார்கள். அதற்குள், அவன் ஒரு நாய் மூலம், ஒரு நோயை இந்தியாவுக்குள் பரவ விடுகிறான். அந்த நோய் பரவினால், இந்திய நாடு தவிக்கும். சீனா அதற்கான மருந்து தயாரித்து கொடுத்து தன் வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்ளும். இதுதான் தந்திர செயல்திட்டம். அந்த நோய்கான முறிவு மருந்தை சூர்யா மூலமாக ஸ்ருதி தயார் செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், அவர்களைக் கொல்ல முடிவு செய்துள்ளார்கள்.

போதிதர்மன் மீண்டும் வந்தனா? ஸ்ருதி வெற்றிபெற்றாரா என்பதுதான் முடிவு. படம் துவங்கியதுமே ஆரம்பிக்கும் சைனா பகுதி முதல் 25 நிமிடங்களுக்கு நகர்ந்தாலும் சட்டென்று முடிந்து விடுகிறார் போன்ற ஒரு உணர்வு. ஹாலிவுட் பாணியில் சின்னச் சின்ன விஷயங்களிலும் மிகவும் நுணுக்கமாக செய்துள்ளார்கள். ஆனால், அடுத்து வரும் பகுதியில் நோக்குவர்மம் என்று ஸ்ருதி கூறும் ஹிப்னாடிஸம் தான் கொஞ்சம் அதிகமாகத் தெரிகிறது. படம் முழுக்க வில்லன் ஜானி, பார்க்கும் எல்லாரையும் ஹிப்னடைஸ் செய்து அவர்கள் தனக்குத்தானே தற்கொலை செய்துகொள்ள வைக்கிறார் அல்லது மற்றவர்களை கொல்ல வைக்கிறார். இதுவும் ஆரம்பத்தில் திகீர் என இருந்தாலும் போகப்போக அலுப்படையச் செய்கிறது. காட்சிப்படுத்தல்களில் அநியாயத்துக்கு ஒவ்வொரு காட்சியும் ஹாலிவுட் தழுவல். ‘ஹாலோ மேன்’, ‘ஹெல் பாய்’, ‘அவதார்’, ‘க்ரௌவ்ச்சிங் டைகர் ஹிட்டன் டிராகன்’, ‘ஐ ஆம் லெஜண்ட்’, ‘ஸோம்பி’ போன்ற படங்களின் பல காட்சி அமைப்புகள் அப்படியே வந்து போகின்றன. சர்க்கஸ்காரரான அரவிந்த், விஞ்ஞானி ஸ்ருதி மேல் காதல் கொள்வதும் நம்பும்படியாக இல்லை. உண்மையா இப்படி ஒரு காதல் சாத்தியமா? அரவிந்த் சர்க்கஸில் என்னவாக இருக்கிறார் என்றோ, சர்க்கஸில் அவர் வேலை என்னவென்றோ தெளிவான காட்சிகள் இல்லை.



பிலிம்நியூஸ் கிருஸ்ணன்

இப்படி சின்னச் சின்ன பிரச்சினைகள் சில இருந்தாலும், ‘ரமணா’, ‘கஜினி’ போலவே இதிலும் இயக்குநர் முருகதாஸ் திரைக்கதையை ஏமாற்றவில்லை. போதிவர்மனாகவும் சர்க்கஸ் அரவிந்தாகவும் சூர்யா வருகிறார். சிவாஜிகணேசன்தான் கட்டபொம்மனா, சிவபெருமானா, ராஜராஜ சோழனா நடிக்கனும் என்பார்கள். அது மாதிரி சூர்யா, போதிதர்மன் பாத்திரத்துக்கு அப்படி பொருந்துகிறார். முழு படத்திலும் சூர்யாவின் உழைப்பு அபாரம். காட்சிக்கு காட்சி சூர்யா நிற்கிறார். பாடல்களிலும் மான்டேஜ்களிலும் வரும் அரவிந்த் சூர்யாவின் சர்க்கஸ் காட்சிகள் கைதட்ட வைக்கின்றன. சுருதியோடு பேசும் காட்சிகளில் இயல்பாய் நடித்து இருக்கின்றார். ஆனால், நெருக்கமான காட்சிகளில் ஒரு சின்ன தயக்கம்! கமலஹாசன் மகள் என்ற எண்ணம் அவரைப் பாடாய்படுத்துவது திரையில் தெரிகிறது. சுருதிஹாசன், பளிச் என்று இருக்கின்றார். மாசு மருவற்ற தேகம். நல்ல உடலமைப்பு. உடைகளை பற்றி எல்லாம் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. புன்னகை அழகு. ஆனால், கொஞ்சம் லேசாப் பூசுனாப்போல இருந்திருந்தால் நன்றாகயிருக்குமோ எனத் தோன்றுகிறது. தமிழர்களுக்கு குஷ்பு மாதிரி புஷ்டியான பெண்களைத்தான் பிடிக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் நல்லது. சரிசெய்ய வேண்டிய இன்னொரு முக்கிய விஷயம் நடிப்பு. ஸ்ருதி முகத்தில் உணர்ச்சி விளையாட்டுகள் மிகக் குறைவு. இறுகிய முகத்தோடே படம் நெடுகத் திரிகிறார்.

வில்லன் டாங் பற்றிச் சொல்லியே ஆகனும். பிரமாதமான நடிப்பு சண்டை ஸ்டைலு. ஒரே காட்சியில் அபிநயா அமைதியாக வருகிறார். இந்தப் படத்தோட மிகப்பெரிய பலவீனம் என்றால், அது ஹாரிஸ் ஜெயராஜ்தான். பின்னணி இசை கொடுமை. ஆண்டனியின் எடிட்டிங் ஓகே. ரவி.கே.சந்திரன் வெகு நாட்கள் கழித்து தமிழ் படத்திற்கு ஒளிப்பதிவு செய்திருக்கிறார். தமிழ் அரசியல் பேசும் ஒரு படத்தைத் தந்துள்ளார் இயக்குநர் முருகதாஸ். அழிந்துபோன தமிழருக்காகவும் அழியாத தமிழுக்காகவும் சமர்ப்பணம் செய்துள்ளதிலும் ஈழத்தில் வீழ்த்தப்பட்டது தமிழனின் வீரம் தாழ்ந்ததால் அல்ல, ஒன்பது நாடுகளின் கூட்டணித் துரோகத்தால்தான் எனச் சத்தமாகச் சொன்னதிலும் தைரியசாலியாகத் தெரிகிறார். கை கொடுங்கள் முருகதாஸ்! ஆனால், தமிழ் பற்று கொஞ்சம் அதிகமாகிவிட்டது என்பதையும் சொல்லியாக வேண்டும். மகேந்திரவர்ம பல்லவனின் புதல்வனால் இங்கிருந்த களரியும் வர்மமும் சீனத்துக்குப் போய் குங்.ஃ.பூவாகவும் கராத்தேயாகவும் ஆனது என்கிறார். இங்கிருந்த தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் சீனத்து மருத்துவத்துடன் சேர்ந்து செறிவூட்டப்பட்டதுதான். சீன மருத்துவத்திற்கு மேலான, இணையான மருத்துவ அறிவு தமிழனிடம் இருந்தது என்கிறார். இதற்கெல்லாம் என்ன ஆய்வு ஆதாரங்கள் வைத்திருக்கிறார் எனத் தெரியவில்லை. ஒருவேளை கதைதானே என கற்பனை சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டாரோ தெரியவில்லை. சில பிழைகளும் உள்ளன. போதிவர்மன் காலத்து நூலாக ‘சரகசம்ஹிதை’யைச் சொல்கிறார். ஆனால், அதற்கு முன்பே தமிழனின் மருத்துவ நூலான தொல்காப்பியம் முதலான பல சித்த மருத்துவ தமிழ் நூல்கள் இருந்திருக்கின்றன என்பது ஆராய்ச்சி முடிவு.

மற்றொரு பெரிய முரண்... படம் முடியும் போது தமிழர்களுக்கு சமர்பணம் என்று தமிழில் போட்டுவிட்டு, அடுத்து நடித்தவர்கள் பெயரையெல்லாம் ஆங்கிலத்தில் ஓடவிடுவது. பார்க்கலாம்!

Kantha Property Management Group Inc.
KPM Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
T: 416-214-6161
F: 416-465-3535
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com

Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296
sktheesan@gmail.com

# நீங்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டிய அலைவரிசைகள
# நீங்கள் தவற விடக்கூடாத அரிய சலுகை




## உங்கள் அடிப்படைத் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு 2 வருங்களுக்கும் மேல் $455[2] ஐச் சேமியுங்கள்.

### தமிழ

| Channel | Price |
|---|---|
| Tamil One | $15.17/மாதாந்தம்* |
| TVI | $19.74/மாதாந்தம்* |
| Vijay | $10.10/மாதாந்தம்* |
| Sun TV | $15.17/மாதாந்தம்* |
| Jaya TV | $15.17/மாதாந்தம்* |

அல்லது $30.45/மாதாந்தம் தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பொதிக்கு*

### கிரிக்கெட்

CBN, ATN Cricket Plus

ஒவ்வொரு அலைவரிசைக்கும $15.17/மாதாந்தம்*† அல்லது ஒருங்கிணைந்த பொதிக்கு $20.25/மாதாந்தம்*

*மாதாந்தக் கட்டணங்கள் அனைத்தும் உட்பட

†அல்லது $5.08/மாதாந்தம் ATN இல் நீங்கள் பெறும் ஒவ்வொரு அலைவரிசைக்கும்

**Rogers** டிஜிட்டல் அடிப்படைவு ஏ வாடிக்கையாளரான நீங்கள் மகிழ்ச்சியுடன் பார்த்து மகிழுங்கள்:

- 170 இற்கும் மேற்பட்ட டிஜிட்டல் அலைவரிசைகள், செய்திகள் விளையாட்டு, இசை மற்றும் பல
- Rogers On Demand இற்குச் செல்லும் வசதி (அலைவரிசை 100) அத்துடன் Rogers On Demand Online (RogersOnDemand.com)[3]
- வருடம் முழுவதும் பல்கலாச்சார அலைவரிசைகளின் முன்னோட்டங்கள்

**இன்றே ROGERS இற்கு மாறுங்கள் உங்கள் பணத்தைச் சேமியுங்கள். அழையுங்கள் 1 855 824-1439**

ROGERS™



Offers available to new TV customers for a limited time and subject to change without notice. Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. Channel availability may vary by region. **1** Includes monthly Digital Service Fee of $2.99 and, where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. Taxes extra. Regular monthly rates apply after promotional period. 2-year term required for Digital TV. Early Cancellation Fee applies. Monthly service fee varies by channel subscription. **2** Savings based on $18.99 per month off Digital Basic regular monthly service fee of $32.49 for two years. **3** Rogers On Demand Online only available in Canada with an Internet connection. Charges apply to some On Demand programming content. © 2011

# நினைவஞ்சலி அழைப்பு

## அமரர் சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்

முன்னாள் பிரதி அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி

நேரம்: முற்பகல் 10:30 மணி

காலம்: நவம்பர் 6ஆம் திகதி 2011 ஞாயிற்றுகிழமை

இடம்: கனடா கந்தசாமி கோயில் மண்டபம்

'எங்கள் ரீச்சர்' எனப் பாசமழை பொழிந்த கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் எமது அன்பு அன்னையின் நினைவாஞ்சலியில் பங்குமாற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம். நினைவாஞ்சலியைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தவறாது பங்கு கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி: ரீச்சர், ரீச்சர் என அன்புடன் பழகியோருக்கும், நோயுற்றிருந்த போது நேரில் பார்த்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசியில் நலன் விசாரித்தோருக்கும், அன்னாரது இறுதி நிகழ்வில் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், எமது சொந்த மண்ணில் அஞ்சலி நிகழ்வு நடத்திய கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும், வளர்மதி முன்னேற்றக்கழகத்திற்கும், கொ.இ.க இணையத்தளத்திற்கும், ஜேர்மனி பழைய மாணவர் சங்க இணையத்தளத்திற்கும் எமது நன்றி.

அவர் வாழ்ந்த காலத்திலும் இறையடி சேர்ந்த போதும் முன்னின்று அவரைப்போற்றி சகல உதவிகளைச் செய்த கனடா கொ.இ.க. பழைய மாணவர் சங்கம் என்றென்றும் எமது நன்றிக்குரியதாகும்.

இந்த அறிவிப்பினை அஞ்சலி நிகழ்விற்கான நேரடி அழைப்பாக ஏற்று அனைவரையும் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மறவாத
சுகிர்த ரீச்சர் குடும்பத்தினர் - தொலைபேசி: 905.883.0524




"கொக்குவில் இந்துவின் புதுமைப் பெண்"

அமரர் திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் B.A. (Lond.)
(சுகிர்த ரீச்சர்)

Late Mrs. Sukirthalakshmy Supramaniam B.A. (Lond.)
(Sukirtha Teacher)

1927 – 1937 – Student at Kokuvil Hindu College
1942 – Appointed as first K.H.C. educated female teacher (Mathematics, English & Tamil)
1983 – Retired as deputy principal with 42 years of service
1993 – Emigrated to Canada
1994 – Established K.H.C. O.S.A. in Canada, president for 4 consecutive years and continued as vice president to date

# நினதடி ஏத்துவோம்!

1910ஆம் ஆண்டு....... கொக்குவில் இந்துக்கல்லூரி தோன்றிய பொன்னாண்டு.
2010 ஆம் ஆண்டு....நூற்றாண்டுவிழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட ஆண்டு.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மண்டபத்திலே தாயின் தவப்புதல்வி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் நூற்றாண்டு விழாவிலே உரையாற்றும் போது "இங்கிருப்பவர்களில் மிகவும் மூத்த பழைய மாணவி நான்தான்", என்று பெருமையுடன் கூறியபோது எல்லோருமே எழுந்து நின்று கைதட்டி ஆரவாரித்தார்கள். இன்று அவரது பிரிவால் கொக்குவில் இந்து சமூகமே இரத்தக்கண்ணீர் வடிக்கின்றது.

சுகிர்தலக்ஷ்மி கல்வி கற்ற காலத்தில் அதிபர் முதல் ஆசிரியர்கள் யாவரும் அவரை 'சிறந்த மாணவி' எனப் பாராட்டினார்கள். அக்காலத்தில் பெண்கள் கல்வி கற்பது என்பது கடினமானதாகும். அதுவும் கலவன் பாடசாலையில் கற்பது என்பது மிகவும் அபூர்வமானதாகும். எனவே அவரைப் பெண்கல்வியின் முன்னோடி எனலாம். 1942 ஆம் ஆண்டு கல்லூரியின் ஆசிரியையாகப் பதவியேற்றார். மிகவும் இளவயதிலேயே ஆசிரியையாகிய இவர் கல்லூரியின் முதலாவது இலங்கைப் பெண் ஆசிரியையாவார். அன்று தொடங்கிய கல்விப் பணி வற்றாத ஜீவநதியாகப் பெருக்கெடுத்தோடியது. பல்லாயிரம் மாணவர்களுக்கு அறிவும் பண்பும் வழங்கியது. தமிழ், ஆங்கிலம், லத்தீன், கணிதம் என்பனவற்றினை மிகத் திறமையாக கற்பித்தார். 'கற்றதொழுகு' என்பது கல்லூரியின் மகுட வாக்கியமாகும். இந்த இலட்சியத்தினை மாணவர்களிடம் பதியவைப்பதில் சிறந்து விளங்கினார். மாணவர்களைத் தாயினும் சாலப்பரிந்து வழி நடத்தினார். மாணவிகளை விளையாட்டுத்துறையில் ஊக்குவித்தார். அவர்கள் இசை, நடனம் போன்ற கலைகளில் பங்குகொள்ள பெரிதும் ஊக்கினார். மாணவர்களை முழுமையான மனிதர்களாக்க வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் எடுத்தார். சக ஆசிரியர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

கல்லூரியின் வளர்ச்சிக்காக பல்வேறு வகைகளில் நிதி சேகரிக்கும் போது இவரது பங்கு மகத்தானதாக இருந்தது. அக்காலத்தில் நவராத்திரி நாட்களில் வீடுகளுக்கு மாணவர்கள் சென்று பாடுவது குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்களை அழைத்துச் செல்லும் துணையாகவும் சேர்ந்து பாடும் ஆசிரியையாகவும் இருந்தார். இத்தகைய செயற்பாடு களினால் கல்லூரிக்கும் கிராமத்திற்குமான உறவு பலமடைந்தது. 1947 ஆம் ஆண்டு கல்லூரியின் கட்டிட நிதிக்காக கொழும்பிலும் மலைநாட்டிலும் மாணவர் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அப்போது அக்கலைக் குழுவில் சுகிர்த ரீச்சரின் பங்கு மகத்தானது.

வருடந்தோறும் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் தேர்த்திருவிழா போன்று மிகவும் கலகலப்பானவை. போட்டிகள் நடைபெறும் காலங்களில் மாணவிகளை மிகவும் அக்கறையுடன் கண்காணித்து கண்ணியம் காத்த காவல் தெய்வம் என்றால் மிகையாகாது.

இவரது அயராத உழைப்பிற்கும், கல்லூரி விசுவாசத்திற்கும், உயர்ந்த சேவைக்கும் அளிக்கப்பட்ட பெருமையே பிரதி அதிபர் பதவியாகும். சிறந்த நிர்வாகி என்ற புகழும் இவரை வந்தடைந்தது.

1994 ஆம் ஆண்டு கனடா பழைய மாணவர் சங்கத்தின் முதலாவது தலைவராக மணி மகுடம் சூட்டப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராக தொடர்ந்து நான்கு வருடம் கடமையாற்றினார். பழைய மாணவர் சங்கம் அன்றுமுதல் இன்றுவரை மிகவும் சிறப்பாக இயங்குவதற்கு சிறந்த வழிகாட்டியாக இருந்தார். கல்விக் களஞ்சியமான அவர் கனடாவில் வாழும் பழைய மாணவர்களின் தகவல்களஞ்சியம் எனலாம். அவரிடம் எந்தவொரு பழைய மாணவர்களின் தொலைபேசி இலக்கத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். பெரும்பாலானவர்களின் குடும்ப விபரங்களையும் நன்கறிந்திருந்தார். இவருடைய நினைவாற்றல் மகத்தானது. வாழ்வின் இறுதிவரை நினைவாற்றல் மிக்கவராக, மிகுந்த தன்னம்பிக்கை உடையவராக இருந்தார். அவருடைய பேச்சில், மூச்சில் கல்லூரி பற்றிய சிந்தனையே மேலோங்கியிருந்தது.

சிறந்த மனையாளாக, நன்மக்களின் தாயாக, பாசமிகு அன்னையாக விளங்கினார். இவர்களது பிள்ளைகள் சிறந்த கல்வியாளர்களாகவும் உயர்ந்த குணஇயல்புகளைக் கொண்டவர்களாகவும் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகமெங்கும் பரந்து வாழும் எமது கல்லூரி பழையமாணவர்கள் இவரைப் போற்றி மகிழ்ந்தார்கள். 2011 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற கல்லூரி நூற்றாண்டு விழாவின் பிரதம விருந்தினராகிப் பெருமை பெற்றார். இலண்டன் வாழ் பழைய மாணவர்கள் இவரைக் கௌரவித்தார்கள். இவர் அவுஸ்திரேலியா சென்றபோது அங்கு வாழும் பழைய மாணவர்களால் பாராட்டப்பட்டார்.

எமது கல்லூரி வரலாறு படைக்க
உதவியவர் தாமே வரலாறாகி விட்டார்.
பெண்மைக்கு பெருமை சேர்த்தவர்
ஆசிரியப் பணிக்கு அணிகலனாகியவர்
கல்லூரியை உயிராக நேசித்தவர்
அன்பிலும் பண்பிலும் மேலானவர்.

*வானவர்கள் வாழ்த்தும் வானுறையும்*
*தெய்வமாகி விட்டார்.*



சுடர். இ. மகேந்திரன்
முன்னாள் அதிபர்
கொக்குவில் இந்துக்கல்லூரி

CURTAIN HOUSE INC
Full House Package
christmas and new years
sale sale sale
$1499* $1499*
we will beat any price in town
LIMITED TIME OFFER. SOME RESTRICTION APPLY
krishna 416 841 5301 416 273 8975
880 ELLESMERE ROAD, UNIT 9
SCARBOROUGH, ON M1P 2W6
www.curtainhouse.ca

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

REGD CHARITY 1992
MRIDANGAM CLASSES IN Markham/ Scarborough /Brampton
Every Saturday, 7- 8pm, Armadale Community Centre,
Markham ( Mccowan/Denison)
Sat , Sun, Tues, 3662, Lawrence ave east,
Scarborough (Markham rd/Lawrence)
Sun, 1-3pm, Earncliffe Recreation Centre, Brampton ( Clark/Torbram)
BY EXPERIENCED MRIDANGAM TEACHER , CHOREOGRAPHER & MUSICIAN
From india with 14 years experience in canada
Call: 647.201.1086
Email: SARMAMRIDANGAM@GMAIL.COM

# எட்டிய நோபல் கிட்டியதா (துன்பம்)



Photo: Mosimann for Balzan — Bruce A. Beutler
Photo: Mosimann for Balzan — Jules A. Hoffmann
Photo: Rockefeller University Press — Ralph M. Steinman

உன்னத உலகின் உயர்வினை நோக்கித்
தன்னலம் அகற்றித் தரச்செயல் ஆற்றி
புன்னகை மாந்தர் புவிதனிற் பொலிந்திட
மன்னுயிர் மதிக்கும் மதியினர் வாழ்வரே

வாழும் அப்பேர் வழியில் உதித்தார்
நாளும் அறிவினை நன்றே வளர்த்து
வீழ்த்தும் நோயின் வீரியம் குறைத்துப்
பாழாம் துயரினைப் பாரினில் குறைத்திட

குறைவிலா ஆய்வுகள் கூர்மதி கொண்டு
நிறைவுடன் செய்து நிகரிலா மருந்துகள்
முறைப்படி நோயினை மழுங்கிடச் செய்தவர்
மறைந்தார் ஐயகோ மனங்களில் துன்பமே

துன்பம் துடைக்கத் துணிந்தமு வர்க்கு
இன்பப் பரிசென இயம்பினர் நோபலை

வன்மைப் புற்றுநோய் வளைத்துப் பிடித்ததால்
மென்மைறவ் ஸ்ரைன்மான் மெல்லுயிர் பிரிந்தது

பிரிவுத் துயருள் பெருந்துயர் இறக்குமுன்
தெரிவில் ஒருவராய்த் தேறியது அறியாது
பரிந்துரைப் பரிசு பகிர்ந்ததைப் பெறாது
சரிந்ததே அவருடல் சரித்திரம் படைத்தே!

\- மீரா

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
ஜோதிடம்
பண்டித் மகேந்திரன் சுவாமிகள்





ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி
ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்
மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித்
அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள்
அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும்
பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்





100% உங்கள் பிரச்சினைகளுக்கு
தீர்வு
உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள்,
செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள்,
வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம்,
பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.
Tel: 647-919-5846
Office
5210 Finch Ave. East Unit # 1
Scarborough, ON M1S 4S4
(Inside of Golden Bakery)
Beside the Meenadchi Temble
Home
100 Winggaraden # 1713
Scarborough, ON. M1B 2P4
(Neilson & Finch)
Close Intersection

# BASEMENT RENT

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, complete washroom & kitchen. Close to all facilities. Avail. immediately.
416.444.9326 / 416.294.1012

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.417.5059

**14TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No pets & No smoking. Avail. immediately. Rooms தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.833.8691

**DONMILLS & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, DVP. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.425.1149 (Week days after 6:00 pm/Weekends Anytime / Leave the Message)

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Couples preferred.
தொடர்புகளுக்கு: 905.471.5994

**MARKHAM & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.271.6657

**NEILSON & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. Close to TTC, hospital, shops. Avail. immediately.
416.724.8265 / 416.732.4207

**KINGSTON & MORNINGSIDE**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, washer, dryer, parking. Close to TTC, school, shopping. Avail. immediately. No pets. Rent negotiable.
416.289.9507 / 416.720.9507

**BIRCHMOUNT & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 15, 2011.
416.587.3982 / 416.825.5993

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to tamil stores, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.836.0800

**MARKHAM & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, bus. Avail. immediately.
416.890.8384 / 647.893.1361

**MCCOWAN & MCNICOLL**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all amenities. Single person preferred. Avail. immediately.
416.304.8466 ( Daytime)
416.291.1605 (Evening & Weekends)

**MCCOWAN & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, YRT, high school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.765.0428

**BRIMLEY & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, shopping, school, doctor's office. Avail. December 15, 2011.
தொடர்புகளுக்கு: 905.947.1356

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt. for rent. Sep. entrance. Inclusive all bills. Parking. Close to all facilities. Also can provide separate rooms.
416.439.6080 / 416.906.5331

**VICTORIAPARK & ELLESMERE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, stores, mall & more. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.576.2655 / 416.444.2655/ 416.844.2655

**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedroom bsmt for rent. Hall, kitchen. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.267.8907

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, kitchen, living room. Close to school, hospital, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.7570

**MORNINGSIDE & SHEPPARD**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, HWY 401, mall. Avail. immediately.
647.986.4898 / 416.520.5883

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry 1 ½ washroom. Close to school, bus, shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.280.6145

**MARKHAM & LAWRENCE**
Bsmt, rooms வாடகைக்கு உண்டு. Kitchen, washroom, sep. entrance, parking, laundry. Close to mall, school. TTC. Excellent condition. Avail. immediately.
416.438.2552 / 647.853.5524

**MARKHAM & LAWRENCE**
Bsmt இல் ஒரு அறை washroom உடன் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately.
416.438.3724 / 416.617.8083

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, TTC mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.937.0220

**MARKHAM & ELSON**
Newly renovated 1 Bedroom walk-out bsmt Apt. for rent. Cable & laundry. All new appliances. Close to YRT, TTC, nofrills, Wal-Mart & doctors. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.2904
(Call after 4 p.m & week ends)

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom or 2 bedroom bsmt for rent. Close to TTC, mall, nofrills, shoppers. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.725.2041

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean. Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**MORNINGSIDE & MILITARY TRAIL**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to HWY 401, high school, TTC, college. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.724.5171 / 416.561.8024 / 416.669.2457

**MIDLAND & FINCH**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. Parking, cable, washer, dryer. Avail. immediately. Close to stores, bus, school, etc.
416.293.8521 / 647.938.8521

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.801.9144

**BELLAMY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.920.2185

**MCCOWAN & DENISON**
2 Bedroom ($950), மற்றும் 1 Bedroom ($800) walk-out bsmt வாடகைக்கு உண்டு. Internet, cable, laundry என்பன உள்ளன. Close to TTC, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.871.3414

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable. Close to bus, school, shopping, etc. Ladies or couple விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.837.0653

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.523.1312

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to YRT, school, mall. Avail. Anytime.
416.669.8711 / 905.201.8350

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.332.3624 / 647.309.7790

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, TTC, YRT, school, elementary school, mall. Avail. November 01, 2011.
905.471.7667 / 647.338.9831

**BIRCHMOUNT & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Single person preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.450.1816

**NEILSON & NIGHTSTAR**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.430.0999

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

**BELLAMY & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to school, TTC, mall. Couple preferred.Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.285.0849

**MARKHAM & 16TH AVE.**
Newly finished 2 bedroom bsmt for rent. Garage side entrance, 1 parking. Close to school, mall. Avail. immediately.
905.209.1421 / 647.405.1962

**9th LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Cable. Close to school & all facilities. Avail. immediately.
416.903.6111 / 905.209.8780

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washroom, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.305.7317

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**NEILSON & FINCH**
Newly renovated 2 bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive. Avail. immediately. No smoking.
தொடர்புகளுக்கு: 416.843.5982

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediatelty.
647.783.4850 / 905.294.2674
416.293.6211

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
416.569.7307 / 416.289.8728

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# BASEMENT RENT

**KENNEDY & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
905.944.2420 / 416.459.8204

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.771.8331

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Couple or ladies preferred. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
416.903.2437 / 647.986.1437

**MIDDLEFIELD & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilitiess. Avail. December 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.297.9549

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

# ROOM RENT

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**NEILSON & TAPSCOTT**
1 Bedroom for rent. Close to all facilities. Single person, working person or student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.321.8440

**BELLAMY & EGLINTON**
3 Bedroom house for rent. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Parking. Close to all facilities. Avail. immediately.
416.522.5679 / 416.266.3847

**DANFORTH & EGLINTON**
Upper level 2 bedrooms for rent. Close to all facilities. Avail. immediately. Each room rent $450.
தொடர்புகளுக்கு: 647.216.7326

**WASHBURN & SHEPPARD IN SCARBOROUGH**
3 Bedroom + 1room for rent. 2 Kitchens, 2 parking. Close to mall, doctor's office, TTC, hospital. No pets & No smoking. You can move any time.
647.388.5295 / 416.724.7653

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

# ROOM RENT

**MORNINGSIDE & LAWRENCE**
Bungalow house இன் மேல்மாடியில் அறை ஒன்று சகல வசதிகளுடனும் வாடகைக்கு உள்ளது. Close to U OF T, campus, TTC. Avail. immediately. சாப்பாடு வழங்கப்படும்.
647.344.5044 / 416.312.6827

**PORTU NION & SHEPPARD CONDO. ROOM FOR RENT.**
(SCARBOROUGH). Cable, internet. etc. Close to all amenities. Rent $375
தொடர்புகளுக்கு: 416.262.9780

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**BIRCHMOUNT & MCNICOLL**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**MARKHAM & HWY 401**
3 அறைகள் கொண்ட அடுக்கு மாடியில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Kitchen, Living, dinning hall, laundry. Close to TTC, shopping, school, college, university, HWY 401. Avail. November 05, 2011. Long Term / Short Term / Temporary rental also available
தொடர்புகளுக்கு: 416.420.1309

**DERRY & HWY 7 MISSISSAUGA**
1 Bedroom in condo. for rent. Close to all facilities.
**MARKHAM & LAWRENCE**
1 Bedroom in apt. for rent. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.522.7599

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# HOUSE FOR RENT

**BELLAMY & LAWRENCE**
3 + 2 Bedroom house for rent. Close to all facilities. Finished bsmt also available.
416.266.4789 / 416.980.5697

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom house for rent. Parking. Close to TTC, high school, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.710.9526

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.439.1507 / 647.774.5667

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.857.8548

# CONDO. FOR RENT

**KENNEDY & HWY401**
1 Bedroom + den brand new condo for rent. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.407.5458

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom + den condo. for rent. 1 Parking. Grate view. All new appliances. Swimming pool, recreation room. Avail. Anytime. Rent $1200 & All inclusive.
தொடர்புகளுக்கு: 416.315.9397

**KENNEDY & HWY 401**
Brand new never lived 1+ den condo. for lease or sale. $1100 for lease.
தொடர்புகளுக்கு: 416.315.9397

# SPACE FOR RENT

**MCCOWAN & BRIMLEY**
சந்திப்புக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் bsmt இல் சங்கீத, வயலின் போன்ற வகுப்புக்கள் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.
416.752.8142 / 647.987.2991

**BRIMLEY & LAWRENCE**
சந்திப்புக்கு அருகாமையில் மணிக்கூடு திருத்தும் கடை ஒன்றில் சிறிய இடம் வாடகைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.419.5580

## RESTAURANT FOR SALE IN AJAX

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Restaurant ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.795.4457
(Leave Message)

மேலும் பக்கங்கள் 24, 26

# JOB JOB JOB

**TOMKEN & DERRY**
Receptionist வேலை ஒன்றிற்கு பெண் ஒருவர் தேவை. Tamil & English நன்றாக பேசத்தெரிந்திருக் வேண்டும்.
தொடர்புகளுக்கு: 905.670.9859

தாய் உணவகத்திற்கு (Thai Restaurant) ஒன்றிற்கு அனுபவமுள்ள Cook தேவை
தொடர்புகளுக்கு: 647.501.1085

## COOK WANTED

**KING HENRY'S ARMS**
Experience line and preparation cooks and dishwasher.
Contact: ***647.287.7790*** after 6:00pm
www.kinghenryarms.com

***Pro Personnel Hiring AZ City Drivers***
Must have 2 years of driving experience. Local Work, Paid weekly.
905.676.2778 / 416.892.9291

**MIDLAND & LAWRENCE**
Flooring stone experience sale person in scarborough.
தொடர்புகளுக்கு: 416.830.3932

***Restaurant Delivery driver wanted***
***Downtown***
***416.889.3191 / 647.771.6237***

# VAN FOR SALE

Honda odyssey van for sale. 2000 year. New shocks, tire. Certified emission test free. 210000 km. Price $4500.
416.269.7052 / 416.358.7265

# CAR FOR SALE

Honda Accord EXR. with emession. Price $750.
தொடர்புகளுக்கு: 416.566.4796

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் நல்லூர் செட்டித்தெருவில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.431.6106

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் கைதடியில் பிறந்து பின்பு கனடாவில் வாழும் 1981 ஆம் ஆண்டு மேடராசி அச்சுவினி நட்சத்திரம் உடைய செவ்வாய் குற்றமற்ற ஆணுக்கு நல்ல குணமுள்ள மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
514.733.0782 / 514.833.9119

# JOB JOB JOB

## SCARBOROUGH வில் வேலைவாய்ப்பு

தமிழில் நன்றாக தொலைபேசியில் உரையாடக்கூடியவர்கள் தேவை. மணித்தியால சம்பளத்துடன் Bouns உம் சேர்த்து வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***416.576.0050***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 287

(1) a. $f(x) = \sin x + x$ $f(-x) = \sin(-x) - x$ $= -\sin x - x$
$= -(\sin x + x)$ $= -f(x)$ $f(x) = \sin x + x$ in odd

(b) $f(x) = 2x^3 + x$ $f(-x) = -2x^3 - x$
$= -(2x^3 + x)$ $= -f(x)$ It is odd

(c) $f(x) = 1/x - x$ $f(-x) = -1/x + x$
$= -(1/x - x)$ $-f(x)$ It in odd

(d) $f(x) = |2x + 3|$ $f(-x) = |-2 + 3|$ $= -|2x - 3|$
$f(x) \neq -f(x)$ ∴ It is neither odd nor even

(2) $f(x) = kx^3 - 1$ and $f^1(15) = 2$ Then y=15, x = 2
$15 = 8k - 1$ $8k = 16$ $k = 2$

(3) $f(x) = ax^2 + bx + c$, Since it passes thru (2, 19)
$19 = 4a + 2b + c$ ——(i)
$f^1(x) = 2ax + b$ Since the tangent at (-1, -8) is horizontal.
$0 = -2a + b$ ——(ii) Since (-1, -8) lies on the curve
$a - b + c = -8$ ——(iii)
Solving (i) & (iii)

$4a + 2b + c = 19$
$a - b + c = -8$

$3a + 3b = 27$
$a + b = 9$
$-2a + b = 0$ ——from (ii)

$3a = 9$
$a = 3$

then b = 6 and $3 - 6 + c = -8$ $c = -8 + 6 - 3$ $= -5$
Equation $3x^2 + 6x - 5 = y$

(4) Given $f(x) = \sqrt{x}$ and $g(x) = x^2 - 1$ find (a) $f(g(-4)) = f(15) = \sqrt{15}$
(b) $f(g(x)) = f(x^2 - 1) = \sqrt{x^2 - 1}$ (c) $g(f(x)) = g(\sqrt{x}) = x - 1$

(5) (a) $f(x) = 2x - 7$ $f^{-1}(x) = x + 7/2$
$f \circ f^{-1} = f(x + 7)/2$ $2(x+7)/2 - 7$ $= x$

(b) $f \circ g = f(5 - 2x)$ $= 2(5 - 2x) - 7$ $= 3 - 4x$

(c) Now $g^{-1}x = 5 - x/2$ $g^{-1} \times f^{-1} = g^{-1}(x + 7/2$
$= 5 - x + 7/2$ $10 - x - 7/4$ $= 3 - x/4$

## Tutorial 288 Questions

(1) If $f(x) = 3x + 5$ and $g(x) = x^2 + 2x - 3$, determine x such that $f(g(x)) = g(f(x))$
(For Grade 12)

(2)At what point on the curve $y = x^4$ does the normal have a slope of 16?
(For Grade 12)

(3) Factor fully (a) $3x^3 - 4x^2 + 4x - 1 = 0$ (b) $x^3 + x^2 - 5x + 3 = 0$

(4) Find the slope of the tangent to $y = x^2 + 9x + 9$ at the point where the curve intersects the line $y = 3x$. (For Grade 12)

(5) The trunk of a tree is approximately cylindrical in shape and has a diameter if 1m when the height is 15m. If the radius in increaing at 0.003m/per annum and the height in increasing at 0.4m per annum, find the rate of increase of the valume of the bank? (For Grade 12)

HOUSE & LAND SALE
JAFFNA
Location: 2nd Cross Street, Jaffna
2½ பரப்பு காணி கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு. 2 ½ Parappu Land including the house and the well. 5 Min. Walk to Subramaniyam Park, Courts, Jaffna Public Library, Central College, Vembadi Girls High School etc. 15 Min. Walk to Jaffa Hospital , Town.
Closer to A9 (Kandy - Jaffna) Highway
Contact : 416-580-0606

MATH, SCIENCE & ENGLISH TUITION
Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 647.831.0363

YOGA - MEDITATION CLASSESS
யோகா, தியான வகுப்பு
Scarborough இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது. ஆர்வமுடையவர்கள் தொடர்புகொள்ளவும்: 416.273.2200



BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# போர்வீரர்களை நினைவு கூரும் நாள்

## Remembrance Day


Red Poppy

நவம்பர் 11, 1918 இல் முதலாவது உலகப்போர் முடிந்தது. இந்தப்போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிந்தன. அப்போரில் இறந்தவர்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்காக இந்தநாள் நினைவுகூரப்படுகிறது. கனடாவில் இதை 'நினைவு கூரும் நாள்' (Remembrance Day) என்று அழைப்பர். ஆனால், இது 'Armistice Day' அல்லது 'Poppy Day' என்றும் அழைக்கப்படும். Poppy களுக்கும் இந்த நினைவு கூரும் நாளுக்கும் என்ன தொடர் உண்டு? John McCrae என்று ஒரு மருத்துவர் தனது நண்பர் இறந்த அடுத்த நாள் ஒரு கவிதை எழுதினார். அதன் பெயர் 'In Flanders Fields. அதில் Flanders Fields என்னும் இடத்தில் இருக்கும் மயானத்தில் வளரும் Poppy பூக்களை பற்றி கூறியுள்ளது.

தற்காலத்தில் செயற்கையான Poppy பூக்களை நவம்பர் மாதத்தில் மக்கள் அணிவார்கள். சிறுபிள்ளைகளுக்கு ஒட்டக் கூடிய (Sticker) Poppy பூக்களை செய்துள்ளார்கள். Poppyகள் மயானத்திலும், போர் நடந்த இடங்களிலும் அதிகமாக வளரும். அதன் சிவப்பு நிறம் போர் செய்து இறந்தவர்களின் இரத்தத்தை நினைவு கூருகிறது. போருக்கு எதிரானவர்கள் வெள்ளை Poppy அணிவார்கள். ஒவ்வொரு நவம்பர் 11ஆம் திகதியிலும் 11.00 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில், பள்ளிப்பிள்ளைகளுக்கு சிறப்பு பாடங்கள் நடத்தப்படும். Flanders Fields கவிதை படிக்கப்படும். எல்லா இடங்களிலும் 11.00 மணிக்கு மௌன அஞ்சலி நடைபெறும். இது கனடாவில் ஒரு தேசிய நிகழ்ச்சியாகும். ஆனால் இது ஒரு தேசிய விடுமுறை நாள் அல்ல.

முதலாம் உலகப்போர் யூலை 28, 1914 இல் ஆரம்பித்து நவம்பர் 11, 1918 இல் முடிந்தது. ஆகஸ்ட் 4, 1914 இல் பிரித்தானியா போருக்கு சென்றபோது, கனடாவும் போருக்கு சென்றது. இப்போரில் 620,000 கனடிய மக்கள் போராளிகளாகவும், தாதிகள் ஆகவும், பாதிரியார்களாகவும் பங்கேற்றனர். கனடாவில் இருக்கும் ஆபிரிக்க கனடியர்களும், பூர்வீக குடிமக்களும் (Aboriginal), ஜப்பானிய கனடியர்களும் இதில் பங்கு பற்றினர். 67,000 கனடியர்கள் இப்போரில் இறந்தனர். 173,000 கனடியர்கள் காயப்பட்டனர். மொத்தமாக 90 இலட்சம் (9 million) போராளிகளும், 2 கோடி (20 million) மக்களும் இறந்தனர்.

''Unknown Soldier' என்பது யார்? அவருக்கும் நினைவூட்டும் நாளிற்கும் என்ன சம்பந்தம்? 2000 ஆம் ஆண்டு மே மாதத்தில், கனடா ஒரு பெயர் தெரியாத கனடியப் போராளியின் உடலை பிரான்சிலிருந்து கொண்டுவந்து ஒட்டாவாவில் புதைத்தது. அந்த உடல் எல்லாப் பெயர் தெரியாத போராளிகளுக்கும் எடுத்துக் காட்டாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூரும் நாளில் Unknown Soldier க்கு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். 'Lest We Forget' என்பது கனடாவின் நினைவுகூரும் நாளுக்குரிய வசனமாகும்.


Tomb of the Unknown Soldier: Ottawa, ON, Canada



**ஞா. ஆரணி**
அகவை 13


## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும். Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


மேலும் பக்கங்கள் 24, 25


## *TUTORING*

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

## *OFFICE SPACE FOR RENT*

### *MORNINGSIDE & SHEPPARD*

Real Estate, Mortgage, Insurance offices போன்றவையும் Show Room உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***
***Pl. Call: Murale - 416.569.4065***

## விஷேட ஆங்கில வகுப்பு

ஆங்கிலம் நன்றாக பேச, வாசிக்க எழுத விரும்புகிறீர்களா? உங்களிற்கு வசதியான நேரத்தில் நீங்கள் கற்கலாம். இலகுவாகவும், விரைவாகவும் கற்கலாம்.
**தொடர்புகளுக்கு: 416.269.5942**

## *GTA UNITS FOR LEASE*

2 Main floor adjacent units facing the entrance. High traffic area with plenty of parking space. Suitable for stores / shops / offices.
தொடர்புகளுக்கு: Perrii: 416.473.6100

## *YOGA - MEDITATION CLASSESS*

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



***GTA Square Mall*** **இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**
தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham -*** செல்வ சோதி - ***416.289.2033***

# இன்னொரு... ஆச்சி வீடு

பாகம் - 3 பகுதி 27

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

‘ஆமிக்காரற்ரை ஜீப்புகளுக்கு நடுவிலை வந்த ஜீப் ஒரு பனை உயரத்துக்குப் பறந்தது எண்டு சொல்லினம். பெடியள் ரிமோட் கொன்றோலராலை கண்ணி வெடியை வெடிக்கச் செய்தவங்கள் எண்டு கதைக்கினம்.’ ‘எப்ப நடந்தது’ மணியன் ‘அது நடந்து இப்ப ஒரு நாலு வருசமிருக்கும்’ குழியின் பக்கமாக இருந்த ஒற்றையடிப் பாதையால் இருவரும் மறுபக்கத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள். ‘அங்கை பாருங்கோ! அதுதான் மன்மதணண்ணையின்ரை வீடு. இங்கையிருந்துதான் பொடியள் ரீமோட்டைப் பாவிச்சவங்களாம்.’இடது பக்கமாக ஓரிடத்தைக் காட்டினான் நேசன். அங்கே ஒரு உடைந்த வீட்டின் அடையாளம் தெரிந்தது. ‘நல்ல பெரிய வீடு. இதுக்குப் பிறகு ஆமிக்காரர் வீட்டை இப்பிடித் தூளாக்கிப் போட்டாங்கள்’ குழியைச் சுற்றிவர ஐந்து நிமிடமென்றாலும் எடுத்திருக்கும். சைக்கிளை உருட்டிக் கொண்டு அந்தக் குழி தொடர்பான பல விடயங்ளைச் சொல்லிக் கொண்டு

**◊ சி.வி. நாதன் ◊**

வந்தான் நேசன். குழியின் மறு பக்கமாக, வீதியிற்கு வந்தவர்கள், சைக்கிள் பயணத்தைத் தொடர, அடுத்த பத்து நிமிட நேரத்தில் மணியனும் நேசனும் புதுக்கிணத்தடியின் ஆலமரச் சந்திக்கு வந்து விட்டார்கள். இந்த இருபது, முப்பது நிமிடத்தில் மணியனை நேசனும் நேசனை மணியனும் இனம் கண்டு கொண்டார்கள். ஆலமரத்தடிச் சந்திக்கு வந்ததும், நேசனின் சைக்கிளுக்குக் காற்றுப் போய்விட்டது.

‘என்ரை வீடு உதிலை கூப்பிடு தூரத்திலைதான் இருக்குது. நான் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீட்டை போய் ரியூப்பை ஒட்டுறேன். நீங்கள் உதிலையும் விசாரிச்சுப் பாருங்கோ’ என்ற நேசன் சைக்கிளை உருட்டிக் கொண்டு போக, மணியன் தேனீர் கடையின் முன்னாக நின்றான். ‘தம்பி நேசன், தேனீர் குடிச்சிட்டுப் போங்கோவேன்’ மணியன் கேட்க, ‘அண்ணை நான் கடையளிலை தேத்தண்ணி குடிக்கிறேல்லை. நீங்கள் குடியுங்கோ’ என்றவன் திரும்பி வந்து தேனீர்க் கடையிலை இருந்த ஒருவரைப் பார்த்து, அவருக்கு மட்டும் கேட்கும்படி ‘சீலு மாமா! இவருக்கு ஒரு ரீயும் சாப்பிட ஏதும் வடை, கிடை, போண்டா கீண்டா குடுங்கோ. நான் பிறகு காசைத் தாறேன்’ சீலு மாமா தேனீர் கடையின் உரிமையாளர். ‘இல்லைத் தம்பி நான்’ ஏதோ சொல்ல வாயெடுத்த மணியனை தடுத்த நேசன், ‘எங்கடை ஊருக்கு முதல்முதலிலை வந்திருக்கிறியள். பேசாமல் இருங்கோ. வசதியெண்டால் உடனை வாறேன்’ என்றவன் ‘சீலு மாமா, இவரிட்டை ஒண்டும் வாங்காதையுங்கோ’ என்று கூறிவிட்டு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு தன் வீடு நோக்கிச் சென்றான். ‘நீ ஒண்டுக்கும் யோசியாதை நான் பாக்கிறேன்’ என சீலு மாமா கூறியது அவனின் காதில் விழுந்திருக்குமோ தெரியாது. மணியன் அந்த ஊர் மக்களின் குணாதிசயங்களை நேசனின் நடத்தையில் இருந்து கண்டு கொண்டான், வியந்தான். இவ்வளவு நெருக்கடியிலும் அவர்களது விருந்தோம்பல் எண்ணம்,.. மணியனுக்கு இதயம் கனத்தது. இவர்களுக்கா இத்தனை அவலம், இத்தனை அழிவு! தானும் அவர்களில் ஒருவன் என எண்ணும் போது, அந்த உயர்ந்த பண்பையிட்டு பெருமிதமடைந்தான். ஆனாலும் எங்களுக்கு ஏன் இப்படி, தேனீர்கடை சின்னஞ் சிறிய தகரக் கொட்டில். ஆலமர நிழலில் இருந்ததினால் நல்ல குளிர்ச்சியாக இருந்தது. கடையினுள்ளே இரண்டு பெரிய மேசைகள், அவற்றின் இரு பக்கமுமாய் இவ்விரண்டு வாங்குகள். ஒவ்வொரு பக்கமும் நாலுபேர் வசதியாக அமரலாம். இவற்றிற்குப் பின்னால் ஒரு ஆளின் இடுப்பளவு உயரத்தில் இருந்த சிறிய மேசையில் பெரியதாக ஒரு செப்புக் குடுவை. அதில் நீர் கொதித்துக் கொண்டு இருந்தது. அதனருகில் தேனீர் தயாரிப்பதற்கான தேவைகள் ஏதோ ஒரு ஒழுங்கமைப்பில் இருந்தன.

அருகில் இருந்த இன்னொரு சின்ன மேசையில் சிறிய கண்ணாடி அலுமாரி. அதன் மேற் தட்டில் சில உணவு வகைகள் வேறு வேறாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கீழ்த்தட்டில் பனையோலையால் பின்னப்பட்ட பெட்டிகளில் ஏதோ வைக்கப்பட்டு, மூடப்பட்டிருந்தன. இடியப்பம், தோசை போன்ற உணவு வகைகளாக இருக்கலாம் என மணியன் நினைத்துக் கொண்டான். சீலு மாமா சாரம் அணிந்திருந்தார். கொஞ்சமாய் முதுகுப் பக்கம் வளைந்திருந்த சீலுமாமா ஐந்தரை அடி உயரத்தில் இருந்தார். சாரத்தை மடித்துக் கட்டியிருந்தது, அவருக்குப் பொருத்தமாக இருந்தது. மணியனைக் கண்டதும் உணவுப் பண்டங்கள் வைத்திருந்த கண்ணாடி அலுமாரியின் ஒரு மூலையில் இருந்த சட்டையை வெகு லாவகமாக எடுத்துப் போட்டு விட்டு, தேனீர்க் கோப்பையை எடுத்து சுடு தண்ணீரில் கழுவி தேனீர் போட ஆயத்தமானார். ‘தம்பிக்கு ரீ போடட்டா இல்லாட்டி பால்க் கோப்பி?’ அசட்டுச் சிரிப்புப் போன்ற ஒன்றுடன் சீலு மாமா கேட்க, மணியன் பதில் சொல்வதற்கு வாயெடுக்கும் முன்பதாக’ சீலு உன்ரை ரீயும் சுண்டலும்தான் விசேசம். ரீயிலை போட்டுக் குடேன்’ என்ற சத்தம் தனது முதுகுக்குப் பின்புறமாய்க் கேட்க, திரும்பிப் பார்த்தான் மணியன். முதியவர் ஒருவர் புன்னகையுடன் நின்றார். ‘இந்த இலகையிலையே சீலுவின் ரீதான் பேர் போனது. குடிச்சுப் பாத்திட்டுச் சொல்லுங்கோ’ சிநேகத்தைக் காட்டியது சிரிப்பு. ‘சரி! அப்ப ரீயிலை தாங்கோ’ மணியனின் பேச்சிற் கூட அந்த ஊரின் வாடையிருந்தது. ஆலமரத்தடியில் இருந்த வேறு நால்வரும் தேனீர் கடையினுள் வந்து விட்டார்கள். எல்லோரும் சாரம் மாத்திரம் அணிந்திருந்தார்கள். மெலிந்திருந்தார்கள். உயிரியல் பாட வகுப்பினர் கண்டால், வேண்டாம் விட்டு விடுவோம். மணியனுக்குப் பார்ப்பதற்குக் கொஞ்சம் சங்கடமாயிருந்தது. ஆனாலும் அவர்கள் எல்லோரும் கடைக்குள் வந்தது மணியனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

‘தம்பி சீலு! பேப்பர் இன்னும் வரேல்லையே? வாசியசாலைக்கே ஒண்டையும் காணேல்லை.’ ‘பெடியன் வெள்ளனவே போனவன். இன்னும் காணேலை. ஆமிக்காரரின்ரை ரவுன்டப்புக் குள்ளை ஆப்பட்டுட்டானோ தெரியேலை. இன்னும் கொஞ்சத்தாலை வந்திடுவான்’ சர்வசாதாரணமாக, தேனீரைப் போட்டுக் கொண்டே சீலு மாமா கேள்விக்குப் பதிலைச் சொன்னார். ஊரார் சீலுமாமாவின் கடையிற்கு வந்து புதினப் பத்திரிகையை நாளாந்தம் வாசிக்கும் பழக்கம் உள்ளவர்கள். அது சீலுமாமாவின் ஒரு உத்தி என ஊரிலை பேசிக் கொள்வார்கள். ‘எல்லோருக்குமாய் ரீ போடுங்கோ சீலு மாமா.’ மணியன் சொல்ல, சீலு மாமாவுக்கு ஆச்சரியமும் சந்தோசமும் ஒன்றாக வந்தது. தன்னை சீலு மாமா என்றது ஆச்சரியம். எண்ணிப் பார்த்தால் மொத்தம் எட்டு ரீ. சந்தோசம் வராமல் என்ன செய்யும். முதலில் வேண்டாம் என்று மறுத்தவர்கள் மணியனின் வற்புறுத்தலுடன் ஒத்துக் கொண்டார்கள்.

- இன்னமும் வரும்


**Sitham Sam Shanmugam** *(Sales Rep)*

**HomeLife/GTA Realty Inc.**

HOMELIFE HIGHER STANDARDS

Cell - 416.230.7820

Office Scarborough - 416.321.6969

Office Mississauga - 905.712.2666

24 hrs.

•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $299,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

8 beds senior or retired home. Monthly income $16,000.

Metal scrap yard for recycling and car sales with house office.

detached brand new home Ontario in London. Near university of Weston.

For students 2 + 1 **Condo.** in Toronto. Near University of York. $130,000

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)

Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician

LG.Ayurvedic Medical Services (SriLanka)

# மூன்று அப்பிள்கள் - ஸ்ரீவ் ஜொப்ஸ் ஒரு குறிப்பு

அப்பிளுக்கும் மனித மேம்பாட்டுக்கும் நீண்ட தொடர்பு இருப்பதை பைபிள் வாசித்திருப்போர் அறிந்திருக்க முடியும். புசிக்கப்பட கூடாது என்று இறைவனால் தடுக்கப்பட்ட அப்பிள் கனியை, ஆதாமும், ஏவாளும் சாப்பிட்டு, அவரின் சாபத்துக்கு உள்ளாகி மனித இனம், மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபட்டு, வெட்கத்தை மறைக்க தமது உடலை இலை குழைகளால் மறைத்ததாக கூறப்படுகிறது. அதுதான் இன்றையை நாகரிகத்துக்கு வழி சமைத்தது. இதே அப்பிள்தான் நியூட்டனின் தலையில் விழுந்து, புவியிர்ப்பு என்ற கோட்பாட்டை வகுத்து, ஒரு விஞ்ஞான புரட்சியை ஏற்படுத்தியது. இருபதாம் நுற்றாண்டில் இலத்திரனியல் உலகில் முன்னணியில் நிற்கும், அல்லது அதை வாங்கி பாவிப்பதே ஒரு பெருமையாக கருதப்படும் ஐ போன் என்ற கையடக்க தொலைபேசியை தயாரித்ததே, அப்பிளின் பெயரைக்கொண்ட அப்பிள் நிறுவனம்தான். இதே அப்பிள் நிறுவனம்தான் மக்கின்டோஷ் என்ற கணினியை உலகிற்கு அறிமுகப்படுத்தி ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை யாராலும் மறக்க முடியாது. இந்த நிறுவனத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான ஸ்ரீவ் ஜொப்ஸ் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு தனது ஐம்பத்தாறாவது வயதில் அக்டோபர் மாதம் ஐந்தாம் திகதி காலமானார்.

அவர் தனது முதலாவது அப்பிள் கணினியை தனது கல்லூரி நண்பருடன் இணைந்து தனது 21வது வயதில், அவரின் வளர்ப்பு பெற்றோரின் வாகனத் தரிப்பு கூடத்தில் தயாரித்து வெளியிட்டார். அந்த சிறிய நிறுவனம்தான் இன்று வளர்ந்து இரண்டு பில்லியன் பெறுமதியுடைய, 4000, தொழிலாளர்களையும் கொண்ட ஒரு நிறுவனமாக பரிணாமித்து நிற்கிறது.



ஸ்ரீவ் 1955 ம் ஆண்டு திருமணமாகாத அமெரிக்க மாணவிக்கும், அதே பல்கலைக்கழகத்தை சேர்ந்த சிரியா மாணவருக்கும் பிறந்தார். மாணவியின் தந்தையார் திருமணத்துக்கு சம்மதிக்காதபடியால், குழந்தையை தத்துக்கொடுக்க அந்த மாணவி முயன்றார். வளர்ப்பு பெற்றோர்கள் கல்லூரி பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என்ற அவரின் கோரிக்கைக்கு இணங்க, வளர்ப்பு பெற்றோர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, குழந்தைக்காக காத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி பெண்குழந்தை பிறக்காதபடியால், இறுதி நேரத்தில் ஸ்ரீவை தத்தெடுப்பது அவர்களால் கைவிடப்பட்டு, தத்தெடுக்க காத்திருந்த வேறு பெற்றோருக்கு கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் வளர்ப்பு தாயார் கல்லூரி பட்டதாரி அல்லவென்றும், தந்தையார் பாடசாலை படிப்பை முடிக்கவில்லை என்பதையும் அறிந்து கொண்ட தாயார் பத்திரங்களில் கை எழுத்திட மறுத்துவிட்டார். கடைசியாக ஸ்ரீவ் படிப்பித்து கல்லூரி பட்டதாரியாக்குவோம் என்ற உறுதி மொழியுடன் அதே பெற்றோருக்கு கொடுக்கப்பட்டார்.

அவர் படித்து வளர்ந்த இடம் இன்று கணினி உலகில் முன்னணியில் நிற்கும் சிலிக்கன் பள்ளதாக்கு பிரதேசத்தை அண்மித்த பகுதியில் தான் அமைந்திருந்தது. பாடசாலையில் படிக்கும் காலத்தில், அருகிலிருந்த ஹெவர்ட் பக்காட் நிறுவனத்தினால் நடத்தப்படும் மாலை நேர வகுப்புக்களுக்கு அடிக்கடி சென்றுவந்தார். அதன் காரணமாக அங்கு அவருக்கு கோடை காலவேலை ஒன்றும் கிடைத்தது. அங்குதான் தனது பிற்கால தொழில் நண்பரான Wozniak

**அ. அன்ரனி மனோகரன்**

உடனான தொடர்பு கிடைத்தது. பாடசாலையில் இருந்து வெளியேறி சமூக கல்லூரியில் இணைந்தார். ஆனால் மத்திய வர்க்கத்தை சேர்ந்த தனது வளர்ப்பு பெற்றோர் கஷ்டப்பட்டு உழைத்து சேமித்த பணம் எல்லாம், தனது படிப்புக்கு விரயமாவதை கண்ணுற்று, ஒரு செமஸ்ரருடன் தனது கல்லூரி படிப்பை நிறுத்திக் கொண்டார். அப்போது தனக்கு அது பயமாக இருந்ததாகவும், ஆனால் தனக்கு விருப்பமில்லாத பாடங்களை படிக்க தேவையற்று போனதாகவும், பிற்காலத்தில் தான் எடுத்தது ஒரு நல்ல முடிவாக அது அமைந்ததாகவும் கூறினார்.

இக்காலத்தில் அவர் நண்பர்களின் அறைகளில் தங்கியும்,

தொடர்ச்சி 30ஆம் பக்கம்


# RAJAH AUTO COLLISION

(மீண்டும் பழைய ராஜா)

5 Years experience in France & 24 Years experience in Scarborough & Montreal

- Body Work + Mechanical
- Custom Modification, Painting
- Frame straiting
- Accident + Insurance Claim
- Collision Repair
- Clear coat Refinishing
- Auto Glass services



வாகனம் வாங்குவதற்கும், விற்பதற்கும் நீங்கள் புதிய அடிபட்ட வாகனங்களை திருத்திக்கொள்ளவும் குறைந்த செலவில் சிறந்த முறையில் திருத்திக் கொள்வதற்கு நம்பிக்கை, நாணயம் உத்தரவாதம்.

**அழையுங்கள்: ஆனந்தன் / ராஜா**

**416.432.0090**

# மூன்று அப்பிள்கள்...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

கோக் புட்டிகளை சேகரித்து, தனது உணவுக்கான பணத்தை சம்பாதித்ததாகவும், கிழமைக்கு ஒருநாள் அருகில் அமைந்திருந்த ஹரே கிருஷ்ணா நிறுவனத்துக்கு சென்று இலவச உணவை பெற்றுக்கொண்டதாகவும், பிற்காலத்தில் அவர் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய உரையில் கூறி இருந்தார். கல்லூரி படிப்பை நிறுத்தினாலும் தனது விருப்பு பாடமான calligraphy வகுப்புகளுக்கு சென்றுவந்தார். அந்த வகுப்புக்களில் கைகளால் எழுதப்படும் விதம்விதமான எழுத்துக்களை பயின்றார். ஒரு நோக்கமும் இல்லாமல் தனக்கு விருப்பம் என்பதற்காக பயின்ற அந்த எழுத்து கலையை, பத்து வருடங்களுக்கு பின் தனது முதலாவது மக்கின்ரோஷ் கணினியில் உட்புகுத்தி, எழுதுருவில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். இவை தான் பிற்காலத்தில் மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் பிரதி பண்ணப்பட்டு இன்று நாம் கணினியில் பாவிக்கும் san serif என்ற அழகான ஆங்கில எழுத்துக்களாக மிளிர்கின்றன. வீடியோ விளையாட்டுக்களை தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் இணைந்து, தனது நீண்ட நாள் விருப்பமான இந்தியப் பயணத்துக்கு பணம் சேமிக்க முற்பட்டார். தனது கல்லூரி நண்பருடன் இணைந்து ஆன்மீகத்தை தேடி இந்தியா சென்று நீம் கரோலி பாபா மற்றும் காஞ்சி ஆச்சிரமங்களுக்கு சென்று, இறுதியாக பௌத்த மதத்தை தழுவி, மொட்டையடித்து நாடு திரும்பினார்.

மீண்டும் வீடியோ விளையாட்டுக்களை தயாரிக்கும் நிறுவனத்தில் இணைந்து, அந்த நிறுவனத்துக்கு முக்கிய தேவையாக இருந்த circuit borad design களை மீள் ஆய்வு செய்து அவற்றை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டார். தனது நண்பருடன் இணைந்து இவற்றை செய்து வரும் இலாபத்தை பிரித்துக்கொண்டார்.

அதேகால கட்டத்தில் ஸ்ரீவ் தனது நண்பருடன் இணைந்து அருகிலுள்ள கணினி விளையாட்டு கழகத்தில் இணைந்தார். 1976 ம் ஆண்டு இன்னும் இரண்டு நண்பர்களுடன் இணைந்து அப்பிள் என்ற நிறுவனத்தை ஸ்தாபித்து அப்பிள் கணினிகளை தயாரிக்கத் தொடங்கினர். நிறுவனம் துரிதமாக, வளர்ச்சி அடைந்தபோது, அதன் வியாபார சந்தையை மேம்படுத்த, ஒரு திறமையான அதிகாரியை தேடினார். பெப்சி கோலா நிறுவனத்தில் பிரபல்யமாக இருந்த தலைமை அதிகாரியை அணுகி "நீர் உமது வாழ்க்கை முழுவதும் சீனி கலந்த தண்ணீர் விற்க போகிறீரா அல்லது என்னுடன் இணைந்து உலகத்துக்கு சவால் விடப் போகிறீரா" என்று கூறி தனது வாதத் திறமையால் அவரை கவர்ந்து தன்னுடன் இணைத்துக்கொண்டார்.

Xerox நிறுவனம் தயாரித்த சில தொழில் நுட்பங்களால் கவரப்பட்டு, தனது முதலாவது மக்கின்ரோஷ் கணினியை அறிமுகப்படுத்தி, GUI என்ற கணினி mouse முறை தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தினார். இதைத்தான் பிற்காலத்தில் மைக்ரோசொப்ட் நிறுவனம், தனது windows 95 operating system த்தில் அறிமுகப்படுத்தி, இன்று பாமர மக்கள் எல்லோராலும் எவ்வித ஆழமான கணினி அறிவு இல்லாமலே, பாவிக்க வழி சமைத்தது என்று சொல்வதை யாராலும் மறக்கமுடியாது,

இன்று உங்கள் கைகளில் இருக்கும் "விளம்பரம்" பத்திரிகை கூட, ஆரம்பகாலங்க ளிலிருந்து இந்த அப்பிள் கணினியில் உருவமைக்கப்பட்டு வெளிவருவது, அந்த கணினிகளின் தொழிநுட்ப திறமைக்கு ஒரு சான்றாக அமையும்.



அப்பிள் கணினிகள் பிரபல்யம் அடைந்ததுபோல், அந்த நிறுவனமும் வளர்ந்தது. அதன் நிர்வாக சபையும் வளர்ந்தது. ஸ்ரீவின் சில பிடிவாத முடிவுகளுக்கு ஒத்துப்போக முடியாத அப்பிள் நிர்வாகம் சில பொருளாதார இழப்புக்களை சந்திக்க நேர்ந்த காரணத்தால், அவரை அந்த நிறுவன பிரதம பொறுப்பாளர் பதவியிலிருந்து 1985 ஆம் ஆண்டு நிறுத்தியது. இதனால் மனமுடைந்த ஸ்ரீவ் தனது பதவியை துறந்து, நெக்ஸ்ட் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

தனது ஸ்ரான்போர்ட் உரையில் இதை அவர் குறிப்பிடும்போது "வெற்றியின் உச்சம் என்ற நிலையிலிருந்து, ஆரம்பம் என்ற கீழ் நிலைக்கு தள்ளப்பட்டபோது, எதுவுமே எனக்கு சரியாகப் படவில்லை. ஆனால் அதுதான் என்னை எனது வாழ்க்கையின் ஆக்கபூர்வமான காலம் ஒன்றுக்கு இட்டுச்சென்றது. நான் அப்பிளிலிருந்து வெளியேறி இருக்காவிட்டால், இப்படி ஒரு படைப்பை இந்த தொழில்நுட்ப உலகுக்கு கொடுத்திருக்க முடியாது"

அந்தக் காலகட்டத்தில் பிக்ஸ்டர் என்ற நிறுவனத்தை உருவாக்கி, டிஸ்னி வேல்ட் உடன் இணைந்து உலகின் முதலாவது அனிமேசன் சிறுவர் திரைப்படமான Toy Story என்ற திரைப்படத்தை தயாரித்தார். இன்று அந்த நிறுவனம்தான் A Bug's Life, Toy Story 2, Monsters, Finding Nemo, The Incredibles, Cars, Ratatouille, WALL-E, Up, Toy Story 3 போன்ற வெற்றிப்படங்களை தயாரித்து, அனிமேசன் திரைப்படத்துறையில் முன்னணி வகிக்கிறது.

1996ம் ஆண்டு ஸ்ரீவ் அப்பிள் நிறுவனத்துடன் மீண்டும் இணைந்து அதன் பிரதம தலைமை அதிகாரி பதவியை ஏற்றுக்கொண்டார் இக்காலகட்டத்தில்தான் அப்பிள் நிறுவனம் கணினிகள் தயாரிப்பதில் மட்டும் நிற்காது வேறுபட்டு, டிஜிட்டல் இசை உலகத்துக்கு தனது கவனத்தை செலுத்த தொடங்கியது. தனது முதலாவது கையடக்க டிஜிட்டல் உபகரணமான ஐபோட் என்ற இசை கேட்கும் கையடக்க உபகரணத்தை 2001 ஆண்டு அப்பிள் நிறுவனம் வெளியிட்டது. இது பெரிதும் இளைய சமுதாயத்தால் விரும்பி வாங்கப்பட்டது. உபகரணத்தை மட்டும் தயாரிப்பதில் மட்டும் நின்றுவிடாது, அதற்கு தேவையான பாடல்களையும், இசை நிறுவனங்களிட மிருந்து பெற்று, சிறிய விலையில் பதிவி-றக்கம் செய்யும் வசதியையும் பாவனையா-ளர்களுக்கு செய்து கொடுத்தது. இத்துடன் நின்று விடாது இன்னும் ஒருபடி மேல் சென்று கையடக்க தொலைபேசி உலகத்துக்குள் நுழைந்து, 2007ம் ஆண்டு ஐபோன் என்ற திரையை தொட்டு இயக்கக்கூடிய இசை, கைத்தொலைபேசி, இணையவலை, சமூகவலை போன்ற அமைப்புக்களுக்கு செல்லக்கூடியதும், காணொளி பார்க்க, எடுக்க கூடியதுமான எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு கையடக்க கணினியை வெளியிட்டு ஒரு சாதனை படைத்தது. ஸ்ரீவின் இரண்டாவது வருகை பெரும் புரட்சியை ஏற்படுத்தினாலும், அண்மைக்கால மாக பெரும்போக நிறுவனங்களில் நடைபெறும் கணக்கு வழக்கு தில்லு முல்லுகளில் அவரும் மாட்டவேண்டி வந்தது. ஒருகட்டத்தில் மீண்டும் ஒருதடவை அப்பிளிலிருந்து வெளியேற்றப்படக்கூடிய நிலை இருந்தது. ஸ்ரீவ் தொழில் முறைமைக் குரிய உடைகளை பெரிதும் விரும்பிய தில்லை. பிரமாண்டமாக நடைபெறும், உபகரண வெளியீட்டு விழாக்களில் கூட அவர் சாதாரண நீலநிற கால் சட்டையுடனும், ஆமைக்கழுத்தை கொண்ட கறுப்பு பனியனுடன் காட்சியளிப்பார். இன்று அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட உபகரணங்கள்தான் நாகரிக உலகத்தின் உச்சம் என்று சொல்லலாம். எவ்வளவுதான் புத்திசாலியாக வும், திறமைசாலியாகவும் இருந்தாலும் அவரின் வாழ்க்கை பெரும் பள்ளமும் மேடும் பெரும்சவால்களும் நிறைந்திருப்பதை காணக்கூடியதாக இருந்தது. தனக்கும், தனது காதலிக்கும் பிறந்த குழந்தையை தன்னுடைய குழந்தை இல்லை என்று சொல்லி நீண்டகாலம் பிடிவாதமாக இருந்தார். இறுதியாக அப்பிள் நிறுவனத்தின் மரியாதையைக் காப்பதற்காக, அவர்களின் நிர்பந்தத்தால், ஒன்பது வருடங்களின் பின் பிள்ளையை ஏற்றுக்கொண்டார். அப்பிள்ளையை வளர்க்க தாயார் பெற்ற அரச உதவி பணத்தை செலுத்தி பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவந்தார். அப்பிள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட Lisa என்ற கணினிக்கு தனது மகளின் பெயரை சூட்டி பெருமைப்பட்டார்.

ஸ்ரீவ் தனக்கு கீழ்பணிபுரியும் பணியாளர்களை நடத்தும் முறை கண்டு, 1993 ஆண்டு ரைம் சஞ்சிகை அவ்வருடத்தின் "கடுமையான நிர்வாக அதிகாரி" யாக ஸ்ரீவை தெரிவுசெய்தது. 1991 இல் திருமணம் புரிந்த அவருக்கு லிசாவை விட ஒரு மகனும் இரண்டு மகளும் உள்ளனர். அண்மையில் வெளிவந்த ஸ்ரீவின் சுயசரிதத்தை எழுதியவர், 60 நிமிடம் நிகழ்ச்சிக்கு வழங்கிய செவ்வியில், ஸ்ரீவின் பெற்றோர் அவரை கைவிட்டு, தத்தெடுத்து வளக்கப்பட்டது அவரை எவ்வளவு பாதித்து இருக்கிறது என்பதை அந்த செவ்வியில் இப்படி குறிப்பிட்டிருந்தார்.

"ஒரு நாள் ஸ்ரீவ் பக்கத்துவீட்டு சிறுமியுடன் விளையாடிக்கொண்டிருந்தபோது அந்த சிறுமி கேட்டார், "உம்முடைய உண்மையான பெற்றோர் உம்மை ஏன் வேண்டாம் என்று சொன்னார்கள்" அப்பொழுதுதான் எனது தலையில் ஒரு பொறி தட்டியது. நான் வீட்டுக்குள் சென்று "ஓ" என்று அழுதேன். அப்போது எனது வளர்ப்பு பெற்றோர் வந்து என்னவென்று வினாவ நான் நடந்ததை கூறி அழுதேன், அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், "இல்லை இல்லை உனக்கு இது விளங்காது, நாங்கள் உன்னை விசேசமாக தேர்ந்தெடுத்தோம்." அதற்கு பிறகுதான் நான் உணர்ந்து கொண்டேன். நான் கைவிடப்பட்டவன் அல்ல. நான் தேர்தேடுக்கப்பட்டவன் என்று. ஏனெனில் நான் விசேசமானவன். அவர் விசேசமானவர் என்பதை அவரின் எண்ணத்தில் மட்டுமல்ல, செயலிலும் இருந்ததை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

கல்லூரிப் படிப்பைக்கூட முடிக்காத ஸ்ரீவ், 2005 ஆம் ஆண்டு ஸ்ரான்போர்ட் பல்கலை-கழக மாணவர்களுக்கு ஆற்றிய உரை மனதை தொடும்படியாக அமைந்திருந்தது. தனது மேடும் பள்ளமும் நிறைந்த வாழ்க்கைப்பயணத்தை, மாணவ சமுதாயத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதற்காக விரிவாக எடுத்துரைத் தார். தான் விரும்பாத பாடத்தை விட்டு தான் விரும்பிய பாடமான "எழுத்து முறைய மைப்பை" கல்லூரியை விட்டபின்னும் தான் படித்ததை எடுத்தியம்பினார். அதுதான் பிற்காலத்தில் கணினி எழுத்துக்களில் ஒரு புதிய படிவத்தை ஏற்படுத்தியதை குறிப்பிட் டார். இதை அவர் பின்வருமாறு கூறினார். "உங்களுக்கு எதில் ஈடுபாடு உள்ளதோ, அதில் உங்களது முழுக்கவனத்தையும் செலுத்துங்கள். புள்ளிகளை முன்னோக்கி பார்த்து இணைக்கமுடியாது. ஆனால் பின்னோக்கி பார்த்து இணைக்கமுடியும். விடுபட்டுபோன புள்ளிகளை என்றோ ஒருநாள் இணைப்பீர்கள். புள்ளிகள் உமது பிற் காலத்தை இணைக்கும் என்று எப்போதும் நம்புங்கள். வாழ்க்கையில் நீங்கள் எதாவது ஒன்றை நம்பித்தான் ஆக வேண்டும். அது உங்களுடைய பலம் அல்லது தூரநோக்கு அல்லது கர்மாவாக கூட இருக்கலாம், இந்த கோட்பாடுதான் நான் பாதாளத்தில் விழுந்த போதெல்லாம் என்னை மேலே எழுப்பி என் வாழ்க்கையை மேம்பட செய்தது."

இந்த உரையின்போது தன்னை ஆட்கொண்ட புற்றுநோய் பற்றி குறிப்பிட்டு, பின்பு தான் முற்றாக குணப்படுத்தப்பட்டதையும் எடுத்தி யம்பி, சாவைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். உங்களுடைய காலம் குறுகியது. வேறு யாருடைய வாழ்க்கைக்காகவும் உங்கள் வாழ்க்கையை வீணாக்காதீர்கள். மற்றவர் களின் உரத்த குரல்களுக்குள் உங்களது குரலை அமிழ்ந்து போக விடாதீர்கள். உங்கள் மனம் என்ன சொல்கிறதோ, அதை பின்பற்ற தைரியத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். 'பசியாக இருங்கள், மடமையாகவும் இருங்கள்' என்று கூறினார்.

குணப்படுத்தப்பட்டதென நம்பப்பட்ட நோய் 2008 ஆம் ஆண்டு மீண்டும் வேறு ரூபத்தில் தலை எடுத்தது. 2009 ஆம் ஆண்டு நுரையீரல் மாற்று சிகிச்சை செய்து கொண்டார். கடந்த தை மாதம் ஆறுமாத விடுப்பெடுத்து வீட்டில் ஓய்விலிருந்தார். ஆவணி மாதம் தனது உடல்நலக்குறைவு காரணமாக தான் அப்பிள் நிறுவன தலைமை அதிகாரி பதவியிலிருந்து விடுபடுவதாக அறிவித்தார். "இறுதியாக அந்த நாள் வந்துவிட்டது. என்னால் இனி நிறுவனத்தின் எதிர்பார்ப்புக்கு அமைவாக எனது கடமை-களை செய்யமுடியாது. ஆகையால் எனது பதவியை இராஜினாமா செய்கிறேன்" என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அவர் நிறுவன தலைமை அதிகாரி பதவியிலிருந்து விடுபட்டாலும், நிறுவன சபை பணிப்பாளராக இருந்தபடியால் இறப்பதற்கு முதல்நாளும் அவர் வேலை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி: *allaboutSteveJobs.com, thestar.com*

# கண்ணதாசன் நினைவுகள் - 2

## காமராஜருக்கு விருப்பமான கண்ணதாசன் வீட்டு சாப்பாடு!

‘கவிஞன் யான் ஒரு காலக் கணிதம்’ என்று பாடிய, கவிஞர் கண்ணதாசனை தமிழ்ச் சமூகம் கல்வெட்டாய் தன் மனதில் பதித்துக்கொண்டது, வரலாறு. உலகம் முழுக்க தமிழர்கள் வாழும் எல்லா இடங்களிலும், காற்று வெளியில் அவரது பாடல் ராஜாங்கம் கம்பீரமாக நடந்து கொண்டிருப்பது, இன்றைய யதார்த்தம். எதிர்வரும் காலங்களிலும் தமிழர் மனங்களில் வாழப்போகும் அந்த மகா கவிஞன் பற்றி இந்த இதழிலும் தொடர்கிறார் காந்தி கண்ணதாசன்... “இன்று சென்னையில் விருந்து கலாசாரம் பரவலான ஒன்றாக ஆகிவிட்டது. ஆனால், 1960களில் விருந்து கலாசாரம் என்பது சினிமா துறை சம்பந்தப் பட்ட ஒன்றாக மட்டும்தான் இருந்தது. டி.வி.எஸ். போன்ற பெரும்பணக்காரர் வீடுகளில்கூட விருந்துகள் நடப்பதில்லை. சினிமா துறையிலும் எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஏ.எல்.எஸ்., அப்புறம் எங்கள் வீடு... இந்த இடங்களில் மட்டும்தான் அப்போது விருந்துகள் நடைபெறும். ஒவ்வொருவர் வீட்டில் நடைபெறும் விருந்துகள் குறித்தும் தனித்தனி சுவாரஸ்யமான கதைகள் உண்டு. அப்பா, அரசியல் நண்பர்களுக்கு ஒரு நாள், இலக்கிய நண்பர்களுக்கு இன்னொரு நாள், சினிமா நண்பர்களுக்கு மற்றொரு நாள் என்று தனித்தனியாக விருந்துகள் கொடுப்பார். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தினங்கள், விருந்தால் வீடு களைகட்டும். ‘கண்ணதாசன் வீட்டு விருந்து தகவல் எப்போது வரும் என காத்திருப்போம்’ என பின்னாட்களில் சில அப்பாவின் நண்பர்கள் என்னிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து அப்பாவின் விருந்து அப்போது எவ்வளவு பிரசித்தமானதாக இருந்திருக்கும் என ஊகிக்கலாம்.



அமிதாப்பச்சன், ராஜ்கபூர், சஞ்சீவ்குமார்... போன்ற வட இந்திய சினிமா பிரபலங்களை அப்பாவின் விருந்துகளில்தான் முதன் முதலாக நான் சந்தித்திருக்கிறேன். விருந்துக்கு வரும் பிரபலமானவர்கள் அப்பாவுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கும் போதும் அப்பாவைச் சந்திக்க அடிக்கடி வீட்டுக்கு வரும் காமராஜர், அண்ணா போன்ற அரசியல் தலைவர்கள் அக்காலத்தில் தமிழகத்தில் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பது புரியத் தொடங்கிய போதும்தான் எங்களுடன் விளையாடி, கலாட்டக்கள் செய்துகொண்டு, சாதாரணமான ஒருவராக எங்களுக்கு தோற்றம் தந்துகொண்டிருக்கும் அப்பா, உண்மையில் சாதாரணமான அப்பா இல்லை என்பது உறைக்கத் தொடங்கியது. அது அப்பா அளவுக்கு உயர வேண்டும் என்னும் வெறியை, வைராக்கியத்தை என்னுள் உருவாக்கியது. இன்று அது சாத்தியமானதில்லை என்பதையும் உணர்ந்து கொண்டிருக்கிறேன். வீட்டில் நடை பெறும் விருந்துகள் தவிர, தனியாக மது அருந்தும்போது உடன் இருக்கவேண்டிய நண்பர்கள் எனச் சிலரை வைத்திருந்தார், அப்பா. மலையாளக் கவிஞர் வயலார் ராமவர்மா இசை மேதைகள் எம்.எஸ்.விஸ்வநாதன், கே.வி.மகாதேவன், ஜி.ஆர்.நாராயணன், சோ ராமசாமி, ஆஷா, நடராஜ், கலீல் சௌத்ரி... என்று அந்த நண்பர்கள் வட்டம் மிகச் சிறியதுதான். இந்த இரண்டு கும்பலிலும் மது அருந்த நான் உட்பட வீட்டில் மூத்தப் பையன்கள் மூன்று பேருக்கு மட்டும் அனுமதி உண்டு. வீட்டில் எப்போதும் பிரிட்ஜில் பியர் பாட்டில்கள் இருக்கும். சில சந்தோஷமான மன நிலைகளின்போது அப்பா எங்கள் மூன்று பேரையும் கூப்பிடுவார். “ஃபிரிட்ஜில் போய் பியர் எடுத்துக்கொண்டு வாங்கடா” என்பார். அப்போது அம்மா, “பிள்ளைகளைக் கெடுக்காதீங்க” என்று கோபித்துக் கொள்வார். “வெயில் காலங்களில் பியர் சாப்பிடுவது உடம்புக்கு எவ்வளவு நல்லது” என்று அப்பா, அம்மாவுக்கு விளக்குவார். பிறகு, “என் பிள்ளைகள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என் காலத்துக்குப் பிறகு அவர்கள் என் பெயரைக் கெடுக்கமாட்டார்கள்” என்பார். இப்போதும், யோசித்துப் பார்க்கும்போது எங்கள் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கை, அவரது புரிதல் எல்லாம் மிகச் சரியானது என்றுதான் தோன்றுகிறது. அவர் காலமான தினத்திலிருந்து தொடங்கி இன்று வரை அவரது குழந்தைகளான நாங்கள் யாரும் மது அருந்தியதில்லை. அண்ணாத்துரை மேல் அப்பா பெரிய மரியாதை வைத்திருந்தார். அவர் மேல் கொண்டிருந்த மரியாதை காரணமாக, என் தம்பி ஒருவனுக்கு அண்ணாதுரை என்றே பெயர் வைத்தார். ஒருநாள் அண்ணா எங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வந்திருந்தார். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தம்பியை அண்ணாவுக்கு அறிமுகம் செய்துவைத்தார் அப்பா. சாப்பிட்டுவிட்டு, கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசிவிட்டு புறப்படும்போது, வாசலில் அப்பாவிடம் அண்ணாத்துரை சொன்னார்: “உன் பையனுக்கு என் பெயரை ஏன் வைத்திருக்கிறாய் என்பது புரிந்து விட்டது!” அப்பா, “அப்படி என்ன புரிந்து கொண்டீர்கள், சொல்லுங்கள்?” என்றார் அப்பா. “என் முன்னாலேயே டேய் அண்ணாத்துரை என்று கூப்பிடுவதற்குத் தானே” என்று அண்ணா சொன்னதும், கூடியிருந்த எல்லோரும் பலமாகச் சிரித்துவிட்டோம்.

**சந்திப்பு: தளவாய் சுந்தரம்**

தொடர்ச்சி 37ஆம் பக்கம்


SABESAN DENTURE CLINIC

பல் கட்டும் துறையில் விசேட நிபுணர்

We Specialized in..........
Full Dentures
Immediate Dentures
Partial Dentures
Implant Retained Dentures
Mouth Guards
Anti-snoring Devices
Repair of Broken Dentures
Relining for Loose Dentures
Soft Liners
Teeth Whitening





தனிப் பல்லாகவோ, ஒருசில பற்களாகவோ, அல்லது முழுப்பல் செட் ஆகவோ இருப்பினும் சகலவகை செயற்கைப் பற்களும் உங்களுக்கேற்ப செய்துதரப்படும்.

உங்கள் தற்போதய பற்களின் குறைபாடுகளை சீர்செய்யவும் உடைந்தபற்களை ஒட்டவும் எம்மை அழைக்கவும்.

சபேசன் தங்கத்துரை BDS (SRI LANKA) DD (CANADA)
Denture Specialist

இலங்கையில் பலவருடங்களாக DENTAL SURGEONஆக கடமையாற்றியவர்

416 854 9152

எமது Labல் உடனுக்குடனும், நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்ட பற்கள்.

அவசரதேவை உள்ளவர்களுக்கு ஒரே நாளிலும் பற்கள் கொடுக்கப்படும்.

சமூகநல நிதி உட்பட சகல காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்



• வாழ்க்கையில் உங்களின் கனவை நனவாக்கவிரும்புவோர் ஆண் / பெண் அல்லது குடும்பமாக இருப்போர்

• *Big Income (Huge Money)* தேவை என இருப்போர்கள்

• சுதந்திரமாக *Team Work* ஆக இயங்கி பணம் சம்பாதிக்க விரும்புவோர்கள்.

• நம்பிக்கையுடன் எம்மைத் தொடர்பு கொண்டால் நாம் உதவி செய்ய முடியும். அவர்கள் மட்டுமே நாம் காட்டும் Planஇனால் முன்னேற்றம் காண்பதுடன் Stress இல்லாது ஒரு புதிய வாழ்வை வாழ்வார்கள்.

எங்கே அழையுங்கள் பார்க்கலாம்
416.669.2954 /6 416.352.8655

எங்களிடம் *2 plan* உள்ளது. நீங்களே தெரிவு செய்து கொள்ளலாம். நீங்கள் கண்டிப்பாக ஏமாற்றம் அடையமாட்டீர்கள்.

# மூலநோயும் (Piles) உணவும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இதனை ஆங்கிலத்தின் மருத்துவநிலையில் Hemorrhoids எனக் கூறப்படுகின்றது. ஒருவருக்கு மலம், வெளியேறும்போதும், வெளியேறி முடியும்போதும் இரத்தம், மலத்துடன் சேர்ந்தோ, சேராமல் வருவதே மூலரோகம் (Piles) எனப்படும். இதில் உள்மூலம், வெளிமூலம் என இருவகையாகக் கொள்ளலாம். உள்மூலம் என்றால் வெளியில் வீக்கமோ, கட்டியோ இன்றி மலம் கழியும் போது இரத்தம் வருவதாகும். வெளிமூலம் என்பது மலவாசலின் வெளியில் வீக்கம் அல்லது கட்டி இருப்பதைக் குறிக்கும். மூலவியாதியில் இரத்தம் வெளியேறியபின் பார்வையிட்டால் சிவப்பு நிறம் கொண்டதாக இருக்கும். வலித்தன்மை இருக்காது. ஆனால் மலவாசல் பகுதியில் அரிப்பு, எரிச்சல் தன்மை இருக்கும். இது பெரும்பாலும் கீரைப்பூச்சி, தானப்புழு காரணமாக இருக்கலாம். ஆகையினால் உணவு உண்ட பின்பும், மலம் கழித்தபின்பும் கையை நன்கு கழுவிச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அதற்குரிய மருந்துகளையும் பாவிக்க வேண்டும்.

கையை நன்கு கழுவா விட்டால், நகம் வெட்டாமல் இருந்தால், உள் ஆடைகள் சுத்தம் இன்றி இருந்தால் கீரைப்பூச்சி முட்டைகள் நாம் உணவு உண்ணும் போது உள்சென்று விடும். மேலும் தண்ணீர் நன்கு சூடாக்கி ஆறவைத்து குடிக்க வேண்டும். சுத்தமான காற்றைச் சுவாசித்துக் கொள்ள வேண்டும். இவற்றின் மூலமும் எமக்கு



கீரைப்பூச்சி குடிகொள்ளலாம். 'சுத்தம் சுகம் தரும்' என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பச்சைக் காய் கறிப் பொருட்கள், பழவர்க்கங்கள் சுத்தம் செய்து பாவிப்பது மிக நன்று.

மலச்சிக்கல் ஏற்படாதபடி அன்ன ஆகாரங்களைக் கைக்கொள்ள வேண்டும். மரக்கறி, கீரை, பழம் போன்றவற்றை நன்றாகத் தேர்ந்து எடுத்து நாளாந்த உணவில் சேர்ப்பது மிக நன்று. தண்ணீர் வேண்டியளவு பருகி வருதல் வேண்டும். துயில் கொண்டு காலை எழும்பும் போது வாயை நன்கு சுத்தம் செய்து தண்ணீர் பருகுதல் மிக நன்மை பயக்கும். இதனால் மலச்சிக்கல் ஏற்படாது எம்மைப் பாதுகாக்க முடியும். மருந்தும் தேவைப்படாது சுகத்துடன் வாழலாம். மூலவியாதி பரம்பரையாகவும் வருவதற்கு இடம் உண்டு. இதனைத் தங்கள் குடும்ப வைத்தியர்களிடம் கூறுவதினால் நற்பயன் உண்டு. மூலவியாதியில் இரத்தம் கழிவதினால் உரியவர் இரத்தசோகை உடையவராகவும் இருப்பார். எனவே இதற்கு இரும்புச் சத்துள்ள உணவு முக்கியமாகும். உ+ம் இறைச்சி, முட்டை மஞ்சள்கரு, ஈரல், தேன், கீரைவகை உலர்ந்த பழங்கள், வெந்தயம், தக்காளி என்பனவாகும். மேலும் இவ்வியாதியில் அடிவயிற்றுப் பகுதியில் வீக்கம், உடல் இளைப்பு, பலவீனம், நெஞ்சுவலி, இருமல், அதிக தாகம், வாந்தி, தொடைத்தாபிதம், மூட்டுப்பகுதிகள், இடுப்பு போன்ற இடங்களில் வலிப்பு நிலையும் காணப்படலாம். அத்துடன் முழங்காலுக்கு கீழ் வயிற்றுடன் தசைப்பிடிப்பு, கோபநிலை, அமைதியின்மை, கண்கள் வீக்கநிலை போன்றவையும் காணப்படலாம்.

எதற்கும் நாம் மலம்கழிப்பதை தாமதிக்க கூடாது. வழமையான நேரத்தைக் கையாள வேண்டும். பழக்கத்தில் கொண்டுவருதல் நன்றாகும். மலம் கழிக்கும் போது முக்கக்கூடாது. அவசரநிலை தவிர்க்கப்படல் வேண்டும். ஆறுதல் வேண்டும். உணவில் காரப்பொருட்கள், எண்ணெய்ப்பொருட்கள், அதாவது மசாலவர்க்கங்கள் குறைக்கப்படல் அல்லது தவிர்க்கப்படல் வேண்டும். அதிக

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909



தொடர்ச்சி 38ஆம் பக்கம்



# ஆறுமுகனின் வீறுமிக்க விரதம்

## கந்தசஷ்டி விரத ஆரம்பம் 27.2011 வியாழக்கிழமை

ஓராறு முகமும், ஈராறு கரமும், ஆறிருதடந் தோளும் கொண்டு விளங்கும் முருகப் பெருமான் தீராதவினைதனைத் தீர்ப்பவன். முருகனது உறுப்புக்களும், வீடுகளும், மந்திரமும் மூன்றின் பெருக்கமாகவே உள்ளதைக் காணலாம். மூவிரண்டு அதாவது ஆறு எண்ணிற்கும் அழகன் முருகனுக்கும் அதிக சம்பந்தம் உளது. அவனது முகங்கள் ஆறு. அவன் ஆறு தீப்பொறிகளின்றும் உருவாகியவன். சிவனுடைய ஐந்து முகங்களான அகோரம், வாம தேவம், தத்புருஷம், ஈசானம், சத்தியோசாதம் என்பவற்றுடன் அதே முகமும் சேர்ந்து ஆறுமுகன் ஆயினன். கார்த்திகை மாதர் அறுவரால் வளர்க்கப்பட்டவன். அவனது வீடுகளும் ஆறாகும். திருப்பரங்குன்றம், திருவேரகம், திருஆவினன்குடி, பழநி, திருச்செந்தூர், குன்று தோறாடல் என்பன அவையாம். இவை படைவீடுகள் எனப்படும். எனவே முருகன் படைவீடுடைய பரமன். அவனது மந்திரம் "சரவணபவ" என்ற ஆறெழுத்து மந்திரமாகும். அவனது விரதம் கந்தசஷ்டி ஆறு நாட்களைக் கொண்டது. மேலும் ஆறு அண்டங்களுக்கு அதிபதி முருகன். மாறு பாடின்றி ஆறுமுகனை அனுதினமும் ஆராதனை செய்தால் எமது எதிரிகளை கூறு செய்து எமக்கு தேறுதல் அளிப்பான். "சுப்பிரமணிய பஞ்ச தசாட்சரி" என்பது முருக உபாசனைக்குரிய மந்திரம்.

கந்தனை நினைந்து அனுட்டிக்கப்படும் விரதமாதலால் கந்தசஷ்டி எனப்படுகின்றது. அது ஆறு நாட்கள் அனுட்டிக்கப்படுவதாகும். இது மிகவும் கஷ்டமான விரதமாகும். ஆறுநாளும் முழுப்பட்டினி அல்லது ஒருவேளை உணவு பச்சரிசித்சாதம், பழவகைகள், இளநீர், எலும்மிச்சம்பழச்சாறு இவற்றையே உணவாக உட்கொள்ள வேண்டும்.

சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பது கிராமியப் பழமொழி. சட்டியில் உணவு இருந்தால் அகப்பையால் அள்ளலாம் என்பது இதன் வெளிப்படையான கருத்து. சஷ்டியில் விரதம் உருவாகும் என்பது இதன் உட்பொருள். எனவே குழந்தைச் செல்வமில்லாதவர் இவ்விரதத்தை அனுட்டித்தால் மழலைச் செல்வத்தை பெற்றின்புறுவர். அத்துடன் பெரும் செல்வத்தையும் அடைவர். எதனையும் முருகனிடம் வேண்டினால் இல்லை என்னாதவன் இளமுருகன். அத்துடன் முனிவு அறியாதவன் முருகன். மொழியும் அடியார்கள் கோடி குறை கருதினாலும் வேறு முனிய அறியாத தேவர் பெருமான் அவன். மேலும் வைதாரையும் வாழ வைப்பவன் வடிவேலன். சஷ்டியில் ஆறு நாட்கள் விரதம் இருக்க வேண்டும். ஒவ்வொருநாளும் விடியற்காலையில் எழுந்து, காலை கடன்களை முடித்து, நீராடியபின் பூரண கும்பம் வைத்து, தருப்பை பரப்பி, அதன் மீது சந்தனம் வைத்து, குங்கும் அட்சை இட்டு, முருகனை அதில் ஆவாகனம் செய்து, மலர்தூவி, தூயதீபம் காட்டி, அர்ச்சித்து வழிபட வேண்டும். பகலிலும் இரவிலும் நித்திரை செய்யக்கூடாது. ஆறு காலப் பூசை செய்ய வேண்டும். கந்தன் சரிதம் கேட்க வேண்டும். கந்தஷஷ்டி கவசம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா இவற்றைப் பாராயணம் செய்ய வேண்டும். ஏழாம் நாட்காலை பாரணை செய்ய வேண்டும். பார்வதி, பரமேஸ்வரனின் காதல் மைந்தன், ஒருகை முகன் தம்பி , திருமாலின் மருகன், தெய்வயானையின் கணவன், குறவள்ளிக் காந்தன் எனப் பெருமை பெறும் முருகனை ஒருமை மனத்துடன் உள்ளன்போடு வழிபட்டால் நாம் பெருமை அடையலாம். முருகனது பெருமையை கூறும் நூல் திருப்புகழாகும். இது பரகதிக்கு ஏணி, அருள் கடலுக்கு ஏற்றம், மனத்தளர்வுக்கு ஆணி, பிறவி மாசறுக்கும் அரம். திருப்புகழை அன்புடனும், நியமத்துடனும் ஓதுவார்க்கு அட்டமா சித்திகளும் வைரப்பெறும் முருகப்பெருமானுடைய திருவருளை எளிதாகப் பெறுகின்ற நெறி திருப்புகழை உள்ளம் உருகி ஓதுதலாகும். 'அன்பில் கீதம் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே' என்ற அப்பர் வாக்கு நினைவு கூரத்தக்கது.

அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என் பொன்மணியை இறைவனை ஈசனை
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே



ஆன்மாவும் பரமாத்மாவும் குழைந்து ஒன்றாகி நிற்கும் நிலையில் உள்ளம் உருகும். உணர்வு உருகும். அதற்கு மேலாக என்பும் உருகும்.

ஆறாம் நாள் சூர சங்காரம் நடைபெறும். நான் என்ற அகங்காரமும் எனது என்ற மமகாரமும் உடையவர்கள் எல்லோரும் சூரபன்களே! நான் என்பது நமது இருப்பிற்கு தேவை எனினும், அது ஒழிந்ததையே சூர சங்காரம் சுட்டி நிற்கின்றது. சூரன் ஒவ்வொரு தலையோடு வந்து முருகனோடு மோதி மோதி இறுதியில் சேவலும் மயிலுமாகி முருகத்துவம் பெறுவதே சூரசங்காரம். சூரன் அழிக்கப்படவில்லை. ஆட்கொள்ளப் பட்டான். மாமரத்தை இருகூறுகளாக்கி சேவலை தன்புகழ் பாடவும் மயில் தன்னை சுமக்கும் வாகனமாகவும் ஆக்கிக் கொண்டார். இதனால் "கொக்கறுக்க கோ" என்று குமரனை குவலயம் கொண்டாடு கின்றது. திருச்செந்தூரில் கந்தஷஷ்ரி விரதம் மிகச் சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்றது.



நா. க. சிவராமலிங்கம்

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.

Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

WIRE MAGIC SOUND & SECURITY
• Alarm
• Hid Lights
• Mobile Video
• Auto Detailing
• Auto Electrical Diagnostics
• Starters
• Auto Tinting
• Sound Systems

Tel: 416.754.7526
Fax: 416.754.9792
wiremagic@gmail.com
5310 Finch Ave E. Unit #39 Scarborough ON MIS 5E8

தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப் பொருட்களை வழங்குவது.




NO 01

நா நரம்புகள் சிலிர்த்திடும் சுவை




Niru Niru நிரு பிராண்ட்

நிரு பிராண்ட் தயாரிப்புக்களே

# குவாண்ரம் பிறந்த கதை

## நுண்ணுலகியல் 21

சென்ற தடவையின் முடிவில் சில வினாக்களை எழுப்பியிருந்தேன் அல்லவா? அவை குவாண்ரம் பிறந்த கதைக்கு மிகவும் முக்கியமான வினாக்கள். அதுமாத்திரமல்ல, சார்பியலின் தோற்றம் கூட, இவ்வினாக்களின் விடையில் இருந்துதான் வந்தது. அவற்றை இனிப் பார்ப்போம்.

19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இயற்பியலில் (பௌதீகம்) இனி எதுவும் கண்டுபிடிக்கத் தேவையில்லை, இயற்பியல் முழுமையடைந்து விட்டது எனச் சில இயற்பியல்வாதிகள் இறுமாப்படைந்து இருந்தவேளையில், அக்காலத்தின் நியூட்டனின் செம்மையினால் விளங்கப்படுத்த முடியாத இரண்டு சிக்கல்களை லோட் கெல்வின் (Lord Kelvin) என்பவர் சுட்டிக் காட்டினார். அவர் குறிப்பிட்டபடியே அவ்விரு சிக்கல்களும், இயற்பியலில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தின. இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமாகிய ஆண்டு (1900) இக்கருத்தினைக் கெல்வின் Royal Institution இல் நடந்த பொதுக் கருத்தரங்கில் கூறியிருந்தார். கெல்வின் சுட்டிக் காட்டிய முதலாவது சிக்கல் நியூட்டன், பேரண்டம் முழுவதும் ஈதர் எனும் கண்களுக்குத் தெரியாத ஊடகம் நிரம்பியுள்ளது, அவ்வூடகத்தினுள்தான் வான்பொருட்கள் எல்லாமுமே அசைகின்றன என்ற கருத்தை முன்வைத்திருந்தார். அதன் அடிப்படையில்தான் ஒளியும் ஈதரில் செல்கின்றதென மாக்ஸ்வெலும் கூறியிருந்ததும் உங்களுக்குத் தெரியும். மைக்கல்சன் - மோர்லி என்கின்ற இரண்டு விஞ்ஞானிகள் இந்த ஈதரை இனங்காண ஒரு உத்தியைப் பாவித்து பரிசோதனை ஒன்றினைச் செய்தார்கள். அப்பரிசோதனையைப் பார்ப்பதற்கு முன்னதாக அவர்களது மெச்சத்தக்கதான உத்தியைத் தெரிந்து கொள்வோம். தண்ணீரில் நாங்கள் நீந்துகிறோம் என்போம் அப்பொழுது தண்ணீருக்கு என்ன நடக்கிறது என யோசித்துப் பாருங்கள். நாங்கள் நீந்தும் திசைக்கு எதிரான திசையில் தண்ணீர் அசைகின்றதல்லவா. அப்படியாக, ஈதரில் எமது புவி அசைந்து கொண்டிருப்பின், ஈதரும் புவியசையும் திசைக்கு எதிரான திசையில் அசைய வேண்டும். அதன்படி, எமது புவியைச் சூழவுள்ள ஈதர் எப்பொழுதும் புவியின் கதியிற்கு ஒத்ததாக ஆனால் எதிராக அசைந்து கொண்டே இருக்க வேண்டும். இதனை ஈதர் காற்று என அழைத்து, இந்த ஈதர் காற்றின் விளைவுகளை தெரிந்து கொள்வதன் மூலமாக ஈதரை மறைமுகமாக தெரிந்து கொள்ளலாம் என்பது மைக்கல்சனினதும் மோர்லியினதும் நம்பிக்கை. இதனை மெய்யபடுத்தி ஒரு பரிசோதனையை அவர்கள் இருவரும் செய்தார்கள்.



உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 98

தமது பரிசோதனைக்கு எமது புவியையே எடுத்துக் கொண்டார்கள். புவி ஒரு வருடத்தில் ஒரு முழுச் சுற்றியை, கதிரவனை மத்தியில் வைத்து வருகின்றதல்லவா. எனவே 6 மாத இடைவெளியில் புவி தனது பாதையில் அரைப் பகுதி தூரங்களின் முனைகளில் இருக்கும். இவ்விடங்களில் புவியின் கதியானது எதிர் எதிர்த் திசைகளில் காணப்படும். இவ்விரண்டு நிலைகளிலும், தொலை தூரத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட விண்மீனில் இருந்து வருகிற ஒளியின் வேகத்தினை இருவரும் கணித்துப் பார்த்தார்கள். ஈதர் காற்றின் விளைவாக, ஈதரில் ஒளி பயணப்பட்டு வருவதால் ஒளியின் கணிக்கப்படும் வேகத்தின் பெறுமானம் இரண்டு நிலையிலும் வேறுபடும் என்பது நியூட்டனின் செம்மைப் பொறிமுறையின் முடிவாகும். ஆனால் பரிசோதனையின் போது பெறப்பட்ட பெறுமானங்களில் இருந்து பார்க்கையில் செம்மைக்கு ஒத்துவராத முடிவாக, இரண்டு நிலைகளிலும் ஒளியின் வேகம் ஒரே அளவினதாக இருந்தது. பலதடவை இப்பரிசோதனை செய்து பார்த்த போதிலும் முடிவுகளில் மாற்றமில்லை. அதுமாத்தரமல்ல, எமது புவியானது கதிரவனைச் சுற்றும் அதன் பாதையில் எந்தவொரு இடத்தில் இருந்தும் அந்த விண்மீனில் இருந்து வரும் ஒளியின் வேகத்தை பரிசோதனை வாயிலாக கணிக்கையில் எப்போதுமே ஒரே பெறுமானத்தைத் தந்ததை அவதானித்தார்கள். இதன்படி பார்க்கையில் ஒளியில் ஈதர் காற்று எந்தவொரு தாக்கத்தையும் தரவில்லை என்பது போல இருந்தது அது எப்படி? இது செம்மைப் பொறிமுறைக்கு முரணானது அல்லவா? சிலர் பரிசோதனையில் ஏதோ பிழையிருக்க வேண்டும் என்றார்கள். வேறு சிலரோ பரிசோதனை உபகரணங்கள் சரியானவையாக இல்லைப் போலும் என்றார்கள், இன்னும் சிலரோ கணிப்புக்களில், அளவீடுகளில் பிழைகள் இருக்கலாம் என்றார்கள். எவருமே, ஈதரிலோ அல்லது செம்மைப் பொறிமுறையிலோ எந்தவொரு சந்தேகமும் கொள்ளவில்லை. அந்த அளவிற்கு செம்மைப் பொறிமுறையானது ஒரு வெற்றிகரமான பௌதீகத்தின் கூறாக இருந்தது.

இதனைத்தான் முதலாவது சிக்கலாக, பௌதீக வானின் ஒரு கருமேகக் கூட்டமாக கெல்வின் கண்டார். இச்சிக்கல் ஒருவராலும் அறியப்படாத, தனது ஆசிரியர்களினால் உதவாதவன் என்று கூறுமளவுக்கு இருந்த ஒருவரால் தீர்த்து வைக்கப்பட்டது. 1905ம் ஆண்டு இந்த இளம் விஞ்ஞானி, மைக்கல்சன் - மோர்லியின் பரிசோதனைச் சிக்கலுக்கு தெளிவான விளக்கத்தினைக் கொடுத்த போது விஞ்ஞான உலகமே பிரமித்தது. விஞ்ஞான உலகம் மாத்திரமல்ல, முழு உலகமுமே பின்னர் வியப்புடன் அந்த விஞ்ஞானியை, அல்போட் அயன்ஸ்ரைனை பார்த்தது. இம்முடிவில் இருந்து வந்ததுதான் பிரபலமான சிறப்புச் சார்புத் தத்துவமும் அதனைத் தொடர்ந்து பொதுச் சார்புத் தத்துவமுமாகும். எமது பேரண்டம் கொண்ட அமைப்பினை, வடிவினை, பேரண்டத்தினுள் உள்ள உருப்படிகளின் இயக்கங்களை எல்லாம் மாற்றிக் காட்டியது. முப்பரிமாண வெளியாக கருதப்பட்ட பேரண்டவெளியினை நாற்பரிமாணவெளி ஆக்கியதுடன் ஈர்ப்பிற்கும் புதியதொரு விளக்கத்தினைத் தந்தது. இது குவாண்ரம் பிறந்த கதை என்பதனால் சார்பியல் பற்றி அதிகம் நான் கூறவில்லை, கூறத் தேவையில்லை. இருப்பினும், மைக்கல்சன் - மோர்லியின் சிக்கலை எவ்விதம் அயன்ஸ்ரைன் தீர்த்து வைத்தார் என்பதனை அடுத்த இதழில் பார்ப்போம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks
SECOND CAREER

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று
உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்
Tuition Fees,Books,Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்
QUICK BOOKS,SIMPLY ACCOUNTING & ACCPAC
Classes By Experienced Instructors
இலவச ஆலோசனைகளுக்கு
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
(SHEPPARD & BRIMLEY) SCARBOROUGH
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

உங்கள் வீட்டிற்கு அருகாமையில் பரதநாட்டிய வகுப்புக்கள்

NIRUTHYA KALAKSHESTHIRA DANCE ACADEMY
*Ajax (Taunton & Middlecote) *Middlefield & Finch
*Markham & Elson *Mclevin & Neilson
*14th Ave. & 9th Line *9th Line & HooverPark
* Staines & Season Dr.
ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமார், பரதநாட்டிய கலைமணி, பரதகலாவித்தகி
யாழ். நுண்கலைப்பீடம், வட இலங்கை சங்கீதசபை
416.278.5345 / 416.754.9047

# அமரர் பண்டிதர்.கா. பொ. இரத்தினமும் திருக்குறள் மாநாடுகளும்




என் இனிய நண்பர்களே!

வாழ்த்துக்கள். நலம்பெறப் பிரார்த்திக்கிறேன். நமது இன அடையாளம். நமது இலக்கிய விழுமியங்கள். நமது இருப்பு. கருத்துநிலை, ஒற்றுமை, விழிப்புணர்வு, இரக்கம், உதவும் கரங்கள், உதவி செய்பவரைத் தடுக்கும் எண்ணத்தைத் தள்ளிவைக்கும் குணம். 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர். நிதி குறைந்தவர் காசுகள் தாரீர். அதுவும் மற்றோர் வாய்ச் சொல் அருளீர்' என்ற ஆன்மீகப் பண்பு எல்லாம் நம் நெஞ்சை நிரப்ப வேண்டும். இன்றைய காலத்து நமது இனத்தின் முக்கிய தேவைகள் இவை. நண்பா! இவை குறித்து நான் முன்பு எழுதிய கடிதங்களிலும் அவ்வப் போது குறிப்பிட்டிருந்தேன். திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய சூழ்நிலை நமக்கு. "செவியறிவுறுத்தல்" என்று இலக்கண நூலான நன்னூல் காண்டிகை குறிப்பிட்டதை மறந்திருக்கமாட்டாய்.

நமது சொந்த வாழ்க்கையின் நெருக்கடிகளும், அழுத்தங்களும் அங்கலாய்ப்பும் நமது மனத்தை இறுக்கி விடுகின்றன. இதனால் நமது இயல்பான நல்ல குணங்கள் குமைந்து போகின்றன. நெருக்கடிகளின் நெருடல்களால் நாம் எழுந்தமானமாக எதையாவது பேசி விடுகிறோம். பொருட்பஞ்சம் போல், சொற்பஞ்சமும் ஒருவறுமையே. ஒன்று கிடக்க ஒன்று சொல்லிச் சிக்கல்களில் மாட்டிக் கொள்பவர்களும் உண்டு. இப்படிச் சொல்லாமல் ஏன் அப்படிச் சொன்னோம் என்று வருந்துபவர்களும் உண்டு. பேச்சு முறைமையும் ஒழுங்கும் பல காரியங்களைத் தடுத்து விடுகின்றது. தவிப்பவர்களுக்குத் தண்ணீர் கொடுக்காத நிலையை நாம் உருவாக்கலாமா?

இதனால் பொய்மைகளை, பித்தலாட்டங்களை அனுமதிக்கச் சொல்கிறாயா? என்று கேட்பாய். அவற்றினை அனுமதிக்காதே. அவற்றினைப் புறம் தள்ளு. புனிதமானவற்றைக் கவனித்து உதவும் கரங்களை உற்சாகப்படுத்து. தீர்மானம் எடுக்க முடியாமல் திணறுகிறாயா? அப்பொழுது சும்மாயிரு "சும்மாயிரு சொல் அற என்றாலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே" என்று அன்று அருணகிரிநாதர் சொன்ன பொன்மொழியை நினைத்துக்கொள். அது உன்னையும் உன் இனசனத்தையும் காப்பாற்றும். நண்பா!

1960களில் நமது செல்வச்சந்நிதி முருகன் கோயில் வளாகத்தில் தியானத்தில் இருந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஒரு வெள்ளைக்காரச் சுவாமி தனது வலது கையில் தமிழால்! 'சும்மாயிரு' என்று எழுதி வைத்து தம்மைத் தரிசிக்க வருபவர்களுக்குக்கெல்லாம் காட்டிக் கொண்டிருந்தாரே! அது போல் 'சும்மாயிரு' என்று நமது நெஞ்சிலேயும் நாம் பதித்து வைக்க வேண்டும். இதன் பொருள் சிலவற்றைச் சுமக்க வேண்டிவரும். சிலநேரங்களில் இயங்க வேண்டிவரும். இவற்றினைத் திருவருளே நகர்த்தும். துணை நின்று வழிகாட்டும்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பற்றியும் திருக்குறள் மாநாடுகள் பற்றியும் எழுத வேண்டிவயர் எதையோ எழுதுகிறாரே என்று எண்ணுகிறாயா? அந்த இரு பொருளுமே இப்படி முன்னோட்டம் எழுதத் தூண்டின. ஈழத்தமிழ் அகத்தில் பண்டிதர் என்றால் தமிழ் இலக்கியம், இலக்கணம் சார்ந்த புலமையாளர் என்றும் கூடுதல் தகைமையாய் சமய சித்தார்ந்தவாதி என்றும் உருவாகியிருந்த மக்கள் அபிப்பிராயத்தை மாற்றி தமிழ் இனத்தின் அடையாளத்தையும், இனமான உணர்வுகளையும், இனத்தின் இருப்பு நிலையையும் கட்டி வளர்ப்பவர், காப்பவர் என்று 'பண்டிதர்' என்னும் பதத்திற்குப் புதிய பரிமாணம் கொடுத்தவரே பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள்.

ஏனைய தமிழ் இலக்கியங்கள் மூலம் தாம் பெற்ற பயிற்சியையும், தேர்ச்சியையும் திருக்குறள் என்ற உலக இலக்கியத்திற்கு உயர்வும் ஊட்டமும் கொடுப்பதற்காய் பயன்படுத்தி பண்டிதராகக் க. பொ. வைக் கணிக்க முடியும். இவர் ஆசிரியராய் விரிவுரையாளராய், மொழித்திணைக்கள ஆராய்ச்சித்துறைத் தலைவராய், 18 ஆண்டுகள் இலங்கைப் நாடாளுமன்றத்தில் உறுப்பினராகவும் கடமையாற்றியவர். ஆயினும் இவர் பெயரைச் சொன்னதும் திருக்குறளும், திருக்குறள் மாநாடுகளுமே தமிழ் மக்களுக்கு நினைவில் வரும் அந்த அளவுக்கு திருக்குறளோடு அத்துவிதமானவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம்.
மக்கள் அரங்குகளிலும், நாடாளுமன்ற அமர்வுகளிலும், திருக்குறளைப் பொருந்தும் இடங்களிலும் எல்லாம் பொருத்தி உரை நிகழ்த்திக் கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்பமுற வைப்பவர் பண்டிதர். தமிழ் மறையான (வேதம்) திருக்குறளுக்கு மாநாடு நடத்துவதற்காய் 1952ஆம் ஆண்டிலே தமிழ்மறைக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கி வருடாவருடம் ஈழத்தின் பல பாகங்களிலும் மூன்று நாட்கள் இரவும் பகலுமாய் மாநாடுகளை நடத்தி மக்கள் வாழ்க்கையில் திருக்குறளை நெறிமுறையாகக் கொள்ள வைத்தவர் பண்டிதர் கா. பொ. இ. ஊர்களிலே திருக்கோயில் திருவிழாக்கள் தொடங்கினால் மக்கள் அத்திருவிழாக்கள் முடியும் வரை திருவிழாச் சடங்குகள் பற்றியும், விரதவேளைகள் குறித்தும் பேசிக் கொண்டிருப்பார்கள். இது போன்றே பண்டிதரின் திருக்குறள் மாநாடு நடக்கும் ஊர்களில் மூன்று நாட்களும் பொதுமக்கள் இந்த மாநாடு குறித்தும் திருக்குறள் பற்றியும் பேசிக்கொண்டிருப்பார்கள்.

நண்பா!
நீயும், நானும் அரங்கிலும் அவையிலும் மாறி மாறி இருந்து திருக்குறள் கருத்துக்களை வியந்தும் விமர்சித்தும் மகிழ்ந்த நேரங்கள் நினைவிருக்கிறதா? 'ஒவ்வொரு நாளும் பத்துத் திருக்குறளை (ஒரு அதிகாரத்தை) மனம் பற்றி உரையோடு படித்துவிட்டு உடனே கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பாருங்கள். அது மலர்ந்து பூரித்துப் பொலிவடைந்து அழகாய் தென்படும்' என்று மண்டைதீவு மாநாட்டிலே உரையாற்றிய மட்டக்களப்புச் சொல்லின் செல்வர். செ. இராசதுரை 'புலவர் கூறியது கருத்தல்ல வள்ளுவரின் மருந்தும் விருந்தும்' என்று வியந்தமை நினைவிருக்கிறதா? இது குறித்து நீ கிண்டல் அடித்தமை எனக்கு நினைவிருக்கிறது. திருக்குறள் தென்றல் அடிக்கவும், கிண்டல் அடிக்கவும், தேன்மொழி சுவைக்கவும் நம்மை எல்லாம் மயக்கவும் தோன்றியதொல் சீர் இலக்கியம் தானே! நிற்க.

அதிகம் படித்தவர்கள் உட்பட சொற்ப படிப்புடைய பாமரனும் திருக்குறளைப் பேசப் படித்து அனுபவிக்க வழிவகுத்த பெருமை கா. பொ. இக்கு உண்டு. தமிழ் மறைக்கழகத்தின் திருக்குறள் மாநாடுகளின் மொத்த எண்ணிக்கை 250க்கும் மேல் வவுனியா, கிளிநொச்சி, வேலணை, மண்டைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, கீரிமலை, புங்குடுதீவு முதலிய இடங்களில் நடைபெற்ற திருக்குறள் மாநாடுகளில் பங்குபற்றி பட்டிமன்றம், கருத்தரங்கு, உரையரங்கு முதலிய வற்றில் கலந்துள்ளேன். கடைசியாக வேலணை பங்கிளாவடி முருகன் கோயில் முன்றலில் நடந்த மாநாட்டில் கலந்து கொண்டமை பசுமை நிறைந்த நினைவாய் உள்ளது.

நண்பா!
அண்மையில் கனடா கந்தசுவாமி கோயில் மண்டபத்திலே நடந்த பண்டிதர். கா. பொ. இரத்தினத்தின் நினைவு நிகழ்விலே ஒரு அன்பர் வேலணை மாநாட்டில் நடந்த கருத்து மோதல் பற்றிக் குறிப்பிட்டு அதிலே என்னையும் சுட்டி மாநாடுகளின் பெருமைகளையும் பண்டிதரின் தன்மானத் தன்மைகளையும் கூறி நமக்கு அந்த நாள் ஞாபகங்களை நினைவு படுத்தியமை திருவள்ளுவர் குறிப்பிட்ட 'நினைக்கப்படும்' என்ற உணர்வூற்றீத்தானே! திருக்குறள் மாநாடுகளில் நான் வலியுறுத்திச் சொன்ன இரண்டு திருக்குறள் பற்றிக் கூற வேண்டும். இது ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய கருத்து. நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் நமது சந்ததியினருக்கும் வாழ்வு கொடுப்பதற்கான வழிகாட்டல் வாழ்க்கையின் உயிர், உடமை, அடைக்கலம்.

துன்பப்படுபவர்களுக்கு கொடுப்பது பற்றியும் அப்படிக் கொடுப்பவர் கையைத் தடுப்பவர்கள் குறித்தும் கூறிய குறள்கள். மனிதர்களின் இதயத்தில் இருக்க வேண்டிய இரத்தினக் கற்கள் என்பேன்.
'அன்று அறிவாம் என்னாது அறம் செய்க மற்று அது பொன்றுங்கால் பொன்றாத் துணை' என்பது ஒரு குறள்.

ஒருவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று மனம் எண்ணினால் உடனே செய்து விடவேண்டும். பிறகு பின்னால் என்று தள்ளிப் போட்டால், அதனை மறந்து விடுவோம். இல்லையேல் உதவக் கூடிய இருப்பு (பணம்) நம்மிடம் இல்லாமல் போய்விடும். தேவை இல்லை எனவும் நமது மனம் மாறி உணரும். அது வீண் என்று வேறு ஒருவர் கொடுக்கவிடாமல் தடுப்பார். உதவும் எண்ணம் கடவுளால் வந்தது. அதனைத் தடுக்கும் குணம் சாத்தானால் வருவது. உதவும் நல்லகாரியத்தை உடனே செய்தால் அது நாம் பொன்றுங்கால் அதாவது தளர்ந்து போகும் காலத்திலோ அல்லது சாகும் காலத்திலோ அது சாகாத துணையாய் வந்து நிற்கும் என்கிறார் வள்ளுவர்.

நண்பா!
இக்குறளோடு நெருக்கமான கருத்துடைய இன்னொரு திருக்குறள் நம்மைப் பயப்படுத்தி நன்மை தரும் கருத்தைக் கூறுகின்றது.
'கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூம் உண்பதூம் இன்றிக் கெடும்' என்கிறது.
இது நெருப்பால் சூடு போட்டுக் குறிகாட்டுகிறது. பிறருக்கு இரங்கி ஒருவர் உதவி செய்வதைச் சகிக்க முடியாமலோ, பொறுக்க முடியாமலோ இன்னொருவர் தடுப்பாராயிருந்தால், அவர்; தமக்கு உதவி செய்ய ஒருவர் இல்லாமலும், தமது சுற்றத்தவர்கள், மனைவி, கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்னும் இரத்த உருத்தினர் உடுக்க வழியின்றியும், உண்ண வழியின்றியும் கெட்டு அழிவார்கள் என்று திருவள்ளுவர் எச்சரிக்கிறார்.

இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)



# கலையரசி - 2011

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா 2011 ஆம் ஆண்டுக்கான 'கலையரசி' விழாவை Chinese Cultural Hall இல் ஒக்ரோபர் மாதம் 08 ஆம் திகதி வெகுசிறப்பாகக் கொண்டாடியது.

விழா மங்கல விளக்கேற்றலுடன் குறித்த நேரத்தில் ஆரம்பமானது. தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அடுத்து அக வணக்கம் இடம் பெற்றது. விருந்தினரை வரவேற்கும் நம் பண்பாட்டிற்கு ஏற்ப திரு. கிருஸ்ணானந்தன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து பரதகலாவித்தகர் குமுதினி ஸ்ரீகாந்தன் அவர்களின் மாணவர் களின் வரவேற்பு நடனம் சிறப்பாக, இடம் பெற்றது. தொடர்ந்து பொன். பாலேந்திரா அவர்கள் தலைமை உரை வழங்கினார். அடுத்த நிகழ்ச்சியாக இசைச்சொற்பொழிவு இடம் பெற்றது. மைதிலி தயாநிதி அவர்கள் 'நக்கீரன்' கதையை இசையோடு கலந்த கதையாக இசைச்சொற்பொழிவு ஆற்றினார். சபையோரின் ஒரு முகப்பட்ட பாராட்டையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து அணிசேர்கலைஞர்கள் பிரபல வயலின் வித்துவான் தனதேவி மித்ரதேவா, மிருதங்க ஞானவாருதி ஸ்ரீ வாசுதேவன் இராஜலிங்கம் மற்றும் கடம், கெஞ்சிரா, மோர்சிங், வாசித்த மிருதங்க சேஸ்திர மாணவர்கள் ஆகியோரின் பின்னணியில் இன்னிசை வேந்தர் திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்களின் இசைமழையில் சபையோர் நனைந்து மெய்மறந்தனர். இசைக்கச்சேரியை அடுத்து

சியாமா தயாளன் அவர்களின் மாணவிகளின் நடனம், மனதைக்கவரும் வகையில் அமைந்திருந்தது.

செல்வி. யாழினி ராஜகுலசிங்கம் அவர்கள் இரு பாடல்களுக்கும் மிகச்சிறப்பாக நடன மாடி அவையினரின் பலத்த கரகோஸத்தையும் பாராட்டையும் பெற்றுக்கொண்டார். ஸாமினி செல்வக்குமார், அஸ்வினி செல்வக்குமார் சகோதரிகளின் நடனம் ரசிக்கும்படி இருந்தது.

கலையரசியின் பிரதம விருந்தினர் இந்துவின் மைந்தன் பொறியியலாளர் சந்திரக்குமார் அவர்கள் கலையரசி விழாவின் சிறப்புக்கள் பற்றி தெளிவாகவும் இடம் காலம் அறிந்த பேச்சாகவும் சபையைக்கவரும் வகையிலும் சிறப்பு உரையை ஆற்றினார்.



**- ரஞ்சி கதிர் -**

மாறன் செல்லையா அவர்களின் தயாரிப்பில் இடம்பெற்ற 'இடைவெளி' என்னும் நகைச்சுவை நாடகமும் சபையினரை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

இரண்டாவது நாடகமாக, யாழ். இந்துமகளிர் கல்லூரி பழைய மாணவி தேவகி முனீஸ்வரராசா அவர்கள் நெறியாள்கையில் இடம்பெற்ற 'பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும்' என்னும் நாடகம், நகைச்சுவை உணர்வோடு எம்மத்தியில் இருக்கும் சமூகப்பிரச்சினையை எடுத்துக் கூறும் பயன் மிக்க நாடகமாகவும் அமைந்திருந்தது. இதில் பங்கு பற்றிய அத்தனை கலைஞர்களும் மிகச்சிறப்பாக அவரவர் பாத்திரங்களுக்கு ஏற்ப நடித்து அவையோர் பாராட்டையும் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக - கிருஸ்ணானந்தன், காயித்திரி ஸ்ரீகதிர்காமநாதன் ஆகியோர் மிகச்சிறப்பாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்கள்.

யாழ். இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் - கனடா நடத்திய மாணவர் களுக்கான கணிதம், பொதுஅறிவு, தமிழ் போட்டிகளுக்கான சான்றிதழ்களும் இவ் வைபவத்தில் வழங்கப்பட்டன.

யாழ். இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடாவின் செயலாளர். தயாநிதி அவர்கள் விழாவை சிறப்பாக நடத்த



உதவிய அத்தனை பேருக்கும் சிறப்பான முறையில் உணர்வுபூர்வமாக நன்றி கூறினார்.

'நவநாகரிக உடைப்பாணிக்காட்சி' நிகழ்ச்சி நிரலில் போடப்பட்டு இருந்தபோதும் குறித்தபடி நடைபெறவில்லை என்பது சிறு குறைபாடாக இருந்தாலும் ஒட்டுமொத்தமாக கலையரசி விழா புதுப்பொலிவுடன் தரமான நிகழ்ச்சிகளைக்கொண்ட விழாவாக இருந்தது என்பதை சபையோரின் மலர்ந்த முகங்களும் அவர்களின் விமர்சனங்களும் உறுதிப்படுத்துவதாக இருந்ததை நன்கு அவதானிக்க முடிந்தது.

# கண்ணதாசன்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால், அண்ணாவுக்கு அப்பாவின் குழந்தைகளில் அவரது பெயர் வைத்த தம்பியைத்தான் மிகவும் பிடிக்கும். அப்புறம், ஒவ்வொரு முறை வீட்டுக்கு வரும் போதும்



அவனைப் பற்றி விசாரிப்பார். காங்கிரஸுக்கு அப்பா போன பிறகும் அந்தத் தம்பி மீதுள்ள பாசம் அண்ணாவிடம் குறையவில்லை. கடைசியில் மருத்துவமனையில் படுக்கையில் இருக்கும் போது அப்பாவிடம் சைகை யிலேயே, 'என் பெயர் வைத்த பையன் எப்படி இருக்கிறான்?' என்று கேட்டார். அப்போது அப்பா சத்தம் போட்டுக் கதறி அழுதுவிட்டார். காங்கிரஸில் அப்பா சேர்ந்த பிறகு, காமராஜர் அடிக்கடி வீட்டுக்கு வர ஆரம்பித்தார். காமராஜருக்கு எங்கள் வீட்டு அசைவச் சாப்பாடு மிகவும் பிடிக்கும். வீட்டுக்கு வர முடியாத தினங்களில், "கண்ணதாசன் வீட்டிலிருந்து சாப்பாடு வாங்கிக் கொண்டு வா" என்று அவரது உதவியாளர் வைரவனிடம் சொல்லிவிடுவார். காமராஜர் யாரிடமும் இப்படி உரிமையாகக் கேட்கக்கூடிய ஆள் இல்லை. எங்கள் அப்பாவிடம் கேட்கலாம் என்று அவருக்குத் தோன்றியதற்கு அப்பா மீது அவர் வைத்திருந்த அன்பு மட்டும்தான் காரணம். அனேகமாக காமராஜருக்கு நண்பர்கள் வீட்டுச் சாப்பாடு என்று போனது எங்கள் வீட்டுச் சாப்பாடு மட்டுமாகத்தான் இருக்கும்.

வைரவன் தொலைபேசியில் அம்மாவிடம் சொல்லி விடுவார். ஆனால், காமராஜருக்கு அசைவம் பல்லில் சிக்கிக்கொள்ளும். எனவே அம்மா, ஆட்டுத் தலைக்கறியை எலும்பை நீக்கி, நன்றாக நைத்து காமராஜருக்கு என்று தனியாகச் செய்து கொடுத்து அனுப்புவார். ஒருநாள் நான் சாப்பாடு எடுத்துக்கொண்டு போனேன். காமராஜர் வராண்டாவில் ஈஸி சேரில் கைகளைத் தூக்கி பின் தலையோடு சேர்த்து, விட்டத்தைப் பார்த்துக்கொண்டு படுத்திருந்தார். நான் போய் நின்றதும், "என்ன?" என்று கேட்டார். "சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்" என்றேன். வைரவனிடம், "வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார். திரும்பும்போது வைரவன், காமராஜரிடம், "சாப்பாடு கொண்டு வந்திருக்கிறது கவிஞரோட பையன்" என்று சொல்லிவிட்டார். அவ்வளவுதான் காமராஜர் என்னைப் பக்கத்தில் கூப்பிட்டு தோளோடு சேர்த்து அணைத்துக்கொண்டார். அப்போது தான் காமராஜர் கை எவ்வளவு நீளம் என்பதைத் தெரிந்துகொண்டேன். என் உடம்பை ஒரு சுற்றுச் சுற்றி வந்திருந்தது அவர் கை. "எங்கே படிக்கிறே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார். "பச்சையப்பன் கல்லூரியில்" என்று சொன்னேன். "காலேஜ் இருக்கும்போது சாப்பாட்டைத் தூக்கிக் கொண்டு ஏன் அலையிறே. இனிமெல் காலேஜுக்கு மட்டம் போட்டதா நான் கேள்விப்படக் கூடாது. ஒழுங்காப் படி, போ" என்றார். நான் புறப்படத் தயாரான போது, திரும்பவும் பக்கத்தில் கூப்பிட்டு அணைத்துக் கொண்டார். "நல்லா படிக்கணும். அனேகமாக உங்கள் அப்பா உங்களுக்கு விட்டுட்டுப் போகப்போறது இந்தப் படிப்பு மட்டுமாகத் தான் இருக்கும்" என்று சொன்னார்.

(காமராஜருக்காக கண்ணதாசன் பார்த்த தேர்தல் வேலைகள், எம்.ஜி.ஆர். கொடுத்த பதவி, கண்ணதாசனுக்கு பிரியமான விஷயங்கள் ஆகியவையுடன் அடுத்த இதழில் முடியும்)

## கனடியத் திரைப்படக் கலைஞர்கள் ஒன்றுகூடல்

கனடாவில் முழுநீளத் தமிழ்த் திரைப்பட முயற்சி 1991 இலிருந்து நடைபெற்றுவருகிறது. இதுவரை 37 திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. இவற்றில் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், நடிகர்கள், நடிகையர்கள், இசையமைப்பாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என பல்நூற்றுக்கணக்கான திரைப்படக் கலைஞர்கள் பங்குபற்றியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் ஒன்றுகூட்டும் முயற்சி இதுவரை நடை-பெற்றதில்லை. அம்முயற்சியை தற்போது கனடியத் தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு மையம் மேற்கொண்டுள்ளது. இவ்வொன்றுகூடல் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆறாந் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு லாகொண்டோலா மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. திரைப்பட அபிமானிகள் எவரும் இதில் கலந்துகொள்ளலாம் என இவ்வமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

தொடர்புகளுக்கு: முரளி - 416-731-4953/ திவ்யராஜன் - 416-832-5230

233

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



……காக்க காக்க.. ……
கையில் வேலால் எனைக்காக்க..வென்று
வர வர வேலாயுதனார் வருக

கந்த சஸ்டி எப்பவெண்டு கனபேருக்குத்… தெரியாது
இந்தமுறை கந்தசஸ்டி எத்தினை நாளென்று வாக்குவாதம் ஒருபக்கம்
5 நாளோ 6 நாளோ?
சரணக்கமலாலயத்தை ஒரு நிமிடம் உச்சரித்தால் போதாதா

ஒருமாத லீவென்று யாழ்ப்பாணம் போய் இன்னும் அங்கேயே நின்று செல்போன், ஸ்கைப் மூலம் இரவு பகல் பாராமல் செக்கண்ட் புளோர் செல்லம்மா சில விடயங்களை நேர்முக வர்ணனை செய்வா.



இண்டைக்கு வேலாயுதம் படம் றிலீஸ் கட்டவுட்டுக்கு பெடியள் பாலூத்தி ட்றம் அடிச்சு றோட்டெல்லாம் ஒரே கொண்டாட்டம் என

யாரோ வீட்டிலிருந்த ரூபனின் லப்ரொப்பில் ஸ்கைப்பில் கதைத்தது உலகருக்குக்கோபம் வரவில்லை. ஆனால் அதிகாலை 3 மணிக்கு எல்லாரையும் நித்திரையால் எழுப்பி கதைத்ததுதான் பிரச்சனை.

நித்தம் நித்தம் மாறுகின்ற தெத்தனையோ நெஞ்சில் நினைப்பதிலே நடப்பதுதான்… எத்தனையோ?

யாழ்பாணத்திலும் மற்றும் தமிழ்ப்பகுதிகளிலும் விஜயின் வேலாயுதம் படத்திற்கு பாலாபிசேகமும் வீதியெல்லாம் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்.
ஆனால் கோவில்களில் கந்தசஸ்டி நினைத்துப்பார்ப்பவர் குறைவு…?

'பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்….'
ஆனால் வேலாயுதம் படத்திற்கு இந்தியாவிலும் இலங்கையிலும்?
வேலாயுதம் பட கட்டவுட்டிற்கு பக்தர்கள் (மன்னிக்கவும்) ரசிகர்கள் பாலாபிசேகம் செய்கிறனர்...

செல்லடி காலம் முடிஞ்சு இப்போ டறம்ஸ் அடிகாலம்.



நாடகங்கள் பார்த்து சோம்பல் முறித்தபடி ஆட்டிலறி அன்னம்மா தொடங்கினா.. உலகண்ணை!
தமிழர் பிரச்சினை ஆங்கிலேயர் சுதந்திரம் என்று சொல்லிப்போன காலத்திலிருந்து பிரச்சினைகள் கிராமம் கிராமமாகத் தொடங்கி கிறனைட், குண்டு, ஆட்டிலறியென மாறி சுற்றியுள்ள நாடெல்லாம் சுற்றிவளைக்க உதவி, சுட்டுத்தள்ளியது, சுடாமல் பிடித்தது, உயிரோடிருப்பது, இருந்தாலும் எங்கிருக்கிறார்களெனத் தெரியாமல் இருப்பது என பலதரப்பட்ட பிரச்சினைகள் அமெரிக்காவரை பேச பேசவேண்டியிருக்கிறது என பிரசங்கம் செய்துமுடித்தா ஆட்டிலறி அன்னம்மா.

இத்தனை பிரச்சினைக்குள்ளும் நிர்மலா ரத்தினசபாபதி தொகுத்து வழங்கிய கவிஞர் வாலி பற்றிய நிகழ்ச்சி சிறப்பாக ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தது. சென்னை வந்து வேலையின்றி ஊருக்கு திரும்பிக்கொண்டிருந்த வாலிக்கு கவிஞர் கண்ணதாசனின் பாடல் மனதில் மாற்றத்தைக்கொடுத்து வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது பற்றி ஒலித்துக்கொண்டிருந்தது.

நாம் கனடாவில் வாராவாரம் பல நிகழ்ச்சிக்குச் சென்றுவந்தாலும் கம்பன் என்ன சொன்னார், வள்ளுவர் என்ன சொன்னார், அண்ணா என்ன சொன்னார் என்று கேள்விகளாக பதிலின்றி சொற்பொழிவுகளைக் கேட்கின்றோம். ஆனால் 30 வருடங்களுக்கு மேலாக நம்மிடையே வாழ்ந்த, வாழ்கின்ற பல கதாசிரியர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் பேசிய அல்லது அவர்களது கருத்துக்களை மேற்கோள் காட்டத்தவறிட்டோம், தவறுகின்றோம்.




எப்பொருள் யார்வாய் …..
வாழ்ந்தவர் கோடி மடிந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்?



ஞாபகம்..வருகிறதா நவம்பர்






1. எம்.கே தியாகராஜபாகவதர் நினைவு தினம்
2. அறிஞர் பெர்னாட் சோ நினைவு தினம்
4. ஐப்பசி வெள்ளி
5. நேர மாற்றம் (3மணி 2மணியாக மாற்றல்)
7. திருமுருக கிருபானந்த வாரியார் நினைவு தினம்
11. ஐப்பசி வெள்ளி (கடைசி வெள்ளி)
11. REMEMBERENCE DAY
12. நாதஸ்வரச்சக்கரவர்த்தி ராஜரட்னம் நினைவு தினம்

# ரேக்கியில் நடந்த பூகம்பத்தில் 1000 பேர் மட்டில் இறந்துள்ளனர்!

ஒக்டோபர் 23, 2011 இல் 7.2 ரிச்சட் அலகு பூமி நடுக்கம் ரேக்கியின் கிழக்குப் பகுதியைத் தாக்கியது. இதனால் பல கட்டிடங்கள் இடிந்து விழுந்ததால் பலர் இடிபாடுகளுக்கு இடையே அகப்பட்டு இறந்தும் காயங்களுடனும் அகப்பட்டுள்ளார்கள். இதற்கு முன்னர் ரேக்கியில் பாரிய பூகம்பம் டிசெம்பர் 1939 இல் ஏற்பட்டு அதில் 160,000 இறந்தது குறிப்பிடத்தக்கது. ரேக்கியின் கீழ் இரண்டு பூமித் தகடுகள் (Tectonics Plate) இருப்பதனால் அப்பிரதேசத்தில் பூமி நடுக்கமும் எரிமலைகள் வெடிப்பதற்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

# மூலநோயும்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

உணவு, பகல் உறக்கம், அல்ககோல் (மது) நீக்குதல் நன்மை பயக்கும்.

இந்த மூலரோகம் ஆனது தொல்லை தரும் வியாதிகளில் ஒன்றாகும். குதத்தைச் சுற்றியுள்ள இரத்த நாளங்கள் மீளும் தன்மையை இழந்து விரிந்து போகும் நிலையைக் கொடுக்கும். மலக்குதத்தின் சௌவுப்பகுதியால் உள்மூலத்தின் மேல் மூல இரை தோலினால் மூடப்பட்டிருக்கும். வெளிமூலம், கீழ்மூல தோலினால் மூடிய நிலையில் காணப்படும். இதனால் முக்கி மலம் கழிப்பதினால் இரத்த நாளங்கள் தாக்கப்பட்டு இரத்தம் கசிந்தவண்ணம் இருக்கும். எனவே முக்கும் நிலையை தவிர்த்தல் நன்று.

அடுத்து ஒரே இடத்தில் நீண்ட நேரம் உட்காருதல், வாகனம் ஓடுதல், அளவு மீறிய உடற்பயிற்சி, யோகாசனம் தவிர்க்கப்படுதல் வேண்டும். மேலும் பெண்கள் கருவுற்ற காலத்தில் ஆசனப்பகுதி இரத்த நாளங்கள், கருப்பையுடன் அழுத்துவதினாலும் கட்டி கழலையாலும் அழுத்தம் ஏற்பட்டு மூலவியாதி ஏற்படலாம். ஆண்களைப் பொறுத்தமட்டில் புரஸ்ரேட் (Prostate gland) சுரப்பி வீங்குவதினால் நீர் தாரையில் தடைநிலை ஏற்பட்டு சிறுநீர் கழிக்கும் போதும் சிரமப்பட்டு சிறுநீர் கழிக்க முக்கும் போதும் மூலநோய் வர இடம் உண்டு. வெளிமூலம் மலம் கழிக்கும் போது வெளியே தெரிந்து உள்சென்று மறைந்து விடுவதும் உண்டு. நாள்பட்டபின் மூலம்வந்து வெளியில் தங்கிவிடும். இதனை நாம் கையால் தள்ள உள்சென்று விடும். சில காலத்தின் பின் மலம் கழிக்காத போதும் வெளியில் கழலைபோல் தங்கிவிடும். இந்த நிலை காணும் போது அசௌகரிய நிலையுடன் காணப்படுவர். இந்நிலையில் அறுவைச் சிகிச்சைகள் (சத்திரசிகிச்சை) செய்து கொள்ள முடியும். இதற்கு தங்கள் குடும்ப வைத்தியர்களும் தகுந்த ஆலோசனைகளை கூறிக் கொள்வார்கள். அதிகம் சிந்திக்க வேண்டியதில்லை.

பெரும்பாலும் உணவில் நார்ச்சத்துப் பொருட்கள் பாவித்தல் வேண்டும். தோல் நீக்காமல் அப்பிள்பழம் பொன்னாங்காணி, வல்லாரை, வெந்தயக்கீரை போன்றவை அத்திப்பழம், திராட்சை, பழச்சாறுவகை, கருணைக்கிழங்கு, வெண்டிக்காய், பப்பாளிப்பழம் பாவிப்பதுடன் தரமுள்ள யோகாசனம், நடைப்பயிற்சி, உடற்பயிற்சி முக்கியமாகும். இளஞ்சூட்டுடன் நீராடுதல் வேண்டும்.

மாதுளம் பிஞ்சு எடுத்து நன்கு அரைத்து மோரில் இட்டு அருந்த வெப்புத்தன்மை அகன்று மூலவியாதி தணியும். பாலும், பழமும் சேர்த்து அன்னம், காலை, மாலை பாவித்து வருதல் நன்று அல்லது இளநீர் பாவிக்கலாம். அடுத்து கடுக்காய் நெல்லிகாய். தான்றிக்காய் சேர்ந்த திரிபலா சூரணம் காலை, மாலை பாவித்து வந்தால் பயன் அடையலாம். எதற்கும் வைத்தியர்களின் ஆய்வின் பின் அவர்களின் ஆலோசனையின் படி நடப்பது மிக நன்று.



# யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# வெளிவந்துவிட்டது!



பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
**மருத்துவ கைநூல்.**
கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**, *5215 Finch Ave. E, #201*

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# I Phone - 4S



அப்பிள் நிறுவனத்தின் புதிய அறிமுகமாக I Phone - 4S ஒக்ரோபர் 2011 இன் ஆரம்பத்தில் வெளிக் கொண்டு வரப்பட்டது. முதல் தடவை 2 Phone 4s வெளிவரும் போது உலகின் 7 முன்னணி நாடுகளான US, Canada, Japan, France, Germany, Great, Britan மற்றும் Australia ஆகிய நாடுகளில் ஏக காலத்தில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இரு நிறங்களில் மட்டுமே வெளிவந்தது. கறுப்பு மற்றும் வெள்ளை. இதற்கு முந்தைய மாதிரி (Model) உடன் ஒப்பிடும் போது வேகமான Processor ஐயும், Beefed-Up கமராவையும் கொண்டுள்ளது. மற்றும் புதிய Operation System இல் வெளிவந்துள்ளது. மேலும் Futuristic Voice Activated Service உம் அடங்கியுள்ளது.

இருந்த போதிலும், Apple நிறுவனத்தின் மிகத்தீவிர விசுவாசிகளிற்கு இந்த 4S சந்தோஷத்தை கொடுக்கவில்லை. காரணம், இதற்கு முந்தைய Model - Apple Modernly Designed I Phone 5 Verson வந்து ஒரு வருடம் ஆகிய நிலையிலும் சந்தைக்கு வராதது ஆகும். இருந்த போதிலும் கடைகளிற்கு முன்பாக முந்தைய இரவு 11 மணியிலிருந்து காவல் நின்று I Phone 4S ஐ வாங்கியுள்ளார். இதன் விலை $649. (2 வருட Contract இருந்தால் அமெரிக்காவில் $200 இற்கு பெறலாம்). இந்த I Phone வெளியிட்டு மறுநாள் ஒக்ரோபர் 05, 2011 அதன் நிறுவனர் Steve Jobs காலமாகிவிட்டார். சிலர் கூறுவதுபோல 4S என்பது Steve ஐ குறிப்பதாகக் கூட கொள்ளலாம்.

இதில் பாவிக்கப்படும் Chips, Qualcomm Inc. மற்றும் Toshiba போன்ற Small Semiconductor Company களால் உருவாக்கப்பட்டன. ஒக்ரோபர் மாதக் கடைசிக்குள் மேலும் 22 நாடுகளில் விற்பனைக்கு வரவுள்ளது. இதுவரை இத்தொலைபேசியைப் பெற்றுக்கொள்வதற்கான முன்பதிவு ஒரு மில்லியனைத் தாண்டியதாக தெரிய வருகிறது.

Apple நிறுவனத்தின் பணவருவாயை அள்ளித்தரும் பெறுமதியான பொருளாக I Phone 4S வெளிவந்துள்ளது.

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666



OPEN HOUSE
20 Jonas Millway, Stouffville
November 5 2011
Saturday - 2pm - 4pm








Bedrooms: 4 Washrooms: 3
Features
• Stunning beautiful brand new house.
• Never lived in.
• Hardwood floor throughout the main floor
• Close to all amenities
• Double door entrance
• Brand new stainless steel appliances
• Laundry room on second floor
• New blinds for all windows
• Updated front door
HomeLife/GTA Realty Inc., Brokerage
Independently Owned and Operated
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S OC2
Office: 416-321-6969 Fax: 416-321-6963
Raj Paramasamy
Sales Representative
Cell: 416-587-1619
Email: raj.paramasamy@hotmail.com



# திரை விமர்சனம் - வேலாயுதம்



‘ரீமேக்’ புகழ் இயக்குநர் ‘ஜெயம்’ ராஜா, முதல்முறையாய் தன் சொந்த கற்பனைத் திறன் மேல் நம்பிக்கை கொண்டு எடுத்திருக்கும் படம். எனவே, கொஞ்சம் ரிஸ்க் சமாசாரம்தான். ஆனால், படத்தின் ஒரு வரிக் கதையை தெலுங்கு படமான ‘ஆசாட்’இல் இருந்து எடுத்து தப்பியிருக்கிறார் நம்மையும் காப்பாற்றுகிறார்! ஜெனிலியா ஒரு பத்திரிக்கை ஆரம்பிக்கிறார். உள்துறை அமைச்சரின் விஷயம் என்று தெரியாமல் ஒரு செய்தியை புலனாய்வு செய்யும் காரியத்தில் அவரும் அவரின் நண்பர்களும் ஈடுபடுகிறார்கள். அதில் ஜெனிலியாவின் நண்பர்கள் கொல்லப்படுகிறார்கள். ஜெனிலியா கத்திக் குத்தோடு உயிர் பிழைக்கிறார். ஆனால், அந்த ரவுடிகள் மூலமாக சென்னையில் பல இடங்களில் வெடிகுண்டு வைக்க திட்டமிடப்பட்டுள்ளது தெரிகிறது. ஒரு விபத்தில் ரவுடிகள் எரிந்து போயிருக்க, அப்போது ஜெனிலியா அவர்களை கொன்றது ‘வேலாயுதம்’ என்று ஒரு கற்பனைப் பெயரை எழுதி வைக்கிறார். அடுத்து நடக்கவிருக்கும் வெடிகுண்டு திட்டத்தையும் எழுதி வைக்கிறார். இன்னொரு பக்கம், கிராமத்தில் தன் தங்கை மீது அதீத பாசமுள்ள அண்ணனான விஜய், அப்பா அம்மா இல்லாத குறையைப் போக்கும் விதத்தில் தங்கையை அன்பும் அக்கறையுமாக வளர்க்கிறார் விஜய். தங்கையின் திருமணத்திற்காக சென்னையின் ஒரு பெரிய கம்பெனியில் சீட்டு போட்டிருக்கிறார். அதை எடுப்பதற்காக சென்னை புறப்படுகிறார். சென்னையில் அடுத்தடுத்து வைக்கப்படும் வெடிகுண்டுகள், எதேச்சையாக விஜய்க்கே தெரியாமல் அவரால் செயலிழக்கப்பட, ‘வேலாயுதம்’ மக்களிடையே ஒரு சூப்பர் ஹீரோவாக பார்க்கப்படுகிறான். ஆனால், இது பற்றி தெரியாமல் விஜய் அப்பாவித்தன மாய் ஜாலியாய் சுற்றிக்கொண்டிருக்கிறார். ஒரு கட்டத்தில் அவர் நம்பி பணம் கட்டிய சீட்டுக் கம்பெனி பணம் கொடுக்காமல் ஏமாற்றிவிடுகிறது. நொந்து போயிருக்கும் நேரத்தில் ஜெனிலியா மூலம் தன்னைத்தான் எல்லோரும் வேலாயுதம் என்று நம்பியிருக்கிறார்கள் என்ற உண்மை விஜய்க்கு தெரிய வருகிறது.

அதன்பிறகு வேலாயுதம் அவதாரம் எடுத்து, தீவிரவாதிகளிடம் இருந்து விஜய் நாட்டை காப்பாற்றுவதுதான் மீதிக் கதை. முதலாவது பாதி அட்டகாசமான சிரிப்பு வெடிகளுடனும் அதிரடி பாடல்களுடனும் தொய்வு இல்லாமல் செல்கிறது. விஜய், சந்தானம், பாஸ்கர், சூரி, சிங்கமுத்து என்று அனைவரும் தங்கள் பங்கிற்கு கலக்கியிருக்கின்றனர். இடைவேளை வரை கதையேயில்லாததால் நகைச்சுவை கலாட்டாக்களை நம்பி சுறுசுறுப்பா நகர்த்தியவர்கள், அய்யயோ கதை சொல்லணுமே என்று இரண்டாம் பாதியை தீவிரமாக விவாதித்திருப்பார்கள் போல. அதன் பலன் பக்கா சொதப்பல். இந்தியாவில் குண்டு வெடிப்புகள் நடத்த திட்டமிடும் முஸ்லீம் தீவிரவாதி அவருக்கு இந்திய அரசியல்வாதியுடன் (உள்துறை அமைச்சர்) தொடர்பு என்ற அதே வழக்கமான ஃபார்முலா! முழுக்க முழுக்க விஜய்யை நம்பி படத்தை எடுத்திருக்கிறார்கள். அவரும் குறை சொல்ல முடியாதபடி செய்திருக்கிறார். ‘சிக்ஸ் பேக் ஃபீவர்’ விஜயையும் தொற்றிக்கொண்டு விட்டது. கடைசியில் உடம்பை முறுக்கேற்றி சண்டை போடுகிறார். ஹன்சிகா மோத்வானிதான் கதாநாயகி. கவர்ச்சியுடன் அழகாகத்தான் இருக்கிறார். நடிப்புதான் வரமாட்டேன் என அடம் பிடிக்கிறது. அவருக்கு பதிலாக ஜெனிலியா ஜொலிக்கிறார். வழமைபோல் அழகாக அடக்கமாக அசத்துகிறார்.

எம்.எஸ்.பாஸ்கர், சரண்யா மோகன், பரோட்டா சூரி, பாண்டி, சந்தானம் என்று ஏகப்பட்ட துணை நடிகர்கள் பட்டாளம். எல்லோருமே அவர்களுக்கு கொடுத்த பாத்திரத்தில் நிறைவாக செய்திருக்கிறார்கள். விஜய்க்கு அடுத்து படத்தை விறுவிறுப்பாக வைத்திருப்பவர் சந்தானம் தான். விஜய் சீட்டு கம்பெனியில் போட்ட பணத்தை கைப்பற்ற சந்தானம் தீட்டும் திட்டத்தால் படம் முழு நகைச்சுவைப் படமாக மாறுகிறது. ஜாலியாக போகிற போக்கில் சந்தானம் பேசும் வசனங்கள் படத்துக்கு பலம். கடைசியில் அவர், “ஏம்பா இதை மூன்றாவது சீனிலேயே சொல்லியிருக்க கூடாதா?” என்று விஜயிடம் கேட்பது அக்மார்க் சந்தானம் காமெடி. படத்தின் இன்னொரு பலம் விஜய் ஆண்டனி. வழக்கமாய் சத்தமான குத்துப் பாட்டுகளை



நம்புகிறவர் இம்முறை கொஞ்சம் அடக்கி வாசித்து மெலடியில் நின்றிருக்கிறார். ‘முளைச்சு மூணு இலை’, ‘ரத்தத்தின் ரத்தமே’, ‘மாயம் செய்தாயோ...’ ஆகிய பாடல்கள் பாடல்கள் படம் வெளியாவதற்கு முன்பே பிரபலமாகிவிட்டன. இதில் ‘மாயம் செய்தாயோ’ காட்சிப்படுத்தப்பட்டிருந்த விதத்திலும் நன்றாக இருக்கிறது. ப்ரியனின் ஒளிப்பதிவு பளிச். சொந்த கற்பனை என்று சொல்லிவிட்டு, தங்கை செண்டிமெண்டுடன் தெலுங்கு ‘ஆஷாட்’, ‘கந்தசாமி’, ‘அந்நியன்’ மூன்றையும் கலந்துக்கட்டி அடித்திருக்கிறார்கள்.

விஜய் ரசிகர்கள் பார்க்கலாம் கொண்டாடலாம்!

**பிலிம்நியூஸ் கிருஸ்ணன்**








